CANADA ULAHATHAMILAR

கனடா

உலகத்தமிழர்

சர்வதேச தமிழர் பத்திரிகை

www.worldtamils.com

குரல் 570 | மே 17, 2019 - மே 23, 2019 | இலவசம்!!



தமிழினத்தின் தாகம் தமிழீழத் தாயகம்

கனடா உலகத்தமிழர் இதயதாகம்

Editorial

மே 17, 2019 – மே 23, 2019

பெருந்துயர் வழியும் பொழுதுகள்

பேரினவாதம் எம்மீது திணித்த காலத்துயரின் ஆழ நினைவுகளைச் சுமந்து செல்லும் துயர வரலாறு பத்து ஆண்டுகளைத் தொடுகின்றது.

அந்தப் பேரவலக் காட்சிகள் நெஞ்சில் நிறைகின்ற போதெல்லாம் உணர்வுகள் வலிக்கின்றன. இயலாமை உள்ளிருந்து உறுத்துகின்றது.

30க்கு ஆண்டுகளுக்கு மேலாக உரிமைகளுக்காகத் தமிழர்கள் தொடுத்த போராட்டத்தில் இதுவரை ஏறக்குறைய ஒன்றரை இலட்சம் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட போராளிகள் இறந்திருக்கின்றனர். இந்த உயிரிழப்புகள் யாவும் தமிழரின் அடிமை வாழ்வு மறுப்புப் போராட்டத்தின் ஈகங்களாகவே நோக்கப்பட வேண்டியன.

இன்றைய சூழலில், இனப்படுகொலை என்ற வலிமையான, எதிரிகள் அஞ்சும் சொல்லை ஆயுதமாக நாங்கள் ஏந்துவதற்கு உயிரை ஈந்து தம்மை ஆகுதியாக்கியவர்கள் இந்த மக்கள். விடுதலை நோக்கிய ஈழத்தமிழர்களின் பயணத்தில் தமது அழிவுகளால் இலங்கையின் பேரினவாத முகத்தை உலகுக்கு வெளிப்படுத்தியவர்கள் இந்த மக்கள்.

எலகெங்கும் வாழும் இளைய தலைமுறையினருக்கு, விடுதலைப் போரின் ஆழப் பொருளையும் வரலாற்றுத் தேவைகளையும் உணர்த்தியவர்கள் இந்த மக்கள்.

பெருந்துயர் எங்கும் நிறைந்து வழியும் இந்த நாட்களில், அவர்கள் ஈகங்களை நெஞ்சிருத்தி வணங்குகின்றோம்.

உணர்வெங்கும் ஈரம் கசியும் இந்நாட்களில் இலங்கையின் இனப்படுகொலை வரலாற்றை சற்றே விளங்கிக்கொண்டு, எதிர்காலத்துக்கான எமது கடமைகள் எவை என்பதைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

இலங்கை விடுதலை பெறுவதற்கு முன்னரே, இலங்கை பௌத்தத்துக்கும் சிங்களத்துக்குமான நாடு என்பதில் சிங்களவர் உறுதியாக இருந்தனர். சுதந்திரம் பெற்ற 1948ம் ஆண்டிலேயே பௌத்தம் இலங்கையின் அரச மதமானது. 1956இல் சிங்களம் மட்டுமே அரசமொழி என்ற சட்டமும் ஏற்படுத்தப்பட்டது.

வரலாற்றுக்காலம் தொட்டு, அங்கு வாழ்ந்து வரும் தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. சட்டங்களிளன் வாயிலாகவே அவர்கள் இரண்டாந்தர குடிமக்கள் ஆக்கப்பட்டனர். பெரும்பான்மை எண்ணிக்கை கொண்ட எங்கள் இனத்துக்கு மட்டுமே இந்த நாடு உரியது என்ற பேரினவாதச் சிந்தனை மக்கள் மனதிலும் அரசாங்கங்களின் செயற்பாடுகளிலும் காணப்பட்டது,

மனிதகுலத்துக்கு எதிரான இந்தச் செயற்பாடுகள் யாவும் மனிதவுரிமை சட்டங்களுக்கு முரணாகவே இருந்தன. ஜனநாயக முறைகளுக்கு அமைய, தமிழர்கள் நீதி கேட்டபோதெல்லாம் வன்முறையாளர்களால் வகைதொகையின்றி இனப்படுகொலைகளுக்கு ஆளாக்கப்பட்டனர்.

எழுபதுகளின் தொடக்ககாலம் வரை தமிழர்களுக்கான பல்வேறு உரிமைகள் மறுக்கப்பட்டன. உடைமைகள் பறிக்கப்பட்டன. அப்போதெல்லாம் தமிழர் அறவழி நின்றே போராடினார்கள்.

தமிழரின் கல்விக்கான உரிமையிலும் கைவைத்த போதுதான் தமிழர்கள் ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கினர். தமிழ் அரசியல் கட்சிகள் ஒரு குடையின் கீழ் இணைந்தன. அறவழிப்போர் பயனிக்காது என்ற முடிவில் இளைஞர்கள் வேறு பாதைகளுக்குத் திரும்பத் தொடங்கினர்.

ஒன்றிணைந்த தமிழ்க்கட்சிகள் 1977ம் ஆண்டில் தனிநாடு கோரிக்கையை முன்வைத்து வரலாறு காணாத அரசியல் வெற்றியைப் பெற்றன. இதைப் பொறுக்காத சிங்கள அரசு, மற்றுமொரு இனவழிப்பை 77இல் ஏற்படுத்தியது.

இது இளைஞர்களை மேலும் வேகப்படுத்தியது. அறவழியிலும் அரசியல் வழியிலும் நீதி கிடைக்காது என்ற தெளிவான முடிவுக்கு வந்த பின்னரே, விடுதலை இயக்கங்கள் தோன்றின. அப்போதும் சற்றும் இறங்காத பேரினவாதம், தமிழர்கள் மீது மேலும் வன்முறைகளைக் கட்டவிழ்த்தது.

இதன்வழியே வேறு வழியின்றி ஆயுதம் போரட்டமும் வலுப்பெற்றது.

தமிழர்கள் விரும்பி ஆயுதம் ஏந்தவில்லை. ஏறக்குறைய இருபது ஆண்டுகால அறவழிப்போராட்டம் தோற்றுப் போனது மட்டுமன்றி, இருந்த உரிமைகளையும் உடைமைகளையும் தமிழர் இழந்து கொண்டே சென்றனர்.

தமிழர்கள் மீதான அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்தவும் இலங்கையில் நடைபெறும் இனவொடுக்குமுறைகளை வெளியுலகுக்குக் கொண்டுவரவும் ஆயுதப் போராட்டங்கள் பயன்பட்டன.

ஒடுக்கப்பபட்ட மக்களுக்கான பாதுகாப்பையும் விடுதலையையும் முன்வைத்து நடத்தப்பட்ட போராட்டம் உலகத்தின் முழுமையான கவனத்தைப் பெறுவதற்கு முன்னர், 9ஃ11 தாக்குதல் அமெரிக்காவில் நடைபெற்றுவிட, இலங்கை அரசு அதைச் சாதகமாகப் பயன்படுத்தி, உலக அரங்கில் அடக்குமுறைக்கெதிரான தமிழர் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாக சித்தரித்தது. ஏகப்பட்ட இஸ்லாமிய அமைப்புகளைத் தடை செய்த உலக நாடுகள், இஸ்லாமியரல்லாத தமிழர் போராட்டத்தையும் பயங்கரவாதமாக உள்ளடக்கித் தடை செய்தது. இதனால் எமது தடை இஸ்லாமியர்களுக்கு மட்டும் எதிரானது அல்ல என்று கூறிக்கொண்டது.

இதுவே, உலகநாடுகள் தொடர்பில் நாம் எதிர்கொண்ட பேரிடராகும். இத்தடைகளை மீறி போராட்டம் தொடர்பான நியாயங்களை வெளிப்படுத்துவதில் நாம் பெருஞ் சிரமங்களை எதிர்கொண்டோம்.


ஒருவகையில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக உலகநாடுகளை இணைப்பதில் இலங்கை அரசு வெற்றி கண்டது. எம்மை அழித்து வலுவிழக்கச் செய்தது.

வலிமையான அறிவழிப் போராட்டங்களை முன்னெடுக்கும் போதிய வலிமையும் வழிகாட்டல்களும் இல்லாதவர்களாகவே நாம் இருக்கின்றோம். காலந்தோறும் அவ்வாறு வாழ்ந்துவிட முடியாது.

எமக்கான உரிமைகளையும் இழந்த நிலங்களையும் நாம் பெறுவதற்கான நியாயங்களும் சட்டங்களும் இந்த உலகத்திடம் இருக்கின்றன. சரியான வடிவங்களில் அவற்றை நாம் முன்னெடுக்க வேண்டும்.

எமது இளைய தலைமுறையினர் மெல்ல மெல்ல அவற்றுக்கான வாசல்களைத் திறந்து வருகின்றனர். அவர்களை ஊக்கப்படுத்திப் பலப்படுத்த வேண்டியது எமது கடமையாகும்.

எம் உயிரன உறவுகளை நெஞ்சிருத்தி, நினைவுகூறும் இவ்வேளை, எமது மண்ணுக்காய் நிமிர்ந்தெழுவோம் என உறுதி கூறுவோம்.



கனடா உலகத்தமிழர் பத்திரிகை
Canada Ulahathamilar
705 Progress Avenue, Unit 106, Scarborough, Ontario. M1H 2X1
தொலைபேசி / Tel: 416 303 7675 / 416 438 3030
தொலைநகல் / Fax: 416 438 6999
மொன்றியல்/ Montreal: 514 660 5891
மின்னஞ்சல் / Email: editor@worldtamils.com
இணையம் / Web: www.worldtamils.com

கனடா
CANADA ULAHATHAMILAR
உலகத்தமிழர்
சர்வதேச தமிழர் பத்திரிகை
www.worldtamils.com
குரல் 570 | மே 17, 2019 - மே 23, 2019 | இலவசம்!!



உலகம் முழுவதும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



ஒன்ராறியோ சட்டசபையில் தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரம் 2ம் வாசிப்பு நிறைவேற்றம்

முள்ளிவாய்க்கால் முற்றத்தில் சிரமதானப் பணி!




UNLOCK your DREAMs
நம்பி வாங்க சந்தோசமா போங்க...
வீட்டுக்கடன் வாங்க உங்கள் CREDIT SCORE இனி தடை இல்லை. வீட்டை வைத்து இலகுவாக கடன் பெறலாம்
அதி குறைந்த வட்டி வீதத்தில் ஆரம்பித்து OVER MILLION DOLLAR வரை கடன் பெற்றுக்கொள்ளலாம்
காசோலைக்கு பணம் வழங்கும் சேவை BUSINESS CHEQUE CASHING
மாறி வரும் சட்டதிட்டங்களுக்கு அமைய வீட்டுக்கடன் செய்துகொடுப்பது எமது கடமை
தம்பி பிரபா
416 645 3027


Low Mortgage Rates
TD Canada Trust
ADVICE WHEREVER WHENEVER
கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்
Supen Subramaniyam
Manager, Residential Mortgage
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute
TD Canada Trust
Banking can be this comfortable

அரசியல் அரங்கம்

முள்ளிவாய்க்காலின் பின்னான பத்தாண்டு தோல்வியும்

பலம் பொருந்திய பரந்துபட்ட புதிய தலைமையின் அவசியமும்

சர்வதேச அரசுகளின் ஆதரவின்றி விடுதலை சாத்தியமாகாது. களத்தில் பலம் பொருந்திய மாற்றுத் தலைமையின்றி சர்வதேச அரசுகளை கையாள முடியாது.

உலகப் பரப்பில் இனப்படுகொலைக்கு உள்ளான இனங்கள் இனப்படுகொலையை முதலீடாகக் கொண்டு சர்வதேச ஆதரவை வென்றெடுத்து அதன் மூலம் தமக்கான விடுதலையை சாத்தியமாக்கி உள்ளதை வரலாறு படம்பிடித்துக் காட்டுகிறது.

ஆர்மீனிய இனப்படுகொலையோடு 20ஆம் நூற்றாண்டிற்கான உலகம் உதயமானது போல முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையோடு 21ஆம் நூற்றாண்டிற்கான உலகம் உதயமானது.

இஸ்லாமிய துருக்கியப் பேரரசு 1915ஆம் ஆண்டிலிருந்து 1917ஆம் ஆண்டிற்குள் 15 இலட்சம் ஆர்மீனிய கிறிஸ்தவர்களை இனப்படுகொலை செய்வதோடு 20ஆம் நூற்றாண்டிற்கான இனப்படுகொலை அரசியல் உலகில் உதயமானது.

அதைத் தொடர்ந்து கால்நூற்றாண்டின் பின் யூத இனப்படுகொலையை ஹிட்லர் அரங்கேற்றினார். அப்போது 60 இலட்சம் யூதர்கள் கொடூரமான முறையில் இனப்படுகொலைக்கு உள்ளாகினர்.

சாணக்கிய முனிவன்

இதைத் தொடர்ந்து ஆபிரிக்காவில் இனப்படுகொலைகள் பல அரங்கேறின. இறுதியாக 20ஆம் நூற்றாண்டின் முடிவில் செர்பியர்களால் கொசோவோ மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதோடு 20ஆம் நூற்றாண்டு முடிவுற்றது.

இதில் 13,500 கொசோவோ மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாயினர்,

இவ்வாறு 20ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி முறையே 8000க்கும் மேலான போஸ்னிய மக்கள் செர்பிய இராணுவத்தால் 1995ம் ஆண்டு இனப்படுகொலை செய்யப்பட்டதுடனும் அவ்வாறே 13,500 கொசோவோ மக்கள் செர்பிய இராணுவத்தால் 1999ஆம் ஆண்டு இனப்படுகொலை செய்யப்பட்டதுடனும் 20ஆம் நூற்றாண்டின் இனப்படுகொலை அத்தியாயம் முடிவுற்றது.

அதேவேளை உலகப் பரப்பில் .21ஆம் நூற்றாண்டின் இனப்படுகொலை அத்தியாயம் சுமாராக 1,50,000 ஈழத் தமிழர்கள் 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் சிங்கள இராணுவத்தால் இனப்படுகொலை செய்யப்பட்டதோடு ஆரம்பமானது.

20ஆம் நூற்றாண்டின் இறுதியில் இனப்படுகொலைக்கு உள்ளான போஸ்னியர்கள் தமக்கான இறைமையுள்ள சுதந்திர அரசை உருவாக்க சர்வதேச சமூகம் அவர்களுக்கு உதவியது. அவ்வாறே இனப்படுகொலைக்கு உள்ளான கொசோவோ மக்களும் தமக்கான சுதந்திர அரசை உருவாக்க அவர்களுக்கு சர்வதேச சமூகம் உதவியது.

அதேவேளை போஸ்னிய இனத்தவர்களையும், கொசோவோ இனத்தவர்களையும் விடப் பெரியளவில் 21ஆம் நூற்றாண்டில் இனப்படுகொலைக்கு உள்ளான ஈழத் தமிழர்களுக்கு ஒரு இறைமையுள்ள சுதந்திர அரசை உருவாக்க சர்வதேச சமூகத்தின் ஆதரவு தமிழ் மக்களுக்கு சிறிதும் கிட்டவில்லை.

அதற்கும் அப்பால் இனப்படுகொலை செய்தவர்களுக்கு எதிரான குறைந்தபட்ச நீதியைத் தானும் வழங்க சர்வதேச சமூகம் செயல்பூர்வமாக ஆவன செய்யவும் இல்லை.

சர்வதேச சமூகம் தானாக முன்வந்து நீதியின் பெயரால் செயற்படும் என்று எதிர்பார்ப்பது தவறு. எப்போதும் சர்வதேச அரசுகள் தத்தம் நலன் சார்ந்தே செயற்படும். இந்நிலையில் சர்வதேச அரசுகளை பொருத்தமான வகையில் அணுகி அவற்றின் உதவியுடன் விடுதலை அடையவேண்டிய பொறுப்பு விடுதலைக்காகப் போராடும் இனத்தின் கைகளிலேயே உண்டு.



முள்ளிவாய்க்கால் பத்தாவது ஆண்டு நினைவேந்தல் நாளில் கருத்தில் கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் முள்ளிவாய்க்காலின் பின்னான துயரகரமான பத்தாண்டு தோல்வியின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முற்றாக நிராகரித்து ஒரு பலம் பொருந்திய மாற்றுத் தலைமையை உருவாக்க உறுதிபூண வேண்டும். அவ்வாறு ஒரு பலம்பொருந்திய தலைமை களத்தில் இல்லாமல் எந்தவொரு சா்வதேச அரசையும், சா்வதேச சக்தியையும் கையாள முடியாது.

பிரிந்து சென்று சுதந்திர அரசை அமைப்பதற்கான அதிகபட்ச நியாயம் இனப்படுகொலையின் பின்னணியில் இலகுவாக உருவாகிறது. இந்த வகையில் இனப்படுகொலையை அடிப்படை நியாயமாகக் கொண்டு விடுதலை அடைந்த இனங்கள் உலக வரலாற்றில் பல உண்டு.

ஹிட்லரின் யூத இன அழிப்பிற்கு எதிராக யூத மக்கள் சர்வதேச அனுதாபத்தைத் திரட்டி அதன் வாயிலாக பெருவல்லரசுகளின் ஆதரவைப் பெற்று இறுதியில் இறைமையுள்ள சுதந்திர இஸ்ரேலிய அரசை உருவாக்கினார்கள். அதாவது இனப்படுகொலையை முதலீடாகக் கொண்டு அதன் அடிப்படையில் யூத இன விடுதலையை சாத்தியமாக்கினார்கள்.

இது ஒரு கடினமான பாதைக்கு ஊடாக நிகழ்ந்தது. யூத அறிஞர்களும், விஞ்ஞானிகளும், மதத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும் ஒன்று திரண்டு ஒரு குரலில் உலகளாவிய ஆதரவைத் தேடினர். இதன் விளைவாக ஐநா பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் அனைத்தினது ஆதரவுடனும், பொதுச்சபையின் மூன்றில் இரண்டு பங்கு நாடுகளின் ஆதரவுடனும் 1948, மே 14ஆம் தேதி இஸ்ரேல் என்ற யூத தேசத்தை ஐநா சபை அங்கீகரித்து புதிய தேசம் உலக வரைபடத்தில் உருவானது.

அப்போது 1947ஆம் ஆண்டு புதிதாக விடுதலை அடைந்திருந்த உலகில் இரண்டாவது மக்கள் தொகையைக் கொண்ட பெரிய நாடான இந்தியா, மேற்படி யூத அரசிற்கு ஆதரவு அளிக்கவும், அதை அங்கீகரிக்கவும் மறுத்தது. அப்போது உலகின் தலையாய விஞ்ஞானியும், யூத இனத்தவருமான ஐன்ஸ்டீன் இந்தியாவின் ஆதரவையும், அங்கீகாரத்தையும் கோரி அன்றைய இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேருவிற்கு ஓர் உருக்கமான கடிதம் எழுதினார். ஆயினும் அரேபியர்களுடனும், இஸ்லாமிய நாடுகளுடனுமான நல்லுறவின் நிமித்தம் நேரு அக்கடித்தை புறந்தள்ளி ஆதரவு அளிக்க முதலில் மறுத்தார்.

ஆயினும் ஐன்ஸ்டீனும், யூதர்களும் இந்தியாவிடம் தொடர்ந்து ஆதரவு கோரத் தவறவில்லை. இத்தகைய சூழலில் இஸ்ரேலை 1950ஆம் ஆண்டு இந்தியா அங்கீகரித்தது.

தொடர்ச்சி 74ம் பக்கம்...

இலங்கைச் செய்திகள்

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை:

இராணுவத்தினர் கடமையில் இருக்கத்தக்கதாக தாக்குதல்

இலங்கையில் ஈஸ்டர் தின தொடர் குண்டுதாக்குதலை தொடர்ந்து முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்று வரும் வன்முறைகள் காரணமாக செவ்வாய்க்கிழமை தொடர்ந்து இரண்டாவது நாளாக இரவு நேர நாடு தழுவிய ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் (திங்கள்கிழமை) இரவு ஊரடங்கு சட்டம் அமலில் இருந்தபோது, முஸ்லிம்களின் வீடுகள், கடைகள் மற்றும் வாகனங்கள் மீது வன்முறையாளர்கள் தாக்குதல் நடத்தியதோடு, சில இடங்களில் தீ வைத்தனர்.



இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைகளில் புத்தளம் மாவட்டம் நாத்தாண்டியா கொட்டார முல்ல பகுதியைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

வன்முறையாளர்களின் தாக்குதல்கள் காரணமாக, மேற்படி நபர் உயிரிழந்துள்ளார்.

தீவிர வலதுசாரி பௌத்த குழுவின் தலைவர் உள்பட 74 பேரை காவல்துறை கைது செய்துள்ளது. இது தவிர, 33 பேர் விலக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அமைதி காக்க கேட்டுக்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் அவை வெறுப்புணர்வை களைய வேண்டுமெனவும் கோரியுள்ளது.

இரண்டாவது நாள் இரவில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஊரடங்கு உத்தரவு உள்ளூர் நேரப்படி செவ்வாய்க்கிழமை இரவு 9 மணி முதல் அமலுக்கு வந்துள்ளது.

கொட்டாரமுல்லவில் உயிரிழந்த 45 வயதுடைய அமீர் என்பவர் 4 பிள்ளைகளின் தந்தையாவர். தச்சுத் தொழிலாளியான இவரின் வீடு உட்பட, கொட்டாரமுல்ல பகுதியில் சுமார் 25 வீடுகள் தாக்கப்பட்டுள்ளன.

இதன்போதே, அமீர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், சம்பவ இடத்திலேயே அவர் இறந்து விட்டார் என்றும் அங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.

நாத்தாண்டியா பிரதேச சபை உறுப்பினர் ரிழ்வான் மற்றும் கொட்டாரமுல்ல பள்ளிவாசல் செயலாளர் ஆகியோரின் வீடுகள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, அந்த பகுதியைச் சேர்ந்த சயின் அஹமட் பிபிசிக்கு தெரித்தார்.

கொட்டாரமுல்லவில் சுமார் 1700 முஸ்லிம் குடும்பங்கள் உள்ளன.

கொட்டாரமுல்ல பகுதியில் ராணுவத்தினர் கடமையில் இருக்கத்தக்கதாக, அவர்களின் ஆதரவுடனேயே முஸ்லிம்களின் வீடுகள் மீது வன்முறையாளர்கள் தாக்குதல் நடத்தியதாக, அங்குள்ள சிலர் பிபிசியிடம் கூறினர்.

இதேவேளை, கொட்டாரமுல்லயிலிருந்து சில கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள தும்மோதர பகுதியிலும் இரண்டு பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதோடு, வீடுகளும் தாக்கப்பட்டு, தீவைப்பு சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில் கம்பஹா மாவட்டம் மினுவாங்கொட பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களுக்



குச் சொந்தமான சுமார் 30 கடைகள் தாக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 20 கடைகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளதாகவும் அங்குள்ள உள்ளூரார் ஊடகவியலாளர் ஒருவர் பிபிசியிடம் கூறினார்.

இது இவ்வாறிருக்க, மிவாங்கொட பிரதேசத்திலிருந்து சில கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள கல்லொளுவ பகுதிலுள்ள முஸ்லிம்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும், குறித்த உள்ளூர் ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்தார்.


வீடுகளுக்குள் இருந்த முஸ்லிம்களை வெளியே அழைத்து, அவர்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தினார்கள் என்கிறார் அந்த ஊடகவியலாளர்.

இதேபோன்று, இன்னும் பல இடங்களிலும் முஸ்லிம்களின் கடைகள், வீடுகள் மற்றும் வாகனங்களை தாக்கியும் தீ வைத்தும் வன்முறையாளர்கள் சேதப்படுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்தநிலையில், மினுவாங்கொட பிரதேசத்திலும் வன்முறையாளர்களின் தாக்குதலில் முஸ்லிம் ஒருவர் இறந்துள்ளதாக, இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் செய்திகள் பரவி வருகின்றபோதும், அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

கனடாச் செய்திகள்

தமிழின அழிப்பு அறிவியற் கிழமை சட்டமூலம் 104 ஒன்ராறியோ சட்டசபையில் 2வது வாசிப்பு நிறைவேறியது



கடந்த பல மாதங்களாக ஒன்ராறியோ மாகாணசபை உறுப்பினர் திரு. விஜய் தணிகாசலம் அவர்கள் கனடிய தமிழ் சமூகத்தின் ஆதரவுடன் மேற்கொண்டுவந்த முயற்சியால் 'தமிழின அழிப்பு அறிவியற் கிழமை' என்ற சட்டமூலம் (எண் 104) ஒன்ராறியோ மாநில மன்றத்தில் கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது, புதன் கிழமை மே 16ஆம் திகதி இதன்மீதான இரண்டாவது வாசிப்பின் பின்னர், வாக்கெடுப்புக்கு விடப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இச்சட்டமூலத்தின் உள்ளடக்கம் பின்வருமாறு தெரிவிக்கின்றது.

தமிழர் மீது மேற்கொள்ளப்பட்டது இன அழிப்பு என்பதை வலியுறுத்துவதுடன், ஒன்ராறியோ மாநிலத்தில் ஒவ்வொரு ஆண்டும் மே 18ஆம் நாள் தமிழின அழிப்பு நினைவு நாளாகக் கடைப்பிடிப்பதுடன், அதற்கு முந்தைய ஒரு வாரம் தமிழின அழிப்புத் தொடர்பான அறிவியற் கிழமையாகப் பேணப்படும்.

இது குறிப்பிட்ட அவ்வாரத்தில் ஒன்ராறியோவில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு தொடர்பான அறிவூட்டல்களை மேற்கொள்ள வழிவகுக்கும். இதன்மூலம் அனைத்து மக்கள் மத்தியிலும் எமக்கான ஆதரவு வலுப்பெறும்.

அத்துடன், இதுபோன்ற இன அழிப்புகள் வேறு எங்கும் நடைபெறாதிருக்க ஆவன செய்யுமாறும் இச்சட்டமூலம் கோருகிறது.

எனவே, ஒன்ராறியோ மாநிலமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ள சட்டமூலமானது அங்கீகரிக்கப்பட்டு சட்டமாகும் பட்சத்தில், தமிழர்களுக்கு நடைபெற்ற இன அழிப்பு என்பதை ஒன்ராறியோ அரசு ஏற்றுக்கொண்டதாகிவிடும்.

123 மாநிலமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒன்ராறியோ என்பது கனடிய அரசில் மிகவும் முக்கியமான மாநிலம் என்பதுடன், மூன்றில் ஒரு பங்குக்கும் அதிகமான கனடிய நடுவண் அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

அத்துடன், தெற்கு ஆசிய மற்றும் தென் கிழக்கு ஆசிய பிராந்தியங்களுக்கு வெளியே தமிழர்கள் அதிகப்படியாக வாழும் பகுதியாகவும் ஒன்ராறியோ திகழ்கின்றது.

தொடர்ச்சி 34ம் பக்கம்...

ஒட்டாவா நாடாளுமன்றம் முன்னால் தமிழரின் கவனயீர்ப்புக்கு எதிராகச் சிங்களவர் ஆர்ப்பாட்டம்

ஒட்டாவா, மொன்றியால், ரொரோண்ரோ அமைப்புக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட 10ஆவது ஆண்டு தமிழினப் இனப்படுகொலை நினைவு நிகழ்வு கடந்த திங்களன்று பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றுள்ளது. இதில் பல நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் பங்குகொண்டு 2009 நடந்தது தமிழர்களுக்கெதிரான இனப்படுகொலை என்பதை கனடிய மற்றும் பல்லின மக்களுக்கு எடுத்து கூறும் வகையில், தாம் 2009ஆண்டு பாவித்த பல்லின மக்களுக்கு எடுத்து கூறும் வகையில் பதாதைகளை தாங்கியபடி நாடாளுமன்றத்தின் முன்னே முறையாக அனுமதி பெற்று நிகழ்வுகளை நடத்தியுள்ளனர்.



தொடர்ச்சி 34ம் பக்கம்...

தமிழின அழிப்புப் பிரேரணை ஒட்டாவா நாடாளுமன்றத்தில் தோல்வி

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகப் புரியப்பட்டதாகக் கூறப்படும் இனப்படுகொலை குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு விசாரணை மேற்கொள்ள வேண்டுமெனக் வலியுறுத்தி கனடிய நாடாளுமன்றில் பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டது.

கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஷோன் சென் குறித்த பிரேரணையை கடந்த திங்களன்று பிற்பகல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

எனினும், குறித்த பிரேரணைக்கு ஒருமனதாக இணக்கம் கிடைக்காதமையால் இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட முடியாது போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரேரணையின் முழுமையான வடிவம் பின்வருமாறு அமைந்திருந்தது. கனடிய மக்களுக்கும் இலங்கை மக்களுக்கும் இடையில் நெருக்கமான தொடர்புகள் நிலவி வரும் நிலையிலும், அண்மைக் காலத்தில் அர்த்தமற்ற வன்முறை, இயற்கை அழிவுகள், போர் என்பவற்றால் இலங்கையில் எண்ணற்ற உயிர்கள் இழக்கப்பட்டுள்ள நிலையிலும், உயிர்த்த ஞாயிறு நாளன்று வழிபாட்டில் ஈடுபட்டிருந்த கிறிஸ்தவர்கள் மீதும், கொழும்பில் உள்ள விடுதிகள் மீதும் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களைக் கனடா கண்டித்த நிலையிலும், இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையைக் கனடா கண்டிக்கும் நிலையிலும், கனடா உலகெங்கும் உள்ள அதன் தோழமை சக்திகளுடனும், பங்காளிகளுடனும் இணைந்து அனைத்து வகைப் பயங்கரவாதம், வன்முறைத் தீவிரவாதம், இனவெறுப்புச் செயற்பாடுகள் ஆகியவற்றைக் கண்டிக்கும் நிலையிலும், இலங்கையில் 26 வருட கால ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்தமையின் பத்தாம் ஆண்டு இந்த மாதம் கடைப்பிடிக்கப்பட்டாலும், சமாதானமும், மீளிணக்கமும் இன்னமும் அடையப்படாத நிலையிலும், இலங்கையில் ஆயுதப் போரின் இறுதியில் போர்க் குற்றங்களும், மனித இனத்துக்கு எதிரான குற்றங்களும் புரியப்பட்டதாக இலங்கை குறித்து மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளரின் அலுவலகம் 2015 ஆம் ஆண்டு மேற்கொண்ட விசாரணையின் அறிக்கையில் முடிவு செய்யப்பட்டுள்ள நிலையிலும், உண்மையைக் கண்டறிவது, பொறுப்புக் கூறல் ஆகியன, பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்கப்படுவதற்கும், குற்றம் புரியப்படுவோர் தண்டிக்கப்படாத நிலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், நீடித்திருக்கும் அமைதியும், மீளிணக்கமும் ஏற்படுவதற்கும் இன்றியமையாதவை என்பதாலும், இந்தப் பேரவை,

தொடர்ச்சி 34ம் பக்கம்...

இலங்கைச் செய்திகள்

10ஆம் ஆண்டு நினைவேந்தலிற்கு தயாராகின்றது முள்ளிவாய்க்கால்!

எதிர்வரும் மே 18 அன்று முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 10ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழர்கள் வாழும் பகுதியெங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் அமைந்துள்ள நினைவுத்தூபியில் பிரதான நினைவேந்தல் நிகழ்வுகள் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு நேற்று மாலை சிரமதான பணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

முன்னதாக நினைவுதூபியில் நினைவேந்தல் குழுவில் உள்ள அருட்தந்தையர், அருட் சகோதரிகள், திருகோணமலை தென்கையிலை ஆதீன குருக்கள் கரைதுறைப்பற்று



பிரதேசசபை உறுப்பினர்கள், யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டு சிரமதான பணியில் ஈடுபட்டனர். இந்தநிலையில் இம்மாதம் 18 ஆம் திகதி அஞ்சலி செலுத்தி தீபம் ஏற்ற உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பனங்காட்டான் எழுதும் வாரசாரம்

புறங்காட்டாப் போர்முனையின் நடுகல் முள்ளிவாய்க்கால்!

பத்தாண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற எழுத்தில் வடிக்க முடியாத, ஒவ்வொரு ஆன்மாவையும் உலுக்கியெடுத்த, திட்டமிட்ட கோரக் கொலைகளை நினைத்துப் பார்க்கும் நாட்களில் இதனை எழுத வேண்டியுள்ளது.

மண்ணையும் மக்களையும் காப்பதற்கு ஓரினம் போராட நேர்ந்த வேளையில், அரச பயங்கரவாதத்தையும் எதிர்த்துப் போராட வேண்டியிருந்ததால், விடுதலை வேட்கை கொண்ட இனம் ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டது தவிர்க்க முடியாதது.

இனவாதமும் பயங்கரவாதமும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வேளையில், அப்பாவிப் பொதுமக்களுக்கும், அவர்களின் காவலர்களுக்கும் என்ன நடைபெறும் என்பதற்கு முள்ளிவாய்க்கால் நிலையான சாட்சி.

சிறுவர் - பாலகர் என்ற பேதமின்றி ஏன் கொல்லப்பட்டனர் என்பதற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை.

பத்தாண்டுக்கு முன்னைய அந்தப் பேரழிவின் சூத்திரதாரிகள் சர்வதேசத்துக்கு பொறுப்புக் கூற மறுக்கிறார்கள்.

அனைத்துலக ஆதரவுடனான கலப்பு நீதி விசாரணையை ஒப்புக் கொண்டுவிட்டு அதனையும் மறுக்கிறார்கள்.

நடந்தவைகளை மறப்போம், நல்லிணக்கத்தோடு வாழ்வோம் என்று எலிக்குப் பூனை கதை சொல்வதுபோல ஏமாற்று நாடகம் நடைபெறுகிறது.

யுத்தம் மௌனிக்கப்பட்ட வேளையில் கொல்லப்பட்டவர்கள், விசாரணைக்கென கொண்டு செல்லப்பட்டவர்கள், காணாமலாக்

2009ல் முள்ளிவாய்க்காலில் ஒரு லட்சத்து நாற்பதினாயிரத்துக்கும் அதிகமானவர்கள் காணாமல் போனார்கள் என்று புள்ளி விபரத்தோடு கணக்கு காட்டிய அப்போதைய மன்னார் ஆயர், அதனை ஒரு சாட்சியமாக ஐக்கிய நாடுகள் அவைக்கும் சமர்ப்பித்தார்.

அவரை ஒரு பொய்யராகச் சித்தரித்த சிங்களப் பேரினவாதம், பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லையென்று மறுத்து வருகிறது. இந்த நிலையில் இவர்களிடமிருந்து எவ்வாறு பொறுப்புக்கூறலை எதிர்பார்க்க முடியும்?

கடந்த பத்தாண்டுகளும் தாயகத் தமிழர்

சொந்தமான தனியார் நிறுவனமொன்று எடுத்துக் கொண்டதை மன்னாரின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

யுத்த காலத்தில் இந்தியாவுக்கு இடம் பெயர்ந்த தமிழர்களுக்குச் சொந்தமான காணிகள் அடாத்தாக பறிக்கப்பட்டுள்ள சம்பவங்களில் இதுவுமொன்று. இலங்கையில் ஏப்ரலில் நடைபெற்ற கிறிஸ்தவ தேவாலயங்களின் தாக்குதல்களில் சம்பந்தப்பட்ட இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாக நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டது



முள்ளிவாய்க்காலில் யுத்தம் மௌனிக்கப்பட்டதென்கின்றனர் சிலர். முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டன என்கின்றனர் வேறு சிலர். மௌனம் என்பது பலமான ஒரு மொழி என்பது உண்மையானால், முள்ளிவாய்க்கால் மௌனம் என்பது விடுதலைப் போராட்டத்தின் முடிவல்ல என்பதை ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்வர்.

தனது இனத்தின் இருப்புக்காக தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை வேண்டிப் போராடிய ஆயிரமாயிரம் போராளிகளும், அவர்களுக்குப் பலமாகவும் அரணாகவும் நின்று சர்வதேசத்திடம் நீதி கேட்ட பொதுமக்களும், சாட்சியமில்லாத யுத்தத்தில் வகை தொகையின்றி இளையோர் - முதியோர் -

கப்பட்டவர்கள், சிறையில் அடைக்கப்பட்டவர்கள் பற்றிய எண்ணிக்கையைக்கூட சொல்ல மறுத்து வருகிறது சிங்கள பௌத்த ஏகாதிபத்திய அரசு.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவிலிருந்து இன்றைய மைத்திரிபால சிறிசேன வரை ஒரு கொள்கை சிங்கள தேசத்தால் நேர்த்தியாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

சிங்களவர் ஆளும் இனம், தமிழர் ஆளப்படும் இனம் என்பதுவே அந்தக் கொள்கை. (அன்று சிங்கள அரசுகளுடன் இணைந்து தமிழரை அழித்தொழிப்பதில் ஈடுபட்ட முஸ்லிம்களும் இப்போது ஆளப்படும் இனமாக மாற்றப்பட்டுள்ளதை ஒரு தசாப்தத்துக்குள் காண நேர்ந்துள்ளது)

மேய்ப்பரில்லாத இனக்குழுமமாக வாழ்ந்து வருகின்றனர் என்பது கண்கூடு.

தமிழர் தாயகமெங்கும் சிங்கள் இராணுவம் வியாபித்திருக்கிறது. தமிழ் மண்ணைப் பொறுத்தளவில் இது நில ஆக்கிரமிப்புப் படையாகியுள்ளது. இலங்கை இராணுவத்தின் மொத்த எண்ணிக்கையில் எழுபது வீதமானவர்கள் தமிழ் மண்ணில் தங்கியுள்ளனர்.

இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் திருகோணமலை மாவட்டத்துக்குமிடையில் எல்லைப்புறங்களிலுள்ள மணலாறு, நாயாறு, டொலர்பாம், கென்பாம், கொக்குத்தொடுவாய், தென்னைமரவாடி, குச்சவெளி ஆகிய தூய தமிழ்க் கிரமாங்களில் பல்லாயிரம் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

> புறமுதுகுகாட்டி ஓடாது, சங்க காலம் போன்று போர்முனையில் நேருக்கு நேர் நின்று போராடி உயிர் கொடுத்த போராளிகளையும், அப்பாவிப் பொதுமக்களையும் கொன்று குவித்தவர்கள் படுகோழைகள். இவர்களை இயக்கிய சிங்கள அரசும் அவ்வாறானதே. யுத்தம் மௌனிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் தமிழரின் குருசேத்திரம். புறமுதுகு காட்டாத போர்முனையின் நடுகல்லாக விளங்குகிறது முள்ளிவாய்க்கால்.

கமத்தொழிலும் கடற்றொழிலும் இவர்கள் வசமாகியுள்ளன. தங்களுக்கு உறுதுணையாக ,சிங்களக் குடும்பங்களை இராணுவ முகாம்களுக்கருகில் குடியேற்றியுள்ளனர். தமிழ் மண்ணில் விவசாயம் செய்து உற்பத்திப் பொருட்களை தமிழர்களுக்கே விற்று பணம் சேர்க்கும் வியாபாரம் வேறு.

புதுக்குடியிருப்பில் மட்டும் 400க்கும் அதிகமான சிங்களக் குடும்பங்கள் இப்போது வசித்து வருவதாக அங்கு சென்றிருந்த கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை தெற்குடன் இணைக்கும் ஏ-9 நெடும்பாதையில் கிளிநொச்சிக்கும் வவுனியாவுக்குமிடையில் சுமார் நான்காயிரத்துக்கும் அதிகமான சிங்களக் குடும்பங்கள் கடந்த ஒரு தசாப்தத்தில் குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்களில் அநேகமானவர்கள் சிறைவாசம் அனுபவித்த பாரிய குற்றவாளிகள்.

அண்மையில் நீர்கொழும்பில் இடம்பெற்ற தாக்குதல்களின்போது தப்பிய பெருமளவான பாகிஸ்தானிய குடும்பங்களை வவுனியாவில் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதுவும் தமிழ் மண் அபகரிப்பின் ஓர் அங்கமே.

முல்லைத்தீவில் கொக்கிளாய் முகத்துவாரத்துக்கருகில் தமிழருக்குச் சொந்தமான மூன்று ஏக்கர் காணியை சிங்களவர் குடியேற்றத்துக்கு வழங்க வவுனியாவின் அரசாங்க அதிபரான சிங்களவர் நடவடிக்கை எடுத்து வருவதை வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள் எதிர்த்துள்ளனர்.

மன்னார் ஓலைத்தொடுவாய் உவரி பகுதியில் சுமார் 508 ஏக்கர் காணியை கிழக்கு மாகாண ஆளுனர் ஹிஸ்புல்லாவுக்குச்

1958ல் ஆரம்பமான இனரீதியான தாக்குதல், தமிழர் சொத்தழிப்பு என்பவை சிங்கள அரசாங்கங்களின் அனுசரணையுடன் இனவன்முறை, இனப்படுகொலை என விரிந்து முள்ளிவாய்க்காலில் தமிழின அழிப்பானது. எம் கண்முன்னால் இடம்பெற்ற கொடூர வரலாறு.

இதற்கு நீதி கேட்டு உலகின் மூலைமுடுக்குகளிலும், சந்திகள் சந்தைகளிலும் தமிழர்கள் முழங்காலிட்டு கரங்கூப்பி ஓலமிட்டுக் கதறி அழுதும், வீதிகளை மறித்தும் இதுவரை நீதி கிடைக்கவில்லை, எந்த நியாயமும் கிடைக்கவில்லை.

கொலைகாரர்களே விசாரணையாளர்களாகவும், நீதி வழங்குபவர்களாகவும் மாறியுள்ள கலிகாலம் இது. தமிழர் தரப்பிலுள்ள சிலர் இதற்குத் துணை போவதை என்னென்று சொல்வது?

வடமாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இலங்கையிலே இடம்பெற்றது தமிழினப் படுகொலை என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து துணிச்சலாக நிறைவேற்றினார்.

இது தவறான முன்னெடுப்பென்று சட்டவாதங்களை முன்வைத்து முதல் குரல் கொடுத்தவர் சிங்களவரல்ல, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனே.

புலம்பெயர் மண்ணில் மார்க்கம் நகரசபையும், பிராம்ரன் நகரசபையும் தமிழினப்படுகொலையை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளன. ரொறன்ரோ நகர முதல்வர் ஜோன் ரோறி இவ்வருடம் தமிழினப்படுகொலையை பிரகடனம் செய்துள்ளார்.

தொடர்ச்சி 72ம் பக்கம்...

சர்வதேச மனித உரிமைகள் சமவாயங்கள் மற்றும் சர்வதேச சட்ட விதிமுறைகள், இனப்படுகொலை என்பது ஒரு இன, மொழி, மத சார்பான மக்கள் கூட்டத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்க வேண்டி, அவ்வாறாக அழிக்கும் நோக்கத்துடன் கட்டவிழ்க்கப்படுகின்ற வன்முறை என விளிக்கின்றன.

இனப்படுகொலை தொடர்பான எண்ணக்கரு முதல் முதலில் 1944 இல் ராபியேல் லெம்கின் Axis Rule in Occupied Europe எனும் நூலில் வெளியிடப்பட்டிருந்தது. குறிப்பாக இது இரண்டாம் உலகப்போரின் போதான ஹோலோகாஸ்ட் (Holocaust) இனப்படுகொலையை சித்தரிக்க பயன்பட்டிருந்தது.

லெம்கின் இனப்படுகொலையை தனது நூலில் பின்வருமாறு விபரித்திருந்திருந்தார்.

சர்வதேச சட்டத்தின் கீழ் இனப்படுகொலை என்பது ஒரு குற்றமாகும் என முதல் முதலில் தீர்மானம் நிறைவேற்றியது.

ஆயினும், அத்தீர்மானம், குறித்த குற்றம் பற்றிய முழுமையான சட்ட விளக்கத்தை வழங்கவில்லை. ஆயினும், 1948ஆம் ஆண்டில், ஐ.நா பொதுச் சபை, இனப்படுகொலை குற்றத்தை தடுக்கும் மற்றும் இனப்படுகொலை குற்றத்தை தண்டிப்பதற்கான சர்வதேச சமவாயத்தை ஏற்றுக் கொண்டது.

இச்சமவாயமே முதல் முதலில் இனப்படுகொலை என்ற குற்றத்தை சர்வதேச சட்ட

மே 18 ... சிறப்புக் கட்டுரை

யானது.

இது நாஸி தலைவர்கள், யூதர்கள், போலந்து, ஜிப்சீஸ் இனக்குழுக்களை பெருமளவில் இனப்படுகொலை செய்தமைக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்ட வரலாற்றின் முதலாவது நிகழ்வாகும்.

ஆயினும், குறித்த சமவாயம் செயற்பாட்டுக்கு வந்ததன் பின்னராக நடைபெற்ற குற்ற செய்தமைக்காக தண்டிக்கப்பட்டுள்ளனர்.

மூன்றாவது உதாரணம், கம்போடியாவின் இனப்படுகொலைக்கு எதிரான சர்வதேச நீதிப் பொறிமுறை ஆகும்.

இது, கம்போடியாவின் அரசாங்கமும் ஐக்கிய நாடுகளும், 1975 - 1979 காலப்பகுதியில் கெமர் ரோஜ் ஆட்சியின் காலத்தில் கெமர் ரோஜின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களில் மட்டுமே கவனம் செலுத்தும் பொருட்டு 2003 இல் நிறுவப்பட்டிருந்ததுடன், குறித்த நீதிப்பொறிமுறை இன்று வரை செயல்பாட்டில் உள்ளது.

இவ்வாறான நீதிப்பொறிமுறைகளை

இனப்படுகொலை:

சர்வதேச சட்டமும் அதன் பொருந்துத்தன்மையும்

“இனப்படுகொலை என்பது ஒரு தேசத்தின் மக்கள் குழாமை அல்லது ஒரு தேசிய இனத்தை முழுமையாக அந்நாட்டிலிருந்து வெகுஜன படுகொலைகளால் அழித்துவிடுதல் என்பது மட்டுமல்லாது, குறித்த தேசிய இனத்தின் வாழ்க்கையின் அத்தியாவசிய அத்திவாரங்களை அழிப்பதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் ஒரு ஒருங்கிணைந்த திட்டமாகும்.

இரண்டாம் உலகப் போரின்போது, நாஸி ஜேர்மனி மற்றும் அதன் நட்பு நாடுகளால் நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கு பின்னர், லெம்கின் இனப்படுகொலைக்கு எதிராக சர்வதேச பிரசாரங்கள், இனப்படுகொலைக்கு எதிராக சர்வதேச சட்டங்களை உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்வதற்கு வழிவகுத்தது. அதன்பிரகாரம், 1946ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் முதல் அமர்வு, வலு உடையதாய் விபரணம் செய்தது.

மேற்குறித்ததன் பிரகாரம், ஒரு இனத்தை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ, மனித இனம் சார்ந்த, இன ஒதுக்கல், சமய வேற்றுமை அல்லது தேசிய இன வேற்றுமை போன்ற காரணங்களால், உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ தொல்லை கொடுப்பது, கொல்ல நினைப்பது அல்லது அழிப்பது, இனவேறுபாட்டைக் காரணங்காட்டி குழந்தைப் பிறப்பை தடுப்பது, குழந்தைகளை இடம் பெயரச் செய்வது, வேறு எவ்வகையிலாயினும் இனவேறுபாடு காட்டுவது போன்றவை குற்ற முறை செயல்களாக, இனப்படுகொலைக் குற்றங்களாக சர்வதேச தடைச்சட்டத்தின் படிக் குற்றச்செயலாகும்.

இனப்படுகொலைக்கு எதிரான சர்வதேச குற்றவியல் நடவடிக்கைகளை பொறுத்தவரை, வரலாற்றில் நியூரம்பெர்க் தீர்ப்பாயம் முதன்மை

வியல் நடைமுறையில், முன்னாள் யுகோஸ்லாவாக்கியாவுக்கு எதிரான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் முதன்மைபெறுகின்றது.

அது, 2001 ஆம் ஆண்டில், 1995 செப்ரெசிகாவில் நடைபெற்ற படுகொலைகள் ஒரு இனப்படுகொலை ஆகும் என்று தீர்ப்பளித்திருந்தது.

இதுவே முதன்முறையில் ஒரு சர்வதேச நீதி பொறிமுறை இனப்படுகொலைக்கு எதிரான சமவாயத்தின் அடிப்படையில் இனப்படுகொலை தொடர்பாக தீர்ப்பளித்த முதலாவது சர்வதேச குற்றவியல் நடைமுறை ஆகும்.

இரண்டாவது உதாரணம், ருவாண்டாவின் இனப்படுகொலையை விசாரிக்கும் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஆகும்.

தாண்டி, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் சில இனப்படுகொலைகளை ஐ.நா சபையின் பாதுகாப்பு சபையின் பரிந்துரைகளின் கீழ் நேரடியாகவே விசாரித்து தீர்ப்பளித்துள்ளதுடன், அதன் பிரகாரம் இனப்படுகொலை செய்த அதிகாரிகளுக்கு வாழ்நாள் சிறை போன்ற கடுமையான தண்டனைகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனகன் முத்துக்குமார்

டாபர், சூடானை பொறுத்தவரை, 2003இல் தொடங்கிய சூடானில் நடத்திய மோதல், அது தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாயம் என்பது



ஒரு இனத்தை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ, மனித இனம் சார்ந்த, இன ஒதுக்கல், சமய வேற்றுமை அல்லது தேசிய இன வேற்றுமை போன்ற காரணங்களால், உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ தொல்லை கொடுப்பது, கொல்ல நினைப்பது அல்லது அழிப்பது, இனவேறுபாட்டைக் காரணங்காட்டி குழந்தைப் பிறப்பை தடுப்பது, குழந்தைகளை இடம்பெயரச் செய்வது, வேறு எவ்வகையிலாயினும் இனவேறுபாடு காட்டுவது போன்றவை குற்றமுறை செயல்களாக, இனப்படுகொலைக் குற்றங்களாக சர்வதேச தடைச்சட்டத்தின்படிக் குற்றச்செயலாகும்.


இது, ருவாண்டா பிராந்தியத்தில் நிகழ்த்தப்பட்ட சர்வதேச சட்டத்திற்கு முரணான இனப்படுகொலை மற்றும் பிற கடுமையான உரிமை மீறல்களுக்கு பொறுப்பான குற்றவாளிகளுக்கு எதிராக தீர்ப்பு வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையால் உருவாக்கப்பட்டிருந்ததுடன், இன்று வரை 27 குற்றவாளிகள் இனப்படுகொலை

இதற்கு மிகப்பெரிய உதாரணமாகும்.

இச்சட்ட வரம்புகளின் மத்தியிலேயே அண்மைய மியன்மார் றோகிஞ்சா படுகொலைகள், இலங்கை, ஆப்கானிஸ்தான், புருண்டி, லிபியா, யேமனில் இடம்பெற்ற/இடம்பெறும் வன்முறைகள் மற்றும் படுகொலைகள் பார்க்கப்படவேண்டும் என்பது மிகவும் அவசியமானதாகும்.

நறுக்கென

மீண்டும் கறுப்பு ஜூலையை ஏற்படுத்த இடமளிக்க வேண்டாம்' - மஹிந்த ராஜபக்ஷ



1983ஆம் ஆண்டு ஏற்பட்ட கறுப்பு லையை மீண்டும் ஏற்படுத்துவதற்கு இடமளிக்க வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவருமான மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதியின்மையை அடுத்து, முன்னாள் ஜனாதிபதி வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் பொறுமையுடனும், சிந்தித்தும் செயற்பட வேண்டும் என நாட்டு மக்களிடம் முன்னாள் ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த 21ஆம் தேதியன்று இலங்கையில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலை அடுத்து, தாய்நாடு மிகவும் மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் அரசாங்க புலனாய்வுதுறையின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தியமை மற்றும் தேசிய பாதுகாப்பு குறித்து உரிய அவதானம் செலுத்தாமை ஆகிய விடயங்களினாலேயே இந்த நிலைமை உருவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

• • • • • • • • • • •

இனவாதத்தைக் கொண்டே பிழைப்பு நடத்தும் சாத்தான்கள் அவ்வப்போது வேதங்களும் ஓதும்.

பிரதமருக்கு எதிராக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய சங்க சம்மேளனத்தின் தலைவர் ரஜவத்தே வப்ப தேரரால் இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே தெரிந்திருந்தும் அது குறித்து நடவடிக்கை எடுக்காமை, அரசாங்கம் என்ற ரீதியில் தமது பொறுப்புகளிலிருந்த விலகியிருந்தமை உள்ளிட்ட பல காரணங்களை முன்வைத்தே இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்கள் குறித்து பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் உள்ளிட்டவர்களுக்கு முன்னரே தெரிந்திருந்தும் நடவடிக்கை



எடுக்க தவறியதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமைக் குறிப்பிடத்தக்கது.

• • • • • • • • • • •

வன்முறைகளைத் தடுக்க வழிகளைத் தேடாமல், குற்றங் கண்டே நாட்டைச் சீரழிப்பார் சிலர்.


இந்தியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை நீடிப்பு

இந்தியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்களுக்கான 'ஈழம்'எனும் தனி நாடு அமைப்பதற்கான கோரிக்கையுடன் செயல்பட்ட விடுதலை புலிகள் அமைப்பு இந்தியாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டு அச்சுறுத்தல் விளைவிக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது.

கடத்த 2009ஆம் ஆண்டு இலங்கை ராணுவத்திடம் விடுதலை புலிகள் அமைப்பு தோல்வியடைந்த பிறகும் கூட, தனி ஈழத்தை அமைப்பதற்கான முயற்சிகளை உள்ளூரிலும், சர்வதேச அளவிலும் அந்த அமைப்பின் ஆதரவாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தியா முழுவதும் குறிப்பாக தமிழ் நாட்டில் விடுதலை புலிகளின் ஆதரவாளர்கள் தங்களுக்கான ஆதரவை திரட்டி வருகின்றனர். இது நாட்டின் பிராந்திய ஒற்றுமையைக் குலைப்பதால் இதன் மேல் உள்ள தடையை நீடிக்க் வேண்டி உள்ளது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது



அது மட்டுமல்லாமல் கடந்தகாலத்தில் விடுதலைப் புலிகள் ஆதரவாளர்கள் தமிழ்நாட்டில் காணப்பட்டதாகவும் அவர்கள் தடையை தாண்டி தங்கள் ஆதரவைப் பெருக்குவதாகவும் இந்திய கொள்கைகளை எதிர்ப்பதாகவும் தகவல்கள் வந்துள்ளது என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

• • • • • • • • • • •

மௌனித்த பின்பும் புலிகளைக் வைத்தே பிழைப்பு நடத்த வேண்டிய நிலை சிலருக்கு.

தமிழ் பிள்ளைகளை பலவந்தமாக அமைப்பில் இணைத்துள்ளார் சஹ்ரான்: சுமணரத்ன தேரர்

தமிழ் பிள்ளைகளை பலவந்தமாக அழைத்துச் சென்று தனது அமைப்பின் சஹறான் இணைத்துள்ளார் என்றும் இந்த விடயங்கள் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் மட்டக்களப்பு, மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவித்தார்.

"இலங்கையில் ஏற்பட்டுள்ள குண்டுத்தாக்குதல்களினால் அனைவரது இயல்பு வாழ்க்கையும் இன்று பாதிப்படைந்துள்ளது. இந்தப் பிரச்சினை ஏற்பட்டவுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு நாம் பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்திருந்தோம். சந்தேகத்தில் கைது செய்யப்படும் சந்தேகநபர்கள் அனைவரும் பிணையில் விடுவிக்கப்படுகிறார்கள். எப்படி இவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள்? என்பது பெரிய கேள்வியாகவே இருக்கிறது.

இவ்வாறான செயற்பாடுகளினால் தமிழர்களே பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். 30 வருட யுத்தம் காலமாக துன்பத்தில் இருந்த இந்த சமூகம் மீண்டும் அந்த நிலைமைக்குத் திரும்ப நாம் இடமளிக்க முடியாது.

இங்குள்ள தமிழ் பிள்ளைகளை பலவந்தமாக சஹறான் அழைத்துச்சென்று, தனது அமைப்பில் இணைத்துக்கொண்டுள்ளார் என்றும் தகவல் கிடைத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் காத்தான் குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால், இன்றுவரை அந்த பிள்ளைகளை கண்டுப்பிடிக்க முடியாதுள்ளது.


இது பாரதூரமான விடயமாகும்.

15 நாட்களுக்குள் இவ்விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுக்காவிட்டால் சட்டத்தை நாம் கையில் எடுப்போம்" என மங்களராமய விகாராதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

• • • • • • • • • • •

கொத்துக்கொத்தாகத் தமிழர்கள் கொல்லப்பட்டபோது, இந்தப் பேரன்பை எங்கே ஒளித்து வைத்தீர்கள் தேரரே?

சுடுவதற்கு ரணில் அனுமதி!



குழப்பங்களில் ஈடுபடுபவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்த ரணில் அனுமதித்துள்ளார். இதன்பிரகாரம் வன்முறையில் ஈடுபடுபவர்கள் மீது அதிகபட்ச பலத்தைப் பிரயோகிக்கவும், துப்பாக்கிச் சூடு நடத்தவும் சிறிலங்கா படையினருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் உருவாக்கப்பட்டுள்ள கூட்டு நடவடிக்கை மையத்தில் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை உயர்மட்ட இராணுவத் தளபதிகள் சந்தித்துப் பேசினர்.

சில அரசியல்வாதிகள் மீண்டும் 1983 ஜூலைக் கலவரம் போன்ற நிலையை உருவாக்க எத்தனிக்கின்றனர் என்று இராணுவ உயர் அதிகாரிகள் இந்தச் சந்திப்பின் போது, தெரிவித்துள்ளனர்.

அதற்குப் பதிலளித்த சிறிலங்கா பிரதமர், நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வர இராணுவத்தினர் அவசர கால விதிகளின் படி உள்ள அதிகாரங்களை அதிகபட்சமாக பயன்படுத்துமாறு கூறினார்.

இதன்படி வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்த முடியும்.

• • • • • • • • • • •

அனுமதியின்றிச் சுட்டாலும் இலங்கைச் சட்டங்கள் தண்டனை வழங்கவா போகின்றன?

மேகத்துக்குள் மறைந்தால் ராடாரில் போர் விமானம் தெரியாது என்கிறார் மோடி

அண்மையில் அவர் அளித்த நேர்காணல் ஒன்றில் பிப்ரவரியில் இந்திய போர் விமானங்கள் நடத்திய ஆகாயத் தாக்குதல் பற்றி பேசியிருந்தார்.

பிப்ரவரி மாதத்தின்போது வானத்தில் மேகங்கள் அதிகமாக இருக்கும் என்பதால், இந்தியப் போர் விமானங்களைப் பாகிஸ்தானிய ரேடார் சாதனங்களால் கண்டுபிடிக்க முடியாது. அதனால்தான், அப்போது தாக்குதல் நடத்துவதற்குத் தாம் உத்தரவிட்டதாகத் திரு. மோடி குறிப்பிட்டிருந்தார்.

பாரதிய ஜனதா கட்சி திரு. மோடி கூறியவற்றை டுவிட்டரில் பதிவேற்றம் செய்த சற்று நேரத்தில் அகற்றியது.

நிபுணர்களை மேற்கோள் காட்டி இந்திய ஊடகங்கள் மோடியின் இக்கருத்தைக் கேலி செய்து வருகின்றன.

ரேடார் சாதனங்கள் எப்படிச் செயல்படுகின்றன என்பதுபற்றித் திரு. மோடிக்கு யாரும் விளக்கமளிக்கவில்லை போலிருக்கிறது என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

• • • • • • • • • • •


ஆன்மீகத்தில் காட்டும் அக்கறையைக் கொஞ்சம் அறிவியலை அறிந்து கொள்வதிலும் காட்டுங்கள் மோடியார்.

HUMAN RIGHTS AND LABOUR LAW EXPERTS



- உங்களது வேலைத்தளத்தில் சமத்துவம் மீறப்படுகிறதா?
- உங்களை பிரித்துப் பார்க்கிறார்களா?
- அனாவசியமாக உங்களை வதைக்கிறார்களா?
- காரணமஃன்றி உங்களை விலக்கினார்களா?
- இவ்வாறான செயல்கள் உங்களது நிறம், இனம், மதம், மொழி அல்லது பிறப்பிடம் போன்ற காரணங்களை வைத்து நடக்கிறதா?

மனித உரிமை மீறல்கள் மற்றும் வேலைத்தளம் சார்ந்த அனைத்து விடயங்கள் தொடர்பான சட்டத்துறையில் முழுமையான தேர்ச்சிபெற்ற சட்ட நிபுணருடன் தமிழில் உரையாடுவதற்கு உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள். மனித உரிமை மீறல், சரியான ஊதியம், வ்ழங்கப்படாமை, சரியான Severance வழங்கப்படாமை, அசாதாரண இடமாற்றம், வேலைநேரம் குறைப்பு, சரியான ROE மறுப்பு நோய் மற்றும் விபத்துக்கள் காரணமாக வேலை மறுப்பு முதலான வேலைத்தலம் சார்ந்த அனைத்து விடயங்களுக்கும் சரியான நட்ட ஈடுகளை பெற்றுத்தர எம்மால் முடியும்.



We have over 30 years of combined experience, both inCanada and abroad. Call us for a free initial consultationin Tamil, Sinhala or English.

AYOOB HAMEED MBA, LL B (Colombo)

(Licensed by the Law Society of Upper Canada to provide Leagal Service in Ontario)

Direct: **647 • 405 • 7774**

HURLIIS LAW 3033 Palstan Road #101, Mississauga, ON, L4Y 4E7 Phone: 905.848.6726 / E-mail: info@hurliislaw.ca

FREEDOM 55 FINANCIAL

Division of London Life Insurance Company

நூற்றிநாற்பது வருடங்களுக்கு மேலாக கனடாவில் சேவையாற்றி வரும் ஸ்தாபனம் **London Life**

நம்பிக்கையே வாழ்க்கை!

இருபது வருடங்களுக்கு மேலாக ஒரே நிறுவனத்தின் காப்புறுதியாளர். 1000க்கு மேற்பட்டவர்களுக்கு காப்புறுதி செய்து 50க்கு மேற்பட்டவர்களுக்கு காப்புறுதி நிதியைப் பெற்றுக் கொடுத்தவர். உங்கள் காப்புறுதித் தேவையை நிறைவேற்ற அழையுங்கள்



- ☞ வீட்டுக்கடன் அடமானக் காப்புறுதி
- ☞ ஆயுள் காப்புறுதி (எல்லா வயதினருக்கும்)
- ☞ சேமிப்புத் திட்டம் **(RRSP)**
- ☞ உடல் ஊன, கொடிய நோய் காப்புறுதி
- ☞ உயர் கல்வித் திட்டம் **(RESP)**
- ☞ வீடு வாங்கக் கடன் வசதி
- ☞ வேலை ஓய்வு வருமானத் திட்டம் **(RIF)**
- ☞ சகல வைத்திய பல் உயிர்சேத காப்புறுதி
- ☞ கம்பனி ஊழியர் குழுக் காப்புறுதி
- ☞ பிரயாண, விடுமுறை வருவோர் காப்புறுதி

ஆயுள்காப்புறுதி: மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி (எல்லா வயதினருக்கும்)

RRSP கடன் வசதிகள் குறைந்த வட்டி வீதத்தில் செய்து கொடுக்கப்படும்

உங்கள் வளமான எதிர்காலத்திற்கு இன்றே திட்டமிடுங்கள்

இனிமேலும் பின்போடாதீர்கள்

மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்

பாலா ஜெகநாதன் பாலசுந்தரம் B.Eng, CHS

தேசியத் திறமை விருது பெற்றவர்

300- 1465 PICKERING PARKWAY, PICKERING, ON. L1V 7G7

Office: **905 831 3600** Ext. **4409** - Fax: **905 831 3171** - Cell: **416 518 9489**

E-mail: bala.balasundaram@f55f.com

Now representing Manulife, Sunlife, Canada Life & Greatwest Life



கண்முன்னே நடந்த உண்மைகள் பொய்யாகுமா?

கொத்துக் குண்டுகளை பயன்படுத்தவில்லை மறுக்கும் அரசு

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்ட கொத்தணி குண்டுகள் - க்ளாஸ்டர் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளமைக்கான ஆதாரங்கள் வெளிவந்தும் அதற்கான விசாரணைகளை இதுவரை மேற்கொள்ளவில்லை என்பது இராணுவத்தினரை பாதுகாக்கும் செயற்பாடு என்பது ஒருபுறம் இருக்க தடை செய்யப்பட்ட இந்த குண்டுகளை வழங்கிய நாடுகளை பாதுகாப்பதற்காக விசாரணையை கிடப்பில் போட்டுள்ளார்கள்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரில் க்ளாஸ்டர் குண்டுகள் பயன்படுத்தியமைக்கு வலுவான ஆதாரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதாவது குண்டுவிழுந்து வெடித்த இடங்கள் உட்பட அந்தக் குண்டில் காயப்பட்டவர்களின் உடலில் பரவியுள்ள நஞ்சு தொடக்கம் இந்தக் குண்டுதான் என்பதை ஆதார பூர்வமாக வெளிப்படுத்தியுள்ளது.

போர் இடம்பெற்ற பகுதிகளில் மிதிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபடும் சர்தேச மனிதாபிமான தொண்டு நிறுவனங்களை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்டிருக்கும் இந்தக் குண்டு தொடர்பான செய்திகள் பலரின் கவனத்தையும் பெற்றிருக்கிறது.

இந்நிலையில், இறுதிப் போரின்போது க்ளாஸ்டர் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதை நேரில் பார்த்த அந்தக் குண்டுகளின் பாதிப்பை உணர்ந்தவர்கள் முன்வந்து சாட்சியமளிப்பார்கள் என்று எதிர்பார்ப்பது முடியாத காரியம். அவர்களுக்கான உயிர் அச்சுறுத்தல் மேலும் அதிகரிக்கும் என்ற காரணத்தில் வெளியே வந்து சொல்ல பயப்படுகிறார்கள்.

இந்த கொத்துக் குண்டு விவகாரம் 2012 மற்றும் 2014 களில் பேசப்படட்டன. இன்று 7 வருடங்கள் கடந்த நிலையில் இந்த தடை செய்யப்பட்ட குண்டு தொடர்பில் முதற்கட்ட விசாரணையைக்கூட மேற்கொள்ளாத நிலையில் பேசு பொருளாக மட்டும் இருக்கிறது.

ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கண்ணிவெடிகள் தொடர்பான தொழிநுட்ப ஆலோசகர் அலன் போஸ்டன் (Allan Poston) சிறிலங்காவின் கொத்துக் குண்டு பாவனை தொடர்பில் ஐ.நாவுக்கு தகவல் தந்திருந்தார்.

பின்னர் அமெரிக்க அதிகாரிகள் மற்றும் போர்க்குற்ற விடயங்கள், உலகளாவிய குற்றவியல் நீதி திணைக்களம் என்பவற்றிற்கான அதிகாரி ஸ்டெபன் ஜெ.ராப் (Stephen J. Rapp) ஆகியோரைச் சந்தித்த மன்னார் மற்றும் யாழ் ஆயர்கள் இவை தொடர்பில் பேசியிருந்தனர்.

சிறிலங்காப் படையினரின் கொத்துக் குண்டுகள் மற்றும் இரசாயன ஆயுதப் பாவனை தொடர்பில் சர்வதேச போர்க்குற்ற விசாரணை மேற்கொள்ளப் படவேண்டும் என்று அவர்கள் கோரியிருந்தனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சிறிலங்கா தரப்பு கொத்துக் குண்டுகளை சிறிலங்காப் படையினர் கொள்வனவு செய்யவில்லை என்றும் தம்மிடம் இல்லாத ஒன்றை தாம் எப்படி பயன்படுத்தியிருக்க முடியும் என்றும் கூறுகிறது. அப்படி என்றால் இறுதியுத்தத்தில் வன்னிப் பிரதேசங்களில் விழுந்த குண்டுகள் யாருடையது.

இறுதிக் கட்ட போரின்போது வன்னியில் வாழ்ந்த அனைத்து மக்களுக்கும் சிறிலங்காப் படையினர் கொட்டிய இந்த கொத்துக் குண்டுகள் பரிச்சையமானவையே.

முதலில் கேட்கும் ஒற்றை வெடிப்பொலி, காவுகுண்டு வெடித்து உள்ளிருக்கும் நூற்றுக்கணக்கான சிறிய குண்டுகளை விதைப்பதைக் குறிக்கும். பின்னர் சில வினாடிகளில் சிதறிய குண்டுகள் வெடிக்க ஆரம்பிக்கும்.

இந்த சத்தம் உச்சத் தொனியில் "ரம்ஸ்" வாசிப்பதுபோல் இருக்கும். நூற்றுக்கணக்கான சிறுகுண்டுகளில் இருந்து ஆயிரக்கணக்கான சிதறு துண்டுகள் சிதறும். விளைவு மிகவும் மோசமானது.

இறுதிப் போரில் கொத்துக் குண்டுகளால் கொல்லப்படட படுகாயமடைந்த மக்கள் ஏராளம். இன்றும் கொத்துக் குண்டுகளால் படுகாயமடைந்த பலர் இரத்த சாட்சியங்களாய் உள்ளார்கள்:

பாகிஸ்தானிய ஆயுத ஏற்றுமதி அமைப்பின் இயக்குனர் மேஜர் ஜெனரல் முஹமட் பாஷருக் 2008 ஜூலை பாகிஸ்தானின் டோன் (The Dawn) பத்திரிகைக்கு ஒரு செவ்வி வழங்கியிருந்தார்.

> **முதலில் கேட்கும் ஒற்றை வெடிப்பொலி, காவுகுண்டு வெடித்து உள்ளிருக்கும் நூற்றுக்கணக்கான சிறிய குண்டுகளை விதைப்பதைக் குறிக்கும். பின்னர் சில வினாடிகளில் சிதறிய குண்டுகள் வெடிக்க ஆரம்பிக்கும். இந்த சத்தம் உச்சத் தொனியில் "ரம்ஸ்" வாசிப்பதுபோல் இருக்கும். நூற்றுக்கணக்கான சிறுகுண்டுகளில் இருந்து ஆயிரக்கணக்கான சிதறு துண்டுகள் சிதறும். விளைவு மிகவும் மோசமானது.**

அதில் பாகிஸ்தானின் ஆயுத ஏற்றுமதி மும்மடங்காக அதிகரித்துள்ளதாகவும் அது 300 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளதாகவும் குறிப்பிடடார்.

வெடிபொருட்கள் ரொக்கெட் லோஞ்சர்கள் தோளில் வைத்து ஏவும் வானெதிர்ப்பு ஏவுகணைகள் போன்ற வகையில் சிறிலங்கா தம்மிடமிருந்து கொத்துக் குண்டுகள் ஆழ ஊடுருவும் குண்டுகள் ரொக்கெட்கள் மற்றும் ஆளில்லா கண்காணிப்பு விமானங்கள் என்பனவற்றை கொள்வனவு செய்தது என்றும் தெரிவித்தார்.

இந்த விடயம் சிறிலங்காப் படையினர் கொத்துக் குண்டுகளை கொண்டிருந்தனர் என்பதை உறுதிசெய்யும் வலுவான ஆதாரமாகும்.

அடுத்து சிறிலங்கா ரசியா உக்கிரேன் போன்ற நாடுகளில் இருந்தும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்திருந்தது. சிறிலங்காப் படையினரால் வீசப்பட்ட கொத்துக் குண்டுகளில் ரசியத் தயாரிப்பு குண்டுகளும் (Russian made OFAB-500 cluster bombs) இருந்தமை ஆதாரபடுத்தப் பட்டுள்ளது.

ஐ.நாவின் கண்ணிவெடி தொடர்பான நிபுணர்கள் தமது நடவடிக்கைகளின் போது வன்னியில் சிறிலங்கா படையினரால் ஏவப்பட்ட கொத்துக் குண்டுகளின் பாகங்களை தாம் மீட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

சிறிலங்காப் படைகள் சர்வதேச ரீதியில் தடைசெய்யப்படட இத்தகைய கொத்துக் குண்டுகளை மாதிதிரமின்றி தடைசெய்யப்பட்ட வேதியல் ஆயுதங்களையும் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தியுள்ளன.

வன்னியில் அப்போது பணியாற்றிய வைத்தியர்களின் குறிப்புகளும் "சாட்சியங்கள் இல்லாத போர்" (War Without Witness) அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்ட சுயாதீனமான விசாரணையின் முடிவுகளும் பிரதமரின் கூற்றை ஆணித்தரமாக மறுக்கின்றன.

சிறிலங்காப் படையினரால் வேதியல் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டமையும் அதனால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டமையும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த ஆரம்பகட்ட முடிவுகள் இங்கிலாந்தின் அனுபவம் வாய்ந்த வைத்தியர் ஒருவரால் மறுசீராய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மருத்துவ மற்றும் வேதியல் அறிக்கையின் படி காயங்களில் Triethanolamine ($C_6H_{15}NO_3$), Phosgene (CCl_2O) போன்ற வேதியல் பொருட்கள் காணப்பட்டுள்ளன.

சிறிலங்காவின் போர்க்குற்றம் தொடர்பில் பல்வேறு சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ள இந்த வேளையில் அதற்கு வலுச்சேர்க்கக்கூடிய கொத்துக் குண்டுப் பாவனை மற்றும் இரசாயன ஆயுதப் பாவனை என்பன தொடர்பில் வலுவான குரல்கள் சர்வதேச அரங்கில் எழுப்பப் படவேண்டும்.

காடசிப்படுத்தல் நிகழ்வுகளில் இவை தொடர்பான ஆதாரங்கள் இடம்பெறுவதை உறுதிசெய்ய வேண்டும்.

இந்த இனவழிப்புக்கான நீதி தேடலானது தமிழரின் உணர்வு வெளிப்பாடு என்ற வரையறைக்குள் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுவிடாது அனைத்து வழிகளிலும் அதற்கான முனைப்பை முன்னெடுக்க வேண்டும்.

கொத்தணி குண்டுகள் - க்ளாஸ்டர் குண்டுகள் நச்சு வாயுக்கள் என பல தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் தமிழர்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டன, வைத்தியசாலை, முகாம்கள், பாடசாலைகள், பாதுகாப்பு வலையம் என அறிவித்த பகுதிகள் அனைத்தையும் தேடி தேடி இக்குண்டுகள் பாவிக்கப்பட்டன. சிங்களத்தின் நோக்கமே தமிழர்களை முற்றாக அழிக்க வேண்டும், பாரிய இனவழிப்பு!!

ஆனந்தபுரம், மற்றும் அனைத்து இடங்களிலும் எமது போராளிகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத சிங்களமும் சர்வதேசமும் இப்படியான தடை செய்யப்பட்ட்ட ஆயுதங்களை பயன்படுத்தியே அழித்தது, அனைத்தும் தடைசெய்யப்படட ஆயுதங்கள், சர்வதேசத்தின் உதவிகள், என அனைத்து படைபலத்துடனே இம்மண்ணை ஆக்கிரமித்தது.

சிறீலங்கா அரசும் உலக நாடுகளான வல்லரசு நாடுகளும் சேர்ந்து மக்கள் மீது தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் மூலம் கொன்று குவித்தது.

நேருக்கு நேர் நின்று மோத முடியாத போது பல நாடுகளின் உதவியாலும் துரோகிகளின் உதவியாலும் எம்மை முள்ளிவாய்க்கால் வரைகொண்டு சென்றார்கள்.

18 தமிழின அழிப்பு நினைவு நாள்
சிறப்புக் கட்டுரை

இன அழிப்பின் முகம்

முள்ளிவாய்க்கால்

இந்த நூற்றாண்டின் மிகப்பெரும் இனவழிப்பு நடந்த இடம் முள்ளிவாய்க்கால் காலத்துக்கு காலம் பல படுகொலைகளை எதிர்கொண்ட ஈழத்தமிழினம் சந்தித்த மிகப்பெரும் அழிவு - அவலம் முள்ளிவாய்க்கால் இங்கு நடந்தேறிய அழிவுகள் - இழப்புகள் - அவலங்கள் ஏற்படுத்திச் சென்ற வடுக்கள் - வலிகள் - ரணங்கள் - வேதனைகள் - துன்ப துயரங்கள் இன்னமும் நம்மைவிட்டு விலகிவிடவில்லை - அதிலிருந்து நாம் மீண்டுவிடவுமில்லை.

போர் முடிவடைந்து 10 ஆண்டுகள் நிறைவடைந்தும் கூட அது ஏற்படுத்திய வடுக்களையும் - போர் தந்த அவலங்களையும் இன்னமும் நம்மினம் சுமந்து கொண்டு தான் நிற்கிறது.

முள்ளிவாய்க்கால் படுகொலையை - தமிழ் இனத்தின் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட பேரழிவை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் எனப் பெயரிட்டு நினைவு கூருகிறது நம் இனம். கூடவே தனது வேணவாவையும் ஆற்றிக் கொள்கின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒவ்வொரு ஈழத்தமிழனும் தனது கடமையாகக் கொண்டிருக்கிறான் என்பதில் மாற்றுக் கருத்தேயில்லை. எமது இனத்திலேயே உரிமைப் போராட்டத்தை ஆதரித்தோரும் சரி - எதிர்த்தோரும் சரி போரில் படுகொலையான அப்பாவிப் பொதுமக்களை நினைவேந்துவதை எதிர்க்கவில்லை. நினைவு கூரவும் தவறவில்லை.



முள்ளிவாய்க்கால் நினைவுகூரல் நம்மவர்கள் சிலரின் கடமை ஏற்பாடு செய்வதுடனும் பலரின் கடமை நிகழ்வில் பங்கேற்று வெகுஜன ஊடகங்களையும் தாண்டி அதிகம் நுகரப்படும் சமூகவலைத்தளங்களில் படங்கள் - பதிவுகள் - பகிர்வுகளுடன் முடிந்து போய்விடுகிறது.

நம்மினத்துக்கு ஏற்பட்ட பெரும் அழிவுக்கு - நாம் கொடுத்த ஈடுசெய்ய முடியாத பேரிழப்புக்கு - போரின் வடுக்களையும் வலிகளையும் - ரணங்களையும் இன்னமும் சுமந்து கொண்டிருக்கும் நம்மில் பலரும் நாம் செய்யும் கடமை இவ்வளவுதானா...?

ஜேர்மனியை ஹிட்லர் ஆட்சி செய்த காலம் யூத இனத்துக்கு எதிராக வெறுப்பை உமிழ்ந்த ஹிட்லர் யூதர்கள் மீது கொடூரமான சித்திரவதைகளை கட்டவிழ்த்து விட்டதுடன் குழந்தைகள் சிறுவர்கள் இளைஞர்கள் முதியவர்கள் ஆண்கள் பெண்கள் என வகைதொகையின்றி ஹிட்லரின் படைகள் யூதர்களை கொன்று குவித்தது.

ஜேர்மனி தனது சாம்ராஜ்யத்தை விஸ்தரித்த போது இலட்சக் கணக்கானோரைக் கைதுசெய்தார்கள். இவ்வாறு பிடிபட்டவர்கள் ஹிட்லரின் படைக்கு எதிராகப் போரிட்டவர்களாகவோ அல்லது எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களாகவோ அல்லது சதிப் புரட்சி செய்தவர்களாகவோ இருக்க வேண்டும் என்ற அவசியம் இருக்கவில்லை.

குறைந்தபட்சம் ஒருவர் யூதராக இருந்தால் மட்டும் போதும் அவர் கைது செய்யப்படுவதற்கும் தடுத்துவைக்கப்படுவதற்கும் சித்திரவதைகளுக்கு உள்ளாவதற்கும் கொல்லப்படுவதற்கும்.

கைது செய்யப்பட்ட யூதர்கள் வாகனங்களில் நெருக்கி ஏற்றப்படுவார்கள் அந்த வாகனங்கள் சிறப்பு வதை முகாம்களுக்கு யூதர்களை கொண்டுசெல்லும் அங்கு அவர்கள் வேலை வாங்கப்படுவார்கள்.

அடிமைகளான அவர்களை சாதாரணமாக வேலை வாங்க மாட்டார்கள் மிகக் கடுமையாக வாங்குவார்கள் அவர்களுக்கு சரியான போதிய உணவு வழங்க மாட்டார்கள். ஒருவருக்கு அதிகபட்சம் ஒரு பிடி உணவு கிடைத்தால் அதுவே அதிகம். தாகத்துக்கு தண்ணீர் கொடுக்கமாட்டார்கள். நித்திரைக்கு நேரமே ஒதுக்கமாட்டார்கள். அவ்வளவு கடுமையான வேலை வாங்கப்பட்டார்கள். பெண்கள் என்றால் பாலியல் அடிமைகளாக ஆக்கப்பட்டார்கள்.

கடும் வேலை பசி தாகம் என வதைக்கப்படுபவர்களை ஹிட்லரின் படைகள் விதம் விதமாக சித்திரவதைகள் செய்யும் வதை முகாமில் வேலை செய்ய முடியாதவர்களுக்கு மரணம் தான் முடிவு அதுவும் சாதாரணமாக இருந்துவிடாது. சிலவேளைகளில் யூதர்களை எண்ணிக்கை கணக்கின்றி ஓரிடத்தில் அடைப்பார்கள். விசவாயுவை நிரப்புவார்கள் துடித்து விழுந்து மரணிப்போரை ரசிப்பார்கள் அல்லது உயிருடன் எரிப்பார்கள். இறுதியாக யூதர்கள் அணியும் காப்புகளை எண்ணி இத்தனை பேர் இறந்தனர் என்று தகவல் அனுப்புவார்கள்.

இப்படி ஹிட்லரின் படைகளால் இவ்வாறு கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டவர்கள் 90 இலட்சம் தொடக்கம் ஒரு கோடியே 10 இலட்சம் பேர் வரை இருக்கலாம். இதில் யூதர்களின் எண்ணிக்கை மட்டும் 60 இலட்சம் பேர். இத்தகைய பெரும் இனவழிப்பை சந்தித்த இனம் இரண்டாம் உலகப் போர் முடிந்த பின்னர் தனக்கென ஒரு தாயகத்தை உருவாக்கியது. அதுதான் இன்றைய இஸ்ரேல். யூதர்களுக்காக இஸ்ரேல் உருவாகி சரியாக 8 ஆண்டுகளில் அதாவது 1953 இல் (Yad Vashem) யாட் வாஷெம் என்னும் ஓர் ஆவணக் காப்பகத்தைத் திறந்தார்கள்.

யூதர்கள் எப்படி படுகொலை செய்யப்பட்டார்கள் எத்தகைய சித்திரவதைகளை அனுபவித்தார்கள். படுகொலையானவர்களின் விபரம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விபரம் அவர்கள் தொடர்பான படங்கள் படுகொலைகள் தொடர்பான ஆவணங்கள் அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் யூதப் படுகொலைகள் பற்றிய நூல்கள் காணொளிகள் உறவுகளின் சாட்சியங்கள் என அனைத்தும் ஒருங்கிணைந்துள்ளது யாட் வாஷெம் ஆவணக் காப்பகத்தில்.

இப்போதும் கூட யாட் வாஷெமில் மாணவர்கள் ஆராய்ச்சியாளர்கள் வரலாற்றாசிரியர்கள் யூதப் படுகொலைகள் யூதர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்று அவற்றை ஆவணப்படுத்தி வருகிறார்கள். இஸ்ரேலியர்கள் ஒவ்வொருவருக்கும் தங்கள் இனம் எப்படிப் பட்ட அழிவைச் சந்தித்தது என்பதை யாட் வாஷெம் சொல்லிக்கொண்டே இருக்கிறது.

அவர்களுக்கு மட்டுமல்ல இஸ்ரேல் செல்லும் ஒவ்வொருவரும் யாட் வாஷமிற்கு செல்கிறார்கள். உலகின் முகப் பெரிய இனவழிப்பை யூதர்கள் சந்தித்த துன்பங்களை ஆவணங்களாக இன்றும் சொல்கிறது. நாளையும் சொல்லிக் கொண்டே இருக்கும்.

நம்மினத்துக்கு ஏற்பட்ட பெரும் அழிவுக்கு - நாம் கொடுத்த ஈடுசெய்ய முடியாத பேரிழப்புக்கு - போரின் வடுக்களையும் வலிகளையும் - ரணங்களையும் இன்னமும் சுமந்து கொண்டிருக்கும் நம்மில் பலரும் நாம் செய்யும் கடமை இவ்வளவுதானா...?

இதுவும் இரண்டாம் உலகப் போரில் நடந்தது தான். மேற்கில் ஜேர்மனி விழும் நிலையில் இருக்கிறது. ஆனால் ஆசியாவில் நிலைமை தலைகீழ். ஜேர்மனியுடன் அணி சேர்ந்து போரிட்ட ஜப்பான் உச்ச வெற்றி பெறும் நிலையில் இருக்கிறது. அணுகுண்டைக் கண்டுபிடித்த அமெரிக்கா அது. ஏற்படுத்தக் கூடிய விளைவை பாதிப்பை விஞ்ஞான ரீதியில் பரிசோதித்து விட்டது. ஆனால் அதன் விளைவை நேரடியாகக் கண்டறிய வேண்டும் என்ற ஆசையில் இருந்தது. இதற்கான பரிசோதனைக் களமாக ஜப்பானைத் தீர்மானித்தது.

ஜப்பானில் ஹிரோசிமா நாகசாகி நகரங்கள் மீது அணுகுண்டுகள் வீசப்படுகின்றன. அதிகமல்ல இரண்டே இரண்டு குண்டுகள் தான். ஹிரோசிமாவில் 90.000 - 166.000 பேர் வரையிலும் நாகசாகியில் 60.000 - 80.000 பேர் வரையிலும் உடன் மரணித்தார்கள்.

இரு நகரங்களிலும் (இன்றுவரை அணுகுண்டு தந்த பாதிப்பு முடியவில்லை நீள் கதையாகத் தொடர்கிறது.) எந்தக் கட்டடமும் இல்லை. வெறும் சாம்பல் மேடே காட்சியளிக்கிறது. ஆனாலும் பல சேதங்களைக் கண்டு எழும்புக் கூடாக நிற்கிறது ஒரு கட்டடம். அதுதான் ஜென்போகு டாம். நிமிர்ந்து நின்றாலும் போரின் வடுக்களை சுமந்து நிற்கிறது.

பேரிழப்பை சந்தித்து மீண்டுவிடுகிறார்கள் ஜப்பானியர்கள். உழைப்புக்குப் பெயர்பெற்ற அவர்களின் கடின உழைப்பால் ஹிரோசிமாவும் நாகசாகியும் மீண்டும் எழுகிறது. முன்னிருந்ததை விடவும் கம்பீரமான நகரங்களாக் அவை எழுகின்றன. ஆனாலும் ஒன்றுமட்டும் மாறவில்லை. அது அணுகுண்டையும் தாங்கி நின்ற ஜென்போகு டாமின் தோற்றம்.

ஆம் தங்களின் அழிவின் அடையாளமாக அமெரிக்கா தங்களுக்கு இழைத்த அநீதியின் வடிவமாக உயிரிழந்த இலட்சக்கணக்கான மக்களின் நினைவாக இன்றும் அது அப்படியே நிற்கிறது. நிற்பது மட்டுமல்ல ஜப்பானின் வருங்காலத்துக்கு தனக்கு நேர்ந்த கொடுமையை அது சொல்லிக் கொண்டிருக்கிறது. ஜப்பானைச் சுற்றிப் பார்க்கச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு தங்கள் நாட்டுக்கு நேர்ந்த அழிவை இழப்பை அது சொல்லிக் கொண்டே இருக்கிறது. அடுத்த தலைமுறைக்கும் தனக்கு நேர்ந்த கொடுமைகளை அது சொல்லிக் கொண்டே இருக்கும்.

ஓர் இனம் நாடு சந்தித்த பேரழிவை எப்படி நாம் ஆவணப்படுத்த வேண்டும் என்பதை யாட் வாஷம். ஜென்போகு டாம் ஆகியவை நமக்கு கற்றுத் தருகின்றன. ஆனால் நாம் போர் ஆவணப்படுத்தலில் எவ்விதம் இருக்கிறோம்?

1981 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக சிங்கள ஆதிக்கவெறி பற்றி எரிந்த உச்ச தருணம் அது. தென்னிலங்கையில் இருந்து அமைச்சர் காமினி திஸநாயக்கவும் காடையர்கள் குழுவும் ரயில்களில் வந்து இறங்குகின்றனர். ஆங்காங்கு பற்ற வைக்கப்படுகிறது.

இனவாதத் தீ பொலிஸார் இராணுவத்தினரின் அமைதியான அனுமதியுடன் தமிழர்களின்



சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. உயிர்கள் பலியெடுக்கப்படுகின்றன. தமிழர்களின் கல்விச் சொத்தான யாழ்.பொது நூலகம் தீயில் பொசுங்கிப் போகின்றது. சுமார் 96 ஆயிரம் புத்தகங்கள் சாம்பலாகின. இவற்றில் பல மீளப்பெற முடியாத மூல நூல்கள் ஏட்டுச் சுவடிகளும் அடக்கம்.

எல்லாம் முடிந்து எழும்புக் கூடாக நிற்கிறது நூலகம். 2001 இல் ஆட்சியில் அமர்கிறது ஐக்கிய தேசியக் கட்சி.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

முன் பக்கத் தொடர்ச்சி...

தமிழர்கள் மத்தியில் அக்கட்சிக்கு ஏற்பட்ட மாறாத கறைகளின் சாட்சியமாக தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அழிவின் அநீதிகளின் ஆதாரமாக நிற்கும் எரியுண்ட யாழ்.பொது நூலகத்தை மீள அமைக்கத் துடிக்கிறது ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம். இந்த முடிவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் பெரும் தடையாகின்றனர். அருகில் இருக்கும் அரச காணியில் நூலகம் புதிதாக அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலுவாக முன் வைக்கப்படுகின்றது.

அனைத்து எதிர்ப்புகளையும் மீறி நூலகம் திருத்தியமைக்கப்படுகின்றது. இந்த சாட்சிய அழிப்புக்கு அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி அப்போதைய யாழ்.மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் ஆகியோர் துணை நின்றனர்.

மாதங்களுக்கு மேலாக எந்த உணவுப் பொருளுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

அரசாங்கம் தொடுத்த பட்டினிப் போரால் பல குழந்தைகள் இறந்தன. பிறந்து உயிர் தப்பிய இறந்து பிறந்த பிறந்த சில நாள்களிலே உயிரிழந்த குழந்தைகளும் மீறித் தப்பிய குழந்தைகள் எறிகணைத் தாக்குதல்களில் கொல்லப்பட்டமையுமே அதிகம்.

பால்மாவுக்காகவும் விடுதலைப் புலிகள் கொடுத்த கஞ்சிக்காக காத்துக் கிடந்த சிறுவர்களையும் பொதுமக்களையும் விமானத் தாக்குதல்கள் எறிகணை வீச்சுகள் மூலம் கொன்று குவித்தது இராணுவம்.

சுமார் மூன்றரை சதுரகிலோ மீற்றர் பகுதிக்குள் இரண்டரை தொடக்கம் மூன்று இலட்சம் பேர் நிறைந்து இருந்தார்கள். இராணுவம் சுற்றி வளைத்து நின்றது. தாக்குதலால் தினமும் மரணங்களும் அவல ஒலிகளும் நிறைந்த முள்ளிவாய்க்கால் யுத்தபூமி



எரியூட்டப்பட்ட நாளில் இருந்து சுமார் 20 ஆண்டுகள் தமிழின அழிப்பை தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட போரை தமிழர் மீதான அடக்குமுறையை ஓர் இனத்தின் புலமை அழிப்பை இனத்தின் சந்ததிகளுக்கு பறைசாற்றிக் கொண்டிருந்த எரியுண்ட நூலகம் இன்று வரலாற்றை மறைத்துப் பொலிவுடன் நிற்கின்றது. இந்த வகையில் நாம் வரலாற்று அழிப்பை ஆவணமாக்கும் சந்தர்ப்பத்தை தொலைத்த இனமாக நிற்கிறோம்.

அவலங்கள் நிறைந்த பூமியானது.

எல்லாம் முடிந்த பின்னரும் முள்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டு மீண்டும் அவலங்களைச் சந்தித்த மக்கள் சுமார் 2 ஆண்டுகளின் பின்னரே சொந்த இடங்களில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டார்கள்.

முள்ளிவாய்க்கால் மக்களுக்கு அந்த சந்தர்ப்பம் மூன்றாண்டுகளுக்கு பின்னரே கிடைத்தது. போரில் இறந்த தங்கள் உறவுகளுக்கு உயிரிழந்த இடங்களில் கடமைகளைச் செய்ய அவர்களை நினைவுகூர

பேரிழப்பை சந்தித்து மீண்டுவிடுகிறார்கள் ஜப்பானியர்கள். உழைப்புக்குப் பெயர் பெற்ற அவர்களின் கடின உழைப்பால் ஹிரோசிமாவும் நாகசாகியும் மீண்டும் எழுகிறது. முன்னிருந்ததை விடவும் கம்பீரமான நகரங்களாக அவை எழுகின்றன. ஆனாலும் ஒன்றுமட்டும் மாறவில்லை. அது அணுகுண்டையும் தாங்கி நின்ற ஜென்போகு டாமின் தோற்றம்.

வரலாற்று நீட்சி இப்போது எமக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை அளித்துள்ளது. எமது நீண்ட கடின வலிய ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் மௌனித்துப் போனது. எங்கள் உரிமைப் போராட்டத்தை மௌனிக்கச் செய்ததில் இராணுவமும் அரசும் வெற்றிபெற்றது.

அதற்காக அது கையாண்ட உத்திகளால் மூன்றரை இலட்சத்துக்கு அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் பேரவலங்களைச் சந்தித்தார்கள். போரின் இறுதி நாட்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 40 ஆயிரத்தை எட்டும். இறுதிப் போரில் மட்டும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கலாம் என கூறப்படுகிறது. அதிகமாக மட்டும் உயிர்கள் பலிகொள்ளப்பட்டன. இதிலும் பல மடங்கு தொகையினர் காயங்கள் அவயவங்கள் இழப்புக்கு உள்ளாகினர்.

போர் தொடங்கிய காலம் தொட்டு மூன்றரை இலட்சம் பேருக்கு சில நூறுபேருக்குப் போதுமான உணவைக் கொண்டு செல்லவே அனுமதிக்கப்பட்டது. அதுவும் இறுதி ஆறு

அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. 2015 ஆட்சி மாற்றத்தின் பின்னரே இது சாத்தியமானது.

இந்த சாத்திய காலத்தைப் பயன்படுத்தி முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் ஒரு பகுதியை ஆவணமாக்கும் நடவடிக்கையை நாம் செய்யத் தவறிவிட்டோம். இப்போது நினைவேந்தல் செய்ய ஆரம்பித்து 4 ஆண்டுகள் கடந்தும் முள்ளிவாய்க்கால் பெரிய மாற்றத்தை சந்திக்கவில்லை. அவலங்களைச் சந்தித்த போரின் வடுக்களை சுமந்த பூமியின் நிலை இன்னமும் மாறிவிடவில்லை. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை யார் நடத்துவது எனப் போட்டியிடுவோர் முள்ளிவாய்க்கால் பூமியை ஆவணப்படுத்த முன்வரவேண்டும்.

தாயகத்திலும் உலகம் முழுவதும் பரந்துள்ள வரலாற்று ஆய்வாளர்கள் ஆவணக் காப்பாளர்கள் இதற்காக முன்வரவேண்டும். யாழ்.பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையினர் இவர்களை ஒன்றிணைத்து செயற்பட வேண்டும். ஆவணப்படுத்தப்பட வேண்டிய பகுதியை அடையாளப்படுத்தி

அங்கு கிடக்கும் பொருட்களை அப்படியே பேண வழிசெய்ய வேண்டும். நம்மிடம் அரசியல் பலம் இல்லை என்பதால் ஒரு பகுதி ஆவணங்களை வெளிநாடு ஒன்றில் பேணவும் வழிசெய்ய வேண்டும்.

மக்கள் பிரதிநிதிகள் அரசியல்கட்சிகள் வரலாற்றுத்துறையினர் அடையாளப்படுத்திய பகுதியை ஆவணப்படுத்தல் பிரதேசமாக அறிவிக்க ஆவன செய்ய வேண்டும். இந்தப் பகுதியை மக்கள் அரசிடம் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போரில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதை வழக்கமாக வைத்துள்ளனர்.

இவ்வளவும் ஏன்? ஜப்பான் மீது அணு குண்டுகளை வீசி இலட்சம் பேரின் அழிவுகளுக்கு காரணமான அமெரிக்கா தனது செயலுக்கு மன்னிப்பு கோரியது. காலம் தாழ்த்திய கோரல் தான் ஆனால் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது ,நாட்டின் செயலுக்கு மன்னிப்புக் கோரிய போது போர் நினைவிடமான ஜென்போகு டாமின் முன்பாகவே மன்னிப்பைக் கோரினார்.

ஹிட்லரின் படைகளால் கொல்லப்பட்டவர்கள் 90 இலட்சம் தொடக்கம் ஒரு கோடியே 10 இலட்சம் பேர் வரை இருக்கலாம். இதில் யூதர்களின் எண்ணிக்கை மட்டும் 60 இலட்சம் பேர். இத்தகைய பெரும் இனவழிப்பை சந்தித்த இனம் இரண்டாம் உலகப் போர் முடிந்த பின்னர் தனக்கென ஒரு இஸ்ரேல என்னும் தாயகத்தை உருவாக்கியது. யூதர்களுக்காக இஸ்ரேல் உருவாகி சரியாக 8 ஆண்டுகளில் அதாவது 1953 இல் (Yard Vashem) யாட் வாஸ்மன்ட் என்னும் ஓர் ஆவணக் காப்பகத்தைத் திறந்தார்கள்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தை மக்களுடன் சேர்ந்து அனுபவித்த ஆவணக் காப்பாளர்கள் இன்றும் புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்றனர். இதேபோன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆவணக்காப்பாளர்களாக செயற்பட்டவர்கள் புலம்பெயர் தேசங்களில் இயங்கும் ஊடகங்களுக்கு மக்களின் அவலங்களைப் பதிவு செய்து அனுப்பியிருந்தனர்.

இவர்களிடம் இருந்து குறித்த ஆவணங்களின் பிரதிகளைப் பெற்று முள்ளிவாய்க்காலில் ஆவண பேணகம் ஒன்றை அமைத்து காட்சிப்படுத்த வேண்டும். வருங்கால சந்ததிகள் எமது இனம் சந்தித்த அவலங்களை அறியவும் புரியவும் இது ஒரு வாய்ப்பாகவும் சர்வதேச சமூகம் முள்ளிவாய்க்காலில் தமிழினம் சந்தித்த பேரவலத்தை உணர்ந்து கொள்ளவும் இந்த ஆவணப்படுத்தல் உதவும்.

இதேபோல வடக்கு கிழக்கு சுற்றுப் பயணம் வருபவர்கள் தமிழர்களுக்கு நேர்ந்த அவலங்களை அறிவதற்கும் உணர்வதற்கும் புலம்பெயர் தேசங்களில் வாழும் நம் சந்ததிகள் தாய் தேசத்தில் தம்மினம் அடைந்த வலிகளை உணரவும் இராஜீக விடயங்களுக்காக வடக்குக்கு வரும் சர்வதேச தலைவர்கள் இராஜதந்திரிகள் தமிழினம் பட்ட அவலத்தை அறியவும் போரில் உயிரிழந்த மக்களை அனைவரும் அஞ்சலிக்கவும் நம்மினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அவலங்கள் அடக்குமுறைகள் உச்சகட்ட கொடுமைகளை அடுத்த தலைமுறையும் அறியச் செய்யவும் ஆவணக் காப்பகம் ஒன்று அவசியம்.

மேலும் தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மனித உரிமைகள் மீறல் போர் குற்றங்களுக்கு காரணமானவர்கள் தண்டிக்



இன்னமும் போர் பாதித்த தேசமாகவே முள்ளிவாய்க்கால் மண் நீண்டு கிடக்கிறது. ஓவியர்கள் ஓவிய மாணவர்கள் எஞ்சிக் கிடக்கும் போர் அழிவுகளை தமது தூரிகைகள் மூலம் பிரதிபலிக்கச் செய்யலாம். அது மட்டுமன்றி போர் அவலங்களைச் சந்தித்தவர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்தும் முள்ளிவாய்க்கால் அவலங்களை ஓவியங்களாக்கி அமைக்கப்படும் ஆவணக்காப்பகத்தில் காட்சிப்படுத்தல் வேண்டும்.

ஜப்பானுக்கு சுற்றுப் பயணம் செல்பவர்கள் ஜென்போகு டாமை பார்வையிடுவது வழமை. இராஜீக விடயங்களாக அங்கு செல்லும் சர்வதேச நாடுகளின் தலைவர்கள் முக்கியஸ்தர்கள் ஜென்போகு டாம் மும்பாக

கப்பட வேண்டும்.

இச்செயல்களுக்காக இலங்கை அரசு மன்னிப்புக் கேட்கவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது. காலம் வேகமானது அது விதிக்கும் கட்டளைகளுக்கு யாரும் அடிபணிந்து தான் ஆகவேண்டும்.

அமெரிக்காவுக்கு தோன்றிய மனச்சாட்சி நெருக்கடி இப்போது இல்லாவிட்டாலும் இலங்கை அரசாங்கத்துக்கும் தோன்றலாம். அப்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்படுமானால் அவர்கள் வெறுமனே மன்னிப்பு என்று கோராமல் எமது மக்கள் அவலங்களை சந்தித்த முள்ளிவாய்க்கால் மண்ணில் போர் வடுக்களை பாதுகாத்து வைத்திருக்கும் இடத்தில் கோர வேண்டும்.

மே 18 தமிழின அழிப்பு நினைவு நாள்

சிறப்புக் கட்டுரை

இரண்டாவது தசாப்தத்திற்குள் வேதனைகளுடன் நுழைகிறோம்

நேற்றுப் போலிருக்கிறது. இரத்தமும், கண்ணீர் நிரம்பிய மனிதர்களுமாக வரலாறு நம் முன் பதிந்த நாட்கள். நேற்றுப்போல் இருக்கிறது 2009. அதற்குள் 2019 ஆகிவிட்டது. தசாப்தமொன்றைக் கடந்து நிற்கிறோம். இந்த ஊமை வெயில் காலத்தைக் கடந்து நின்று திரும்பிப் பார்க்கையில் தூரமாகவும், அண்மையாகவும் என்ன தெரிகின்றது என் பதையே இக்கட்டுரை அலசுகின்றது.

18 மே 2009 இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதம் மௌனிக்கப் படுகையில், தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டமானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும், புலம்பெயர் தமிழர்களிடமும், தமிழகத் தமிழர்களிடமும்தான் கையளிக்கப்பட்டது.

மேல் கொலை செய்து களைத்துப் போய் அரசியலுக்கு வந்திருந்த சரத் பொன்சேகாவை ஜனாதிபதி தேர்தலில் ஆதரித்தும், அவரால் பாதிக்கப்பட்ட மக்களை அவருக்கு வாக்களிக்கக் கோரியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்கிருந்த வரலாற்றுப் பெறுமதியை தவறவிட்டது.

அந்த சந்தர்ப்பத்தோடு, தமிழ்த் தேசிய தேர்தல் அரசியலின் அடையாளமாகிவிட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சிதையவும் தொடங்கியது. அதற்கு மாற்று அணியாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தன்னைப் பிரகடனம் செய்தது. பத்தாண்டுகளாக அப் பிரகடனம் நீடித்துக்கொண்டேயிருக்கிறது.

அதன் பின்னரான காலத்தில் தமிழ்த்

பிய தெற்கு முதலாளிகளின் வங்கிகளும், பன்னாட்டு நிதி நிறுவனங்களும் போரில் எஞ்சியிருந்த மக்களையும் சுரண்டித்தீர்த்தன. வடக்கு, கிழக்கில் இருந்த தமிழர்களின் பெருவணிகம் என நம்பப்பட்ட அனைத்துமே பலத்த அடியை வாங்கின. மீள முடியாத ளவுக்கு வீழ்ச்சியைக் கண்டன.

தமிழ்ச் சமூகம் தனக்குக் கீழான சுய பொருளாதார கட்டமைப்பில் எப்போதும் பலமாக இருக்கும் என்று சொல்லப்படுவதுண்டு. ஆனால் இந்தப் பத்தாண்டுகளுக்குள் அந்த

உருவாகியிருக்கின்றனர்.

இந்த சமூகத்தின் விருத்திக்காக, வளமான வாழ்வுக்காக, விடுதலைக்காக தன் உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்த போராளிகளின் இன்றைய நிலை கவலை தருவதாக இருக்கிறது. அவர்கள் பொருளாதார ரீதியிலும், உளரீதியிலும் அதிகளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

"புனர்வாழ்வளிப்பு" என்ற தடுப்பின் பின்னர் மர்மமாக இறந்துபோன முன்னாள் போராளிகள் எத்தனை பேர் என்ற தகவல்

இது இயற்கையான போக்கில் நிகழ்ந்தது தான். ஆனால், அனைத்துத் தரப்புமே இந்தக் கைமாற்றலைக் கைவிட்டனர். பெரும் பேரவலத்தோடு நலன்புரி நிலையங்கள் என்ற பெயரில் அரசினாலும், இராணுவத்தாலும் உருவாக்கப்பட்ட திறந்தவெளிச் சிறைச் சாலைகளில் இருந்து மக்களை மீட்டெடுக்கவே யாரும் முன்வரவில்லை.

தேசியக் கூட்டமைப்பினுள் புதியவர்கள் நுழைந்தார்கள்.

உயிர்த்தியாகத்தாலும், ஆயுதப் போரினாலும் வளர்ந்த "தமிழ்த் தேசியம்" என்கிற விடுதலைத் தத்துவத்தை விலைபொருள் ஆக்கினர். வியாபாரம் பேசினர்.

ஏனெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் 2009க்குப் பின் சேர்ந்தவர்களில் பலர்

அடித்தளமே சிதறடிக்கப்பட்டிருக்கிறது.

இலகு கடன்கள், நுண்கடன்கள் பெண்களை அதிகளவில் இலக்காக்கின. கிராமிய அளவில் படலை வரை வந்து நின்ற இலகு கடன்கள், இலகுவிலயே தமிழ்ப் பெண்களைத் தம்வசப்படுத்தின. பெற்ற கடனை மீள செலுத்தமுடியாத கடனாளிகளை தற்கொலை செய்துகொள்ளுமளவுக்கு அவை

களைக்கூட திரட்டிப் பாதுகாக்க யாரும் அக்கறையெடுக்கவில்லை. போரில் தன் உடல் அவயங்களை இழந்து பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் வாழும் முன்னாள் போராளிகள் குறித்து சமூக வலைத் தளங்களில் கண்ணீர் வரும் காணொளிகள் வெளியான பின்னரே அவர்கள் குறித்து பரிதாபப்படும் மனநிலையை தமிழ்ச் சமூகம் அடைந்திருக்கிறது.



பிரபா

உளப்பலம் மிக்க பல முன்னாள் போராளிகள் தங்கள் கஸ்ரங்களை வெளிப்படுத்தாமலே இறந்துபோன சந்தர்ப்பங்களும் இடம் பெற்றிருக்கின்றன. முன்னாள் போராளி என்றால் வேலையில் புறக்கணிப்பு, திருமணத்தில் புறக்கணிப்பு, சமூக அந்தஸ்தில் புறக்கணிப்பு எனப் பல்வேறுவிதமான அழுத்தங்களையும் அவர்கள் சந்தித்து வருகின்றனர்.

இந்த சந்தரப்பத்தை இராணுவம் தெளிவான திட்டத்தோடு பயன்படுத்திக் கொண்டது. வறுமைக்கோட்டுக்குட்பட்டு வாழும் - புனர்வாழ்வளிக்கப்பட்ட - முன்னாள் போராளிகளைக் கொண்டு சிவில் பாதுகாப்பு வேலைத் தளங்களை இராணுவம் உருவாக்கியிருக்கிறது. அரச நியமனத்துக்கு நிகரான தொழில் வாய்ப்பொன்றை வழங்கியி ருக்கும் இராணுவம், ஆண் - பெண் முன்னாள் போராளிகளுக்கு முழுநேர வேலை வாய்ப்பை வழங்குகிறது.

அவர்களின் கல்வித்தகமைக்கேற்ப கட்டடத்தொழில் முதல் அலுவலக வேலைகள்

பணவசதியுள்ளவர்கள் பணத்தைக் கொடுத்துத் தப்பித்துக்கொள்ள, பணமற்ற சாதாரணர்கள் அதற்குள்ளேயே வருடக் கணக்கில் அடைபட்டுக்கிந்தனர். அதற்குள்ளேயே கடத்தப்பட்டனர். காட்டிக்கொடுப்பவர்களின் கைவரிசைகளினால் காணாமலும் போயினர். ஒருநாள் "அமைப்பில்" இருந்தவர்களும் இராணுவத்தின் அறிவிப்பை நம்பி வெள்ளைவான் ஏறினார்கள். அவர்கள் மீண்டுவரவேயில்லை. நலன்புரி நிலையங்களுக்கு ஐ.நா உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் வருகைதந்த போதிலும் அவர்கள் "விலங்குக்காட்சி சாலை" பார்க்கவே வந்தார்கள்.

உலகம் நடத்திய போரொன்றிலிருந்து தப்பிவந்த மனிதர்களைப் பார்க்க வரவில்லை. இறுதியில் அரசின் நலன்புரி நிலையப் பணிகள் நன்றாக உள்ளதென சான்றுப்பத்திரம் கொடுத்துப்போயினர்.

ஆயுதப் போராட்ட மௌனிப்பின் பின்னர், அரசியல் தளத்தில் இனவிடுதலைக்கான போரை முன்னெடுக்கும் என்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்கள் எதிர் பார்த்தனர். ஆனால், போரில் கொலைக்கு

தேர்ந்த வியாபார விற்பனர்களாயிருந்தனர்.

எனவே முள்ளிவாய்க்காலின் பின்னான விடுதலைத் தேசியம் வியாபாரத் தேசியமானது. 2015 வரைக்கும் அது வளைந்து நெளிந்து நிமிரும் என்ற நம்பிக்கை தென்பட்டாலும், குறித்த ஆண்டில் ஏற்பட்ட நல்லாட்சிக் வழங்கிய ஆதரவிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றுமுழுதாகவே தமிழ்தேசியம் நீர்த்த கட்சியாக மாறியது.

சிங்களத் தேசியம் என்கின்ற பெருந்தேசியத்துக்குள் தன்னை நிர்மூலப்படுத்திக் கொள்ள சதாகாலமும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது.

அப்படி நிர்மூலப்படுத்திக் கொள்வதில் தமிழ்த்தேசிய விடுதலை விற்பனர்களுக்கு பெரும் இலாபமிருந்தது. இந்தப் போக்கில் விமர்சனமுள்ளவர்கள் வெளியே வந்தார்கள். புதிய கட்சிகள் தொடங்கினர். இரத்தமாகப் பாய்ந்த பெருநதி சிறுசிறு கிளையாகி வற்றி வரளும் நிலையை எட்டியது. அரசியல் இப்படியே நிர்மூலமாகப் பொருளாதாரமாவது தளிர்த்ததா என்று பார்த்தால் அதுவும் அதல பாதாளத்தில் விழுந்தது.

வடக்கு, கிழக்கு முழுவதும் கிளைபரப்

> நாட்டுக்குள் சர்வதேச தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினாலும் முன்னாள் போராளிகள்தான் கைதாகின்றனர். எனவே கடந்த பத்தாண்டுகளில் தமிழர் குறித்த பெரும்பான்மையினர் பார்வையில் - மனநிலையில் - துளியளவு மாற்றமும் நிகழவில்லை என்ற புரிதலோடு இனப்படு கொலையின் இரண்டாவது தசாப்தத்திற்குள் நுழைவோம்.

உளஅழுத்தத்தைக் கொடுத்தன. பல பெண்கள் கடன் செலுத்த முடியாமல் தற்கொலை செய்து கொண்டார்கள். தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கவே, அரசு குறித்தளவிலான கடனைப் பொறுப்பெடுத்துக்கொண்ட போதிலும், இப்போதெல்லாம் இரவில் கடன் வசூலிப்பு இடம்பெறுகிறது. உடற்பாகங்களை விற்று கடனை மீளச்செலுத்தும் பெண்களையும் இந்தப் பத்தாண்டுகளுக்குள் தமிழ்ச் சமூகம் கண்டிருக்கிறது.

படைத்துறை ஆட்சி போரில் ஈடுபட்ட தரப்பினராகிய முன்னாள் போராளிகள் என்றொரு வகுப்பினரும் தமிழ் சமூகத்தில்

வரைக்கும் வழங்கப்படுகின்றன. இராணுவ பயிற்சிகளும் வேலைக்கான ஒரு தகமையாகக் கொள்ளப்படுகின்றன.

இது ஒருவகையில் இராணுவமய மாக்கல் என்ற பார்வையும் உண்டு. சிவில் பாதுகாப்பு பிரிவிலிருந்து பயிற்றப்பட்டு வெளியேறும் சிறுவர் பாடசாலை ஆசிரியர்கள் கிராமங்களில் கற்பிக்கின்றனர். அந்தச் சிறார்களுக்கான கல்வி, அதற்கான செலவு அனைத்தையுமே இராணுவம் பார்த்துக் கொள்கிறது. எனவே மறைமுகமான இராணுவமயமாக்கல் சிந்தனை சிறுபராயத்திலிருந்தே கற்பிக்கப்படுகிறது.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

முன் பக்கத் தொடர்ச்சி...

இராணுவமயமாக்கலை தம் வாழ்வோடு இணைந்த ஒன்றுதான் என்ற எண்ணம் ஆழ் மனதில் படியும் வரைக்குமான கற்பித்தல் ஒழுங்குகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. அசாதாரண நிலையை சாதாரணமாக்கும் வேலைத்திட்டம் இதுவென்ற விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதோடு, சிவில் பாதுகாப்பு பண்ணைகளில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் மீறல் சார்ந்த பிரச்சினைகள் வெளிவருவதில்லை என்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படுகின்றன.

என்றுமில்லாதளவுக்கு தமிழ்ச் சமூகம் தனக்குள்ளேயும், வெளியேயும் சிதைவைச் சந்தித்திருக்கிறது.

இராணுவம், பொலிஸ், புலனாய்வுத் துறை, கடற்படை என தமிழர் பகுதிகளின் மூலைமுடுக்கெல்லாம் முகாமிட்டிருக்கும் இராணுவத்தைக் கடந்துதான் தாராளமாக போதைப்பொருட்கள் புழங்குகின்றன.

பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருட்கள் விநியோகிப்பவர்கள் கையும் மெய்யுமாக அகப்பட்டாலும், விசாரணைகள் ஒரு கட்டத்தின் மேல் முன்னெடுக்கப்படுவதில்லை. இறுக்கமான கடற்படையின் கண்காணிப்பைத் தாண்டித்தான் கேரள கஞ்சா மாதகல், வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்கு வருகின்றன என்பதை நாம் நம்பியே ஆகவேண்டும்.



போதைப்பொருள் சார்ந்த குற்றச்செயல் களை கண்டும் காணாமல் விடும் பாதுகாப்புத் தரப்பே தமிழர்களைச் சூழ நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எங்காவது கையூட்டலில் தாமதங்கள் ஏற்படுத்தப்படு மிடத்தில் தான் போதைப்பொருள் கடத்தற்காரர்கள் பொலிஸாரிடம் சிக்குகின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில் மொத்த தமிழ்ச் சமூகத்தையும் போதைப் பொருளுக்கு அடிமையாக்கியிருக்கின்றனர்.

அதற்கு நிகராக வாள்வெட்டுக்குழுக்களும் உருவாக்கப்பட்டு சமூகத்துள் உலாவ விடப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உலாவிய துணை இராணுவக் குழுக்களைப் போல இந்த வாள் வெட்டுக்குழுக்கள் செயற்படுகின்றன.

அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கான எந்தப் பொறிமுறையும் இராணுவத்துக்கும் தெரியாது. பொலிஸாருக்கும் தெரியாது.

இத்தகையதொரு அச்சம் நிறைந்த சூழலுக்குள்தான் தமிழ் சமூகத்தின் பத்தாண்டுகள் கழிந்திருக்கிறது. இனியும் அதுவே நீளவுமுள்ளது.

கடந்த 2015 இல் ஏற்பட்ட நல்லாட்சியின் பின்னர் இராணுவத்துக்கு நிகரான அதிகாரங்கள் அரச திணைக்களங்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன. சர்வதேச நல்லபிப்பிராயத்திற்காக பாடுபட்ட அரசு, வலிகாமம் வடக்கு பகுதிகளில் காணிகளை விடுவித்துக்கொண்டிருக்க, தொல்லியல் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, வன வளத்திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் போன்றன தமிழர் நிலத்தை ஆக்கிரமிப்பதில் இரவு பகலாக உழைத்தன.

தொல்லியல் திணைக்களம் தமிழர்கள் இடங்களுக்கு சிங்களப் பெயர் சூட்டுவது, புதிய இடங்களை தொல்லியல் மையமாக பிரகடனம் செய்வது, புத்த விகாரைகளை வைப்பது போன்ற பணிகளை செய்தது.

இராணுவமும் அவர்களோடு இணைந்து தம் பணிக்கு புத்தர் சிலைகளை நிறுவினார்கள். முல்லைத்தீவில் மட்டும் 60 இடங்களில் புத்த விகாரைகள் அமைப்பதற்கான ஏற்பாடுகளை தொல்லியல் திணைக்களம் செய்திருக்கின்றது.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையும், தேசிய வீடமைப்பு அதிகார சபையும் வவுனியா வடக்கிலும், மணலாற்றிலும் பெரியளவிலான சிங்கள குடியேற்றத்திட்டங்களை உருவாக்கியிருக்கின்றன.

அங்கு குடியேற்றப்பட்ட மக்களுக்கென தனி பிரதேச செயலகம் “சம்பத்நுவர” எனும் பெயரில் அமைக்கப்பட்டுள்ளது. வவுனியா வடக்கில் புதிய சிங்கள பிரதேச சபையை உருவாக்குவதற்கான முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

இவை அனைத்தையும் முன்னின்று செய்வது அரச திணைக்களங்கள்தான்.

மகாவலி திணைக்களத்தின் “எல்” வலயம் இரணைமடு வரைக்கும் நீண்டிருக்கிறது. அதனை யாழ்ப்பாணம்வரை கொண்டு செல்வதற்கான வேலைத்திட்டங்கள் இரவு பகலாக நடக்கின்றன. இதன் பின்னணியில் தான் இரணைமடு குள நீரை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்லும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இதில் கடற்றொழில் திணைக்களம் தமிழர் கடலின் வளங்களை சுரண்டிச் செல்வதற்கு தன்னாலான முழுப்பணிகளையும் செய்கிறது. கடல் வளத்தைப் பாதுகாக்க வேண்டிய திணைக்களம் தமிழர் அளவாகப் பயன்படுத்தி எதிர்கால தலைமுறைக்காகக் பாதுகாத்து வந்த மொத்த கடல்வளத்தையும் அழித்துச் செல்ல உதவுகின்றது.

கொக்கிளாய், நாயாறு, முல்லைத்தீவு, சாலை, சுண்டிக்குளம், தாழையடி என குடியேறியிருக்கும் சிங்கள மீனவர்கள் இலங்கையில் தடைசெய்யப்பட்ட சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். கடலில் டைனமைற் வீசி வெடிக்கச் செய்து மீன் பிடிக்கின்றனர்.

பகலிலேயே அட்டை பிடிப்பில் ஈடுபடுகின்றனர்.

தடைசெய்யப்பட்ட கரைவலை முறைகளைப் பயன்படுத்துகின்றனர். தடைசெய்யப்பட்ட வலைகளைக் கொண்டு மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

தமிழர் தொழில்செய்ய முடியாதளவுக்கு கடல் முழுவதையும் ஆக்கிரமித்து நின்று இரவு பகல் மீன்பிடியில் சிங்கள மீனவர்கள் ஈடுபடுகின்றனர்.

இவர்களுக்கான அனுமதியை நீரியல் வளத்திணைக்களம்தான் வழங்கியிருக்கிறது.

நாயாறு பகுதியை “மாயபுர” எனப் பெயர் மாற்றி 300 வரையான சிங்கள குடும்பங்கள் குடியேறவும், அங்கிருக்கும் நீராவியடி பிள்ளையார் ஆலயத்தை பௌத்த விகாரையாக மாற்றவும் இத்திணைக்களம் உதவியிருக்கிறது.

இந்தப் பத்தாண்டுகளுக்குள் இனவிகிதாரசாரப்படி சிங்கள, முஸ்லிம் இனங்களின் இனவிருத்தி அதிகரித்துச் செல்ல தமிழர்களின் இனவிருத்தி குறைந்துசெல்வதையும் ஆய்வொன்று நிரூபிக்கின்றது.

இலங்கையில் இன்னும் பத்தாண்டுகளில் மூன்றாவது சிறுபான்மையினமாகத் தமிழர்கள் மாறிவிடக்கூடிய அபாயம் இருப்பதாக அவ்வாய்வு குறிப்பிடுகின்றது. அதற்கு நாட்டைவிட்டு புலம்பெயர்தலும் மிக முக்கியமான காரணமாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

போர் ஓய்ந்து பத்தாண்டுகளில் இவ்வளவு வீழ்ச்சியைச் சந்தித்திருக்கும் தமிழர்கள் இனவிருத்தியிலும் அருகுவார்களாயின், அரசியல் அபிலாசைகளை நிலைநாட்டுவதிலும் அசண்டையீனங்கள் உருவாகும். எனவே மூன்றாவது சிறுபான்மையினத்தின் அரசியல் உரிமைகள், தேவைகள் குறித்து அக்கறைப்படுவதற்கு தேவையற்ற சூழல் ஒன்றும் உருவாகும்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் இரண்டாவது தசாப்தத்தை அடையும் போது, அரசியல் உரிமை குறித்தோ, இன விடுதலை குறித்தோ அக்கறைப்படாத ஒரு சமூகமாக தமிழர்கள் மாறியிருப்பர் என்கிற எதிர்வு கூறலையும் முன்வைக்க முடியும். கல்வியில் தமிழர்கள்தான் முதலிடம் பிடித்திருந்தார்கள்.


இதனால் எரிச்சலடைந்த பெரும்பான்மையினத்தவர் கலவரங்களை செய்தனர். கல்வித்தரப்படுத்தலை கொண்டுவந்தனர்.

இதுவே இலங்கையில் ஆயுதப்போராட்டங்கள் தமிழர் பக்கமிருந்து உருவாகக் காரணம் என்று சொல்லப்படுவதுண்டு.

போதைப்பொருள் சார்ந்த குற்றச்செயல் களை கண்டும் காணாமல் விடும் பாதுகாப்புத் தரப்பே தமிழர்களைச் சூழ நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எங்காவது கையூட்டலில் தாமதங்கள் ஏற்படுத்தப்படுமிடத்தில்தான் போதைப்பொருள் கடத்தற்காரர்கள் பொலிஸாரிடம் சிக்குகின்றனர். இவ்வாறானதொரு நிலையில் மொத்த தமிழ்ச் சமூகத்தையும் போதைப் பொருளுக்கு அடிமையாக்கியிருக்கின்றனர்.

எந்தக் கல்விக்காக தமிழர் ஆயுதம் ஏந்தினரோ அந்தக் கல்வியிலேயே இன்று அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கும் நிலை உருவாகியிருக்கிறது.

போர்க்காலத்தில் குப்பி விளக்குகளில் படித்து சாதனை படைத்த தமிழ் தலைமுறை இன்று சகல வசதிகளும் அடைந்தும் கல்வியில் பின்சென்றிருக்கிறது.



சாதாரணதர, உயர்தர, உயர்கல்வி வாய்ப்புக்களில் மூன்றாமிடத்துக்கு தமிழர்கள் பின்தள்ளப்பட்டிருக்கின்றனர். பெரியளவான பணவரவும், தேவைகள் இலகுவில் நிறைவேறுகின்றமையும், புலம்பெயரும் பேரவாவும், போதைப்பொருட்களின் அதிகரித்த பாவனையும் கல்வி மீதான ஆர்வத்தை இல்லாமல் செய்திருக்கும் காரணிகளாக சுட்டிக்காட்டப்படுகின்றன.

போர்காலத்தில் சாதிய பிளவுகளோ, சமய பிரிவுகளோ பெரிதாகக் கண்டுகொள்ளப்படவில்லை. விடுதலைப் புலிகள் இம்மாதிரியான பிற்போக்குத்தனங்களை தடைசெய்திருந்தனர்.

இந்தப் பத்தாண்டுகளுக்குள் அந்த வன்மம் மீளவும் உயிர்த்துடிப்போடு கண்விழித்திருக்கிறது. சாதிய கடைபிடிப்புக்கள் மீளவும் அரும்பத் தொடங்கியிருக்கின்றன. கோயில், திருமணம், ஊர் நடைமுறைகளில் சாதியக் கட்டுக்கள் மீளவும் நடைமுறைக்கு வருகின்றன. அதற்கு சமதையாக மதப் பிரச்சினைகளும் தூண்டப்படுகின்றன.

அண்மையில் மன்னார், திருக்கேதீச்சரம் பகுதியில் இடம்பெற்ற மதம்சார்ந்த பிரச்சினைகள் தமிழ் சமூகத்தின் ஒற்றுமையை கேள்விக்கு உட்படுத்தியிருக்கிறது.

இப்படியானதொரு ஆபத்தான போக்கையே தமிழ் சமூகம் தற்போது எதிர்கொண்டிருக்கிறது.

கடந்த பத்துவருடங்கள் தமிழ்ச் சமூகத்தின் உள்ளேயும், வெளியேயும் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

ஆனால் தமிழர்களின் பொது எதிரியான சிங்கள பெருந்தேசியமும், இந்தியாவும், சர்வதேச சமூகமும் தமிழர் குறித்த பார்வையில் துளியளவு மாற்றத்தையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. நாட்டின் எப்பாகத்தில் குண்டுவெடித்தாலும், வடக்கு, கிழக்குத் தமிழர்கள்தான் பிரதான குற்றவாளியாக்கப் படுகின்றனர்.

நாட்டுக்குள் சர்வதேச தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினாலும் முன்னாள் போராளிகள்தான் கைதாகின்றனர்.

எனவே கடந்த பத்தாண்டுகளில் தமிழர் குறித்த பெரும்பான்மையினர் பார்வையில் - மனநிலையில் - துளியளவு மாற்றமும் நிகழவில்லை என்ற புரிதலோடு இனப்படுகொலையின் இரண்டாவது தசாப்தத்திற்குள் நுழைவோம்.


சகல Mortgage
தேவைகளுக்கும்
தமிழில் உரையாட
என்னை
அழையுங்கள்
Call Me First and Say "YES" to Get Your Dream Home at a Dream Rate!
For all your Mortgage needs
Purchase, Pre-Approvals, Refinances, Renewals and Switch, Builder Purchase, Home Line Of Credit, Self Employed, New Immigrants, Multi Rental Properties.
2018 Gold Sales Award
2017 Paragon Sales Award "top 35 in the country"
2016 Gold Sales Award
2015 Platinum Sales Award
2014 Gold Sales Award
Peter Sober
Manager, Mobile Mortgage Specialist
Paragon Sales Award
Dir: 416-275-3571
Pager: 1-866-767-5446 | Fax: 905-240-3882
Email: peter.sober@td.com
Your Smile Is My Best Return!
Four Branch Locations to serve you better
Scarborough: 2135 Victoria Park Ave, Scarborough, ON M1R 0G1
Markham: 5762 Highway 7, Markham, ON L3P 1A8
Ajax: 75 Bayly Street W, Ajax, ON L1S 7K7
Brampton: 3978 Cottrelle Blvd, Brampton, ON L6P 2R1
TD


ROGERS™
SAVE UP TO $1350
LIVE TV
NETFLIX
YouTube
CloudPVR
SPORTS APP
UNLIMITED
INTERNET
TV - HOME PHONE
SMART
HOME
MONITORING
தமிழில் உரையாட அழையுங்கள்
சுந்தர் சின்னத்தம்பி
Rogers Local Area Advisor
416.908.6845
puvanendran.sinnatha@rci.rogers.com

தமிழின அழிப்பு நினைவு நாள்

சிறப்புக் கட்டுரை

முள்ளிவாய்க்காலும்


தமிழர் ஆவணப்படுத்தலும்

நேரு குணரட்னம்

இன்று தமிழர் வாழ்வியலில், அரசியலில் அனைத்துமே முள்ளிவாய்க்காலுக்கு முன், முள்ளிவாய்க்காலுக்குப் பின் என்றே ஆகி விட்டது.

இவ்விடயப்பரப்பில் ஆய்விற்கு உள்ளாக வேண்டிய, பல விடயதானங்கள் தமிழர் வாழ்வியலிலும், தமிழர் அரசியலிலும், தளத்திலும், புலத்திலும் நிறைந்து பரவிக் கிடக்கின்றன.

இதுகுறித்த ஆய்வும் அதனூடான தீர்வுகளுமே அப்பரப்புகளை இயக்கவல்ல இயங்கு சக்தியாகினும், இன்றைய நிலையில் அது குறித்த முனைப்புகள் அருகியேயுள்ளன. இந்நிலையில் அதில் ஒரு முக்கிய அங்கமான தரவுகளும், ஆவணப்படுத்தலும் குறித்து இங்கு பார்ப்போம்.



தமிழர் வாழ்வியல் உரிமைப் போராட்டத்தின் பலமான இயங்குநிலைகளில், ஆரம்பத்தில் இருந்தே வலுப்பெற்று வந்த ஒரு முக்கிய பரப்புத் தான் ஆவண சேகரிப்பும், அவணப்படுத்தலும்.

அதில் காணொலி, ஒலிவடிவம், பதிப்பு, சர்வதேச ஒழுங்குமுறை ஆவணம் என பல வடிவங்களில் அவற்றின் வீச்சு தொடர்ந்தும் வலுப்பெற்று முன்நகர்த்தப்பட்டது.

தமிழர் அவலங்களையும், அதற்கான பரிகாரங்களை நோக்கிய சர்வதேச நகர்வுகளிலும் இவற்றின் முக்கியத்துவம் சொல்லிமாளாது.

தமிழருக்கு எதிரான தரப்புகளும் இவ்வாறான ஆவண முறைமை கொண்டே நீதியான தமிழர் வாழ்வியல் போராட்டத்தை மலினப்படுத்தும், பயங்கரவாதம் எனச் சித்தரிக்கும் கைங்கரியத்தை மேற்கொண்டு வருகின்றன.

இங்கு தாயகத்தில் முள்ளிவாய்க்காலுக்கு முன் வடிவமைக்கப்பட்டு வலுப்பெற்ற பல வடிவங்களை இங்கு ஒருமுறை கவனத்தில் கொண்டோம் என்றால் இன்றைய எம் நிலை துல்லியமாக புலப்படும்.

ஆவணப்படுத்தல், பதிப்பித்தல், வெளியீட்டுப்பிரிவு. அரசறிவியற் கல்லூரி, அனைத்துலகச் செயலகம், நந்தவனம் - வெளிநாட்டு தமிழருக்கான தாயக தொடர்பாடல் சேவை மையம், தொடர்பகம். ஒளிப்படப்பதிவுப்பிரிவு - திரைப்படவெளியீட்டுப்பிரிவு, நிதர்சனம் - திரைப்படத் தயாரிப்பு, தர்மேந்திரா கலையகம் - திரைப்பட கலைகள் சம்பந்தமானது. விடுதலைப்புலிகள் மாதாந்த செய்தி இதழ், சுதந்திரப் பறவைகள் - பெண்கள் செய்தி இதழ், ஈழநாதம் - நாட்செய்தியிதழ், பத்திரிகை. வெளிச்சம் - மாத சஞ்சிகை, நாற்று மாத சஞ்சிகை. பொற்காலம் வண்ணக்கலையகம், அருச்சுனா - புகைப்பட கலையகம், புலிகளின் குரல் வானொலி, தமிழீழ வானொலி, தமிழீழ தேசித் தொலைக்காட்சி, சமூக செய்தி இணையத்தளங்கள், தமிழ்மொழி காப்பகம் என தரவுகளின சேர்க்கைக்கும், ஆவணப் படுத்தலுக்கும் கருவிகளாக பல வடிவங்கள் உருவகம் கண்டு பெரு வளர்ச்சி கண்டு நின்றன.

இந்நிலையில் தொடர்ந்தும் வியாபித்து வலுப்பெறவேண்டிய ஆவணப்படுத்தில் நடைமுறை, முள்ளிவாய்காலுக்குப் பின்னரான காலத்தில், அதற்கு முன் கொண்டிருந்த ஆவணங்களை கூட இழந்து வருவது மட்டுமின்றி, புதிய ஆவணப்படுத்தலுக்கான எத்ததைய முஸ்தீப்பும் அற்று வேறு இருக்கிறது.

இவ்வகையில் 2012 மார்ச் மாதம் கனடிய அரசினால் அனுப்பப்பட்ட மூவர் அடங்கிய குழு சிறிலங்காவிலான நிலைமைகளை நேரடியாக கண்டறியச் சென்று திரும்பியது. அது பலதரப்பட்ட தமிழர்களையும் சந்தித்தது. அவர்கள் முதன்மைப்படுத்திய விடயங்களை குறிப்பெடுத்துக் கொண்ட அவர்கள், பின்னர் அனைத்தையும் சேர்த்து எவை முக்கிய விடயங்கள் என பார்க்க முற்பட்ட போது, ஒரே விடயத்தை பலரும் சொல்லாதது அவதானிப்பப்பட்டது.

இது ஒருங்கிணைப்பு, தரவு சேகரிப்பு, அது குறித்த ஆய்வின் அடிப்படையிலான முடிவுகள் என பல விடயங்களில் இருந்த மோசமான சறுக்கல் நிலையை வெளிப்படுத்தியது.

அதுமட்டுமன்றி தம்மிடம் விடயங்களை பகிர்ந்து கொண்ட தமிழர் தரப்புகளிடம் அதற்கு ஆதாரமான ஆவணங்களையும் அவர்கள் வினாவியுள்ளனர். மன்னார் ஆயர், இராயப்பு ஜோசப் ஆண்டகையைத் தவிர எவரும் ஆதாரமாக எத்தகைய ஆவணத்தையும் வழங்கும் நிலையில் இருக்கவில்லை.

இது இன்றைய தமிழர் தரப்பின் ஆவணப் படுத்தலில் உள்ள மோசமான பின்தங்கல் நிலையைப் புடம்போட்டுக்காட்டுகிறது.

வாயால் வடை மட்டுமே சுட முடியும் என்பதை நாம் ஏனோ இன்றுவரை புரிந்து கொள்வதாக தெரியவில்லை. பொக்கிசமாக முள்ளிவாய்க்காலுக்கு முன்னரான காலம் ஏற்படுத்தித் தந்துவிட்ட ஆவணங்களைக் கூட குறிவைத்து அழித்துவிடுவதிலும், அதற்கான சமூக ஊடகப்பரப்பை முடக்கிவிடுவதிலும் பல சக்திகள் முனைப்புடனும் ஆள், அணி வலுகொண்டும் நாளும் இயங்கிவரும் நிலையில், அவற்றை பாதுகாத்து தக்கவைத்துக் கொள்ளும் எவ்வித முனைப்பும் இன்றி ஈழத்தமிழினம் இன்று அநாதரவாக நிற்கிறது.

சமீபத்தில் நடந்து முடிந்த ஜெனீவா கூட்டத்தொடரில் கூட, 88 சதவீதத்திற்கு அதிகமான அரச காணிகளையும், 92 சதவீதத்திற்கு அதிகமாக தனியார் காணிகளையும் தாம் இராணுவத்திடம் இருந்து விடுவித்துவிட்டதாக சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் மாரப்பன கூசாது பொய் சொன்னார்.

ஆனால் அவர் சொல்வது பொய் என அங்கேயே போட்டுடைக்க எம்மிடம் அவ்வித தரவும் இல்லை.

பின்னர் மைத்திரி கூட்டிய ஒரு கூட்டத்திலும் தாம் பல்லாயிரம் ஏக்கரில் விடுவித்த காணிகள் என இராணுவத் தளபதி முரசறைந்த போது, இல்லை அது பொய் என ஆவணத்தை தூக்கிப் போடமுடியாமல், இது குறித்து ஒரு வருடமான விபரம் கேற்கின்றோம் தாருங்கள் என இரந்து கேட்டோமே அன்றி, தரவுகளும் ஆவணங்களும் இன்றி இன்றும் நடுவீதியில் தானே உள்ளோம்.

ஆவணங்களைக் கொண்டிருந்த பல இணையத்தளங்களை நிர்வகித்த புலத்தில் உள்ளவர்கள், முள்ளிவாய்க்காலுக்குப் பின் அவற்றின் பதிவை புதுப்பிக்க தவறியபோது, அதற்காகக் காத்திருந்த சக்திகள் அதன் முகவரிகளை கையகப்படுத்தி அவற்றை அழித்துவிட்டனர்.

எந்தச் சக்திகள் முள்ளிவாய்க்கால் பேரழிவின் பின் நின்றனவோ, அதே சக்திகள் தான் ஏற்கனவே இருக்கக்கூடிய ஆவணங்களை கூட இல்லாதொழிப்பதில், கடந்த 10 ஆண்டுகளாக அதேமுனைப்புடன் உள்ளன என்பது தான் யதார்த்தமான உண்மையாகும். இதற்கு நம்மவர்களும் துணைபோகின்றனர் என்பது தான் பெருவலி தரக்கூடிய விடயமாகும்.

நிசோர் என அமைந்த வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகம், ஈழத்தமிழர் மனித உரிமைகள் மீறல்களை சர்வதேச நியமத்தில் பதிவிற்குள்ளாக்கியது.

அத்தகைய முயற்சி முள்ளிவாய்க்காலின் பின் எவ்வித வடிவத்தையும் பெறவில்லை. அதனால் தமிழர் மீதான தொடரும் மனித உரிமைகள் மீறல்கள் கவனத்தில் கொள்ளப் படாத விடயமாகிறது.

> பொக்கிசமாக முள்ளிவாய்க்காலுக்கு முன்னரான காலம் ஏற்படுத்தித் தந்துவிட்ட ஆவணங்களைக் கூட குறிவைத்து அழித்துவிடுவதிலும், அதற்கான சமூக ஊடகப்பரப்பை முடக்கிவிடுவதிலும் பல சக்திகள் முனைப்புடனும் ஆள், அணி வலுகொண்டும் நாளும் இயங்கிவரும் நிலையில், அவற்றை பாதுகாத்து தக்கவைத்துக் கொள்ளும் எவ்வித முனைப்பும் இன்றி ஈழத்தமிழினம் இன்று அநாதரவாக நிற்கிறது.

இவ்வாறு தான் சமாதான செயலகத்தின் இணையத்தளம் இழக்கப்பட்டு அதில் இருந்த ஆவணங்கள் இழக்கப்பட்டது மட்டுமன்றி, அதைக் கையகப்படுத்தியவர்கள் அதை ஒரு ஆபாச தளத்தை நோக்கி திருப்பிவிட்டனர்.

இதை புரிந்து கொள்ளும் ஆற்றல் அற்ற பெரும்பகுதியினர் முன் தமிழர் சமூகம் தலை குனிந்து நிற்கவேண்டிய நிலை இதனால் எழுந்தது. எம்மிடம் உள்ள கல்வியாளலர்கள் கூட இவ்விடயத்தில் பெரிதாக எதனையும் செய்வதாக தெரியவில்லை.

பேராசிரியர் மணிவண்ணன் என்ற தமிழக சகோதர உறவு, ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து முயன்று அதற்கான ஆதாரங்களை சேர்த்து, 1000 பக்கங்களில் தமிழருக்கு நடந்தது இனப்படுகொலை தான் என ஆங்கிலத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தினூடாக வெளியிட்டு கல்வியல், ஆராய்ச்சி சார்ந்த அதற்கான அங்கீகாரத்தையும் பெற்றுக் கொடுத்தார்.

இவ்வாறான காலத்தின் தேவை கருதிய முயற்சிகள் எம் கல்வியாளளர்களிடம் ஏன் இன்றும் எழவில்லை.

எமது தேசமும் மக்களும் சிந்திய குருதிகள், எய்திய அர்ப்பணிப்புகள் இந்நாட்களில் எம் கண்முன் விரிந்து எம்மைக் கேள்வி கேட்டால், அதற்கு எம் மனச்சாட்சி எம்மையே துன்புறுத்தினால், ஆவணப்படுத்தலின் அத்தியாவதியத்தையும், அதற்கான முனைப்புகளிலும் நாம் இந்த 10 ஆண்டுகளைக் கடந்தாவது இறங்கியாக வேண்டும்.

இல்லையேல் நீதி வேண்டிய எம் பயணங்கள் மேலும் சவால் நிலையையே எதிர்காலத்தில் எட்டும் என்பதே கசப்பான உண்மையாகும்.

இலங்கைச் செய்திகள்

யாழ். பல்கலை மாணவர் மூவரும் பிணையில் விடுதலை

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர், செயலாளர் உட்பட 3 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பயங்கரவாத தடைசட்டத்தின் கீழ் கைதான அவர்களுக்கு பிணை வழங்க சட்ட மா அதிபர் பரிந்துரைத்தமைக்கு அமைய, தலா 100,000 பெறுமதியான சரீர பிணைகளில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இரு வருக்கும் எதிராக முன்வைக்கப்பட்ட 4 சட்ட ஏற்பாடுகளில் ஒன்றை மீளப்பெற்றுக்கொண்டு ஏனைய 3 குற்றச்சாட்டுக்களிலும் மாணவர் களுக்கு நீதிவான் நீதிமன்றின் ஊடாக பிணை வழங்கும் அறிவுறுத்தல் சட்ட மா அதிபரால்வழங்கப்பட்டது.

மாணவர்கள் இருவர் மீதும் பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம், பயங் கரவாதத் தடைச் சட்டத்தின் உபவிதிகளின் கீழான ஏற்பாடு மற்றும் சர்வதேசகுடியியல் மற்றும் அரசியல்உரிமைகளுக்கான பட்டயம் ஆகிய நான்குஏற்பாடுகளின் கீழ் குற்றச் சாட்டுக்கள்முன்வைக்கப்பட்டன.

இதில் மேன்முறையீட்டு நீதிமன்றால் மட்டும்பிணை வழங்க கூடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை மீளப்பெறுமாறு கோப்பாய் பொலிஸாருக்கு சட்ட மா அதிபரால் அறிவுறுத்தல்வழங்கப் பட்டுள்ளது.

ஏனைய மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ் மாணவர்கள் இருவருக்கும் எதிராக மேற் கொண்டு நடவடிக்கை எடுக்கும் வகையில் தற்போது பிணை வழங்குவதற்கு சட்ட மா அதிபரால் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் வியாழக்கிழமை மாணவர் கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்றில் முற்படுத்தப்பட்டதுடன் கோப்பாய் பொலிஸார் சட்ட மா அதிபரின் அறிவுறுத் தலுக்கு அமைய தமது அறிக்கையை மன் றுக்கு சமர்ப்பித்தனர்.

இதனை ஆராய்ந்த நீதவான் ஆஜர்ப் படுத்தப்பட்ட மாணவர்கள் மற்றும் சிற்றுண்டி சாலை நடத்துனர் ஆகியோரை தலா ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையில் விடுதலை செய்தார்.வழக்கினை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

மே 18 நினைவு தினத்தை அனுசரிக்க உரிமை உண்டு



இலங்கை தமிழர்களினால் அனுசரிக்கப்படுகின்ற மே 18 நினைவு தின நிகழ்விற்கு ராணுவத்தினரால் எந்த வித இடையூறுகளும் விளைவிக்கப்படாது என ராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க தெரிவிக்கின்றார்.

சமாதானத்தின் தசாப்த நிறைவு தினம் என்ற பெயரில் யுத்த வெற்றி கொண்டாட்டங் கள் இந்த முறையும் ராணுவத்தினால் முன் னெடுக்கப்படவுள்ளமையை முன்னிட்டு கொழும்பில் (வியாழக்கிழமை) நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டவிதிகளுக்கு உட்பட்டு, நினைவு தினத்தை அனுசரிப்பதற்கான உரிமை அனைவருக்கும் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் அவசரகால சட்டம் நடை முறையில் உள்ள தருணத்தில், இவ்வாறான நினைவு தின நிகழ்வுகளை நடத்துகின்றமை சர்ச்சைக்குரிய விடயமா என இதன்போது கேள்வி எழுப்பப்பட்டது.

அவசரகால சட்டமும், நினைவு தின அனுசரிப்பும் இருவேறு விடயங்கள் என சுட்டிக்காட்டிய ராணுவ தளபதி, நினைவு தினத்தை உரிய விதிமுறைகளின் கீழ் முன்னெடுக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, இலங்கையில் கடந்த ஏப் ரல் 21ஆம் தேதியன்று நடத்தப்பட்ட பயங் கரவாதத் தாக்குதல் சம்பவத்தின் விசா ரணைகள் குறித்தும் இதன்போது கருத்து வெளியிடப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் அணிதிரள அழைப்பு!

தமிழின அழிப்பான முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுக்கான பணிகள் இறுதி கட்டத்தை எய்தியுள்ளது. நினைவு முற்ற வளாகத்தில் சிரமதானம் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 18 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு மிகவும் அமைதியான முறையில் அனுஸ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டு குழு அறிவித்துள்ளது. அனைவரையும் திரண்டு அஞ்சலி செலுத்த வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்

AMNESTY INTERNATIONAL

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் களில் பாதிக்கப்பட்ட 1100 பேர் தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு அகதிகளாக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து இல ங்கை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டு மென சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித் துள்ளது.

சர்வதேச மன்னிப்பு சபை வியாழக்கிழமை இந்த விடயம் தொடர்பாக சுட்டிக்காட்டியுள் ளது. தற்காலிக இடங்களில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்கள், தற்போது நாட்டின் பல பிரதேசங்களில் வன்முறைச்சம்பவங்கள் பதியாகியுள்ளமையினால் பெரும் அச்சத் திற்கு மத்தியில் வாழ்கின்றனரென்றும் சர்வ தேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

அத்தோடு அவர்கள் உணவு, நிரந்தர மற்றும் பாதுகாப்பான உறைவிடம் இல்லாது துன்பப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மலசலகூட வசதிகள் இல்லாமையினால் ஆண்கள், பெண்கள் என அனைவரும் ஒரே மலசலகூடத்தினை பாவிக்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக வும் குறிப்பிட்டுள்ளது. அத்தோடு அவசர சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள முடியா துள்ளதாகவும் கூறப்படுகிறது.

எனவே அவர்களுக்கு தேவையான பாதுகாப்பான இருப்பிடம், உணவு உள்ளிட்ட அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையென் றும் அந்த சபை வலியுறுத்தியுள்ளது.

மேலும் ஆப்கானிஸ்தான், ஈரான் மற்றும் பாகிஸ்தானிலிருந்து அகதிகளாக இலங்கை க்கு வந்துள்ள மக்களும் இந்த தாக்குதல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களும் தற்காலிக இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தங்களது நாடுகளில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டு மன வேதனைகளுக்கு உள்ளான மக்கள், வலி களிலிருந்து மீண்டு இலங்கையில் பாதுகாப் பாக வாழமுடியுமென்ற நம்பிக்கையில் வாழ் ந்து வந்தனர். ஆனால் தற்போது தங்களின் நாட்டில் அனுபவித்ததைப் போன்றதொரு அச்சமான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன ரென்றும் சர்வதேச மன்னிப்பு சபையின் தெற் காசிய தலைவர் பிராஜ் பட்நாய்க் தெரிவித் துள்ளார்.

இலங்கை முஸ்லிம் பெண்கள் உயிரைக் காத்துக்கொள்ள காட்டுக்குள் தஞ்சம்

இலங்கையில் ஈஸ்டர் தின தொடர் குண்டு தாக்குதலை தொடர்ந்து முஸ்லிம்களுக்கு எதிராக பல இடங்களில் வன்முறை வெடித் துள்ளது. இலங்கையில் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்கு பின்னர், இஸ்லாமியர்கள் வாழும் பகுதிகளில் தாக்குதல்கள் நடத்தப் பட்டு வருகின்றன.

இந்த நிலையில், இலங்கையில் புத்த ளம், குருநாகல் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களின் முஸ்லிம்கள் வாழும் சில பகுதிகளிலும் மே 13 அன்று தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இந்த தாக்குதல் சம்பவங்களினால் பல முஸ்லிம் கிராமங்கள் கடுமையான சேதம் மற்றும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. இவ் வாறு பாதிக்கப்பட்ட கிராமமொன்றுக்கு பிபிசி தமிழ் சென்றது.

இது புத்தளம் மாவட்டத்திலுள்ள நாத் தாண்டிய துன்மோதர பிரதேசமாகும்.

இந்த பிரதேசத்தில் பெருமளவு தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்ற போதிலும், இந்த கிராமத்தை சூழ்ந்துள்ள பகுதிகள் அனைத்திலும் இலங்கையின் பெரும்பான்மை சமூகமான சிங்களவர்களே வாழ்ந்து வருகின்றனர்.

துன்மோதர பகுதிக்குள் மாலை வேளை யில் முகங்களை மூடியவாறு சுமார் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் ஒன்று கூடி பிர வேசித்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக் கின்றனர்.


துன்மோதர பகுதிக்குள் வெளிநபர்கள் பிரவேசிக்க முயற்சித்த சந்தர்ப்பத்தில், தமது கிராமத்து இளைஞர்கள் ஒன்று திரண்டிருந் ததை அவர்கள் அவதானித்துள்ளதாக அந்த பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரான நிஷ்தார் தெரிவிக்கின்றார்.

அதன்பின்னர், தமது கிராமத்திற்குள் பிர வேசிப்பதற்கான குறுக்கு வழிகளை கண்ட றிந்த முகங்களை மூடிய இளைஞர்கள், அந்த வழியாக தமது பிரதேசத்திற்குள் வருகைத் தந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

தமது பிரதேசத்திற்குள் வருகைத் தந்த வன்முறையாளர்கள், முதலில் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்திய நிலையில், அதனை சூழ்ந்துள்ள வீடுகள் மற்றும் வர்த்தக நிலை யங்கள் மீதும் தாக்குதல் நடத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

புத்தளம் நாத்தாண்டி துன்மோதர பகுதி யில் முஸ்லிம் மக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் பின்னணி யின் பாதுகாப்பு தரப்பினர் இருப்பதாக கூறப் படும் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிப்பதாக இராணுவ ஊடகப் பேச் சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து பிபிசி தமிழுக்கு தெரிவித்தார்.

தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்களை பதவியில் இருந்து நீக்க வேண்டும்



ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் களுக்கு பொறுப் பான அரசியல் தலை வர்கள், பதவிகளில் இருந்து வெளியேற் றப்பட வேண்டும் என்று கத்தோலிக்க திருச்சபை பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

சென்.லூசியா தேவாலயத்தில், கடந்த ஞாயிறன்றுநடந்த சிறப்பு ஆராதனையில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

“இந்த அழிவு கடவுளின் விருப்பத்துக்கு எதிரானது. இது மக்களின் பாவங்கள் காரணமாக நடந்தது. இதற்கு சகோதர, சகோதரிகள் இரையானார்கள். இது ஒரு பேரிடி. இந்த வலியில் இருந்து என்னால் மீள முடியவில்லை. இதற்கு அதிகாரிகள் மட்டுமன்றி, முன்னரே அறிந்திருந்தும், இத னைத் தடுக்கத் தவறிய நாட்டின் தலைவர் களும் தான் பொறுப்பேற்க வேண்டும்.

அதிகாரத்தில் இருந்து நீக்குவதன் மூலம் குற்றவாளிகளை நாம் தண்டிக்க வேண்டும்.” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


கனடாச் செய்திகள்

பாரிஸ் தேவாலயத்தை மீளக்கட்டமைக்க கனடா உதவி

பிரான்ஸில் அண்மையில் தீ விபத்து காரணமாக சேதமடைந்த நொட்றோ டேம் தேவாலயத்தினை புனரமைப்பதற்கு உருக்கு மற்றும் பலகை என்பவனற்வை வழங்குவதாக கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடே உறுதியளித்துள்ளார்.

கனேடிய பிரதமர் ட்ரூடே தற்பொழுது பிரான்ஸிற்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அற்புதமான தேவாலயத்தைப் பார்வையிடக் கிடைத்தமையைப் பெரும்பாக்கியமாக தாம் கருதுவதாக ட்ரூடே தெரிவித்துள்ளார்.

மிகவும் ஆபத்தான தீ விபத்திலும் தேவாலயத்தின் குறிப்பிடத்தக்களவு பகுதிகளில் சேதங்கள் ஏற்படாமை ஆச்சரியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இந்த தேவா லயத்தைப் புனரமைப்பதற்குத் தேவையான உருக்கு, பலகை மற்றும் வேறு உதவிகளை வழங்குவதற்குக் கனடா ஆயத்தமாக உள்ளது எனப் பிரதமர் ட்ரூடே தெரிவித்துள்ளார்.

குபெக் அரசின் மதசார்பற்ற தன்மையை உறுதி செய்யும் சட்டமூலம் பதட்டத்தை ஏற்படுத்துகின்றது - மொன்றியல் முதல்வர்

குபெக் மாகாண அரசின் மதசார்பற்ற தன்மையை உறுதி செய்யும் சட்டமூலம், சமூகத்தில் பதட்டத்தை ஏற்படுத்துவதாக மொன்றியல் மாநகர முதல்வர் வலறி பிளான்ட் (Valerie Plante) கூறியுள்ளார்.

மாகாணசபைக் குழுவொன்றின் முன்பாக அவர் கருத்து வெளியிடும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார். குபெக் மாகாணம் மதசார்பற்ற தன்மையுள்ளதென்பதற்குச் சட்டவடிவம் வழங்குவதை மொன்றியோல் மாநகரசபை ஆதரிப்பதாகவும் ஆனால் தற்போதைய சட்டமூலத்தின் வடிவத்தில் பிரச்சினைகள் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தச் சட்டமூலம் சிறுபான்மையினரை அதிகளவில் பாதிக்குமெனவும், ஆண்களை



விடப் பெண்களே அதிக அளவில் பாதிக்கப் படுவார்களெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் அவர்களது உரிமைகள் மீறப்படுவதற்கு எதிராக வழக்குத் தொடர முடியாத அரசியல் சாசனத்தின் சிறப்புரிமை பயன்படுத்தப்படுவதையும் அவர் குறை கூறியுள்ளார்.

சிறுவர்களைப் பராமரித்தல் செலவு அல்ல, ஆக்கபூர்வமான முதலீடு - ஒக்ஸ்பாம் கனடா

OXFAM Canada

சிறுவர்களை பராமரித்தல் ஓர் செலவாக கருதப்படக் கூடாது எனவும் அது ஓர் ஆக்கபூர்வமான முதலீடு எனவும் உலகின் முதனிலை தொண்டு நிறுவனங்களில் ஒன்றான ஒக்ஸ்பாம் கனடா தொண்டு சுட்டிக்காட்டியுள்ளது. பொதுமக்களின் பணத்தை நிதியீட்டம் செய்யும் சிறுவர் பராமரிப்பு முறைமை ஒன்றை கனேடிய மத்திய அரசாங்கம் உருவாக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

காத்திரமான சிறுவர் பராமரிப்பு நடவடிக்கைகளின் மூலம் எதிர்காலத்தில் பால் நிலை சமத்துவத்தை பேணவும் பொருளாதாரத்தை வலுவூட்டவும் முடியும் என தெரிவிக்கப்படுகிறது. சிறுவர் பராமரிப்பிற்காக அதிகளவு பணத்தை செலவிடும் நாடுகளின் வரிசையில் கனடா முன்னணி வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ரொறன்டோவில் சிறுவர் பராமரிப்பிற்காக குடும்பம் ஒன்று 20000 டொலர்களை செலவிடுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவில் பணம் செலுத்தப்படாத பராமரிப்புப் பணிகளை அதிகளவில் ஆண்களை விடவும் பெண்களே செய்கின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் நிதியீட்டத்தின் ஊடாகப் பொதுவான சிறுவர் பராமரிப்பு பொறிமுறைமை ஒன்று உருவாக்கப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

கனடிய அரசியல்வாதிகள் சுயநலவாத அடிப்படையில் செயற்படுகின்றனர்: - எலிசபெத் மே



கனேடிய அரசியல்வாதிகள் குறுகிய சுயநலவாத அடிப்படையில் செயற்பட்டு வருவதாகப் பசுமைக் கட்சியின் தலைவர் எலிசபெத் மே (Elizabeth May) தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றம் தொடர்பில் துரித கதியில் செயற்படுவதற்கு கனேடிய அரசியல்வாதிகள் முனைப்பு காட்டுவதில்லை எனவும், குறுகிய அரசியல் லாபத்தின் அடிப்படையில் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வித பொறுப்பும் அற்ற இந்த அரசியல்வாதிகளை வரலாறு மிக மோசமாக நினைவில் நிறுத்திக் கொள்ளும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். காலநிலை மாற்றம் என்ற பாரதூரமான விவகாரத்தை இந்த அரசியல் வாதிகள் கால்பந்தாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

அவசர தேவையாகக் கருதி காலநிலை மாற்றம் குறித்த விவகாரங்களில் அரசியல் வாதிகள் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென தெரிவித்துள்ளார்.

ஏதிலிக் கோரிக்கையாளர் தடுப்பு முகாம் தேவையில்லை சமூக அமைப்புகள் எதிர்ப்பு

குபெக், லாவல் நகரில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஏதிலிக் கோரிக்கையாளர் தடுப்பு முகாமிற்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

லாவலில் ஏதிலிக் கோரிக்கையாளர் தடுப்பு முகாம் நிர்மானிக்கப்படுவதனை தடுத்து நிறுத்த வேண்டுமென பல்வேறு அமைப்புக்கள் கோரியுள்ளன. தங்களது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாதவர்கள் இந்த புதிய தடுப்பு முகாமில் தங்க வைக்கப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இந்த முகாமானது ஏதிலிக் கோரிக்கையாளர்களை பொருத்தமட்டில் ஓர் கொடூர தண்டனையாகவே இருக்கும் என



சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான ஓர் முகாம் அமைக்கப்படக் கூடாது என சுமார் 50 அமைப்புகள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இணையங்களைக் கட்டுப்படுத்தும் உடன்படிக்கையில் ஒப்பமிட்டது கனடா

இணையத்தின் ஊடாக வன்முறைகள், கடும்போக்குவாதத்தை தூண்டும் பிரச்சாரங்களை கட்டுப்படுத்தும் சர்வதேச பிரகடனத்தில் கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடே கைச்சாத்திட்டுள்ளார்.

பாரிஸ் நகரில் கடந்த புதன்கிழமை இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. சமூக ஊடக வலையமைப்பு நிறுவனங்கள், அரசாங்கங்கள் என்பன இணைந்து இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

அண்மையில் நியூசிலாந்தில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தைத் தொடர்ந்து, இணையத்தில் கடும்போக்குவாத பிரச்சாரங்களை கட்டுப்படுத்தும் பொறிமுறைமை ஒன்றை உருவாக்க வேண்டுமென அந்நாட்டு பிரதமர் ஜெசின்டா ஆர்டன் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் பரீஸில் நடைபெறும் கிறிஸ்ட்சேர்ச் நினைவுக் கூட்டத்தில் நியூசிலாந்து பிரதமர், பிரான்ஸ் பிரதமர் மற்றும்



கனேடிய பிரதமர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

வன்முறைகளைத் தூண்டவும் தீவிரவாத செயற்பாடுகளை முன்னெடுக்கவும் சமூக ஊடகங்கள் கருவியாக பயன்படுத்தப் படும் நிலைமையை தடுத்து நிறுத்தவே இவ்வாறான ஓர் உடன்படிக்கை சைச்சாத்திடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாச் செய்திகள்

ரஷ்யா, வெனிசுவேலா ஊடகவியலாளர்கள் கனடாவில் செய்தி சேகரிக்க அனுமதி மறுப்பு

ரஷ்யா மற்றும் வெனிசுவேலா ஆகிய நாடுகளின் ஊடகவியலாளர்கள் கனடாவில் செய்தி சேகரிப்பதற்கு அனுமதி மறுத்தமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



கனடிய அதிகாரிகளினால் இவ்வாறு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. கடந்த பெப்ரவரி மாதம் ஒட்டாவாவில் நடைபெற்ற லீமா குழு மாநாட்டின் போது வெனிசுவேலா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பில் ஈடுபட அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. ரஷ்யா மற்றும் வெனிசுவேலா ஆகிய நாடுகளின் அரச ஊடக நிறுவனங்களின் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகளின் நடவடிக்கைகளினால் கனடிய ஊடகவியலாளர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறித்த இரண்டு நாடுகளும் கனேடிய ஊடகவியலாளர்கள் அந்த நாடுகளுக்குள் பிரவேசிப்பதனை தடுக்க வாய்ப்பு உண்டு என தெரிவிக்கப்படுகிறது.

பிழையான பொய்யான தகவல்களை வெளியிடக் கூடும் என்ற அடிப்படையில் இந்த நாடுகளின் அரச ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாகக் கனேடிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முதற்றடவையாக ஒட்டாவாவுக்கு வெளியே உச்சநீதிமன்ற விசாரணைகள்

வரலாற்றில் முதல் தடவையாகக் கனடாவில் உச்ச நீதிமன்ற விசாரணைகள் ஒட்டாவா நகரிற்கு வெளியில் மேற்கொள்ளப்பட உள்ளன. இரண்டு வழக்குகள் குறித்த விசாரணைகளை நடத்தும் நோக்கில் உச்ச நீதிமன்றின் அதிகாரிகள் வின்னிபிக்கிற்கு விஜயம் செய்ய உள்ளனர்.



எதிர்வரும் செப்டம்பர் மாதம் உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் வின்னிபிக்கில் வழக்கு விசாரணைகளை மேற்கொள்ள உள்ளனர். உச்ச நீதிமன்றம் மக்களின் நீதிமன்றம் எனவும் அனைவரினாலும் அதனை அணுகக் கூடிய வசதிகள் இருக்க வேண்டுமெனவும் பிரதம நீதியரசர் ரிச்சர்ட் வாங்கர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ், ஒஸ்திரேலியா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளில் இந்த முறைமை அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குபெக் மாகாணத்தில் இஸ்லாமியப் பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள் அதிகரிக்கின்றன



குபெக் மாகாணத்தில் முஸ்லிம் பெண்கள் மீதான அடக்குமுறைச் சம்பவங்களின் எண்ணிக்கை வெகுவாக உயர்வடைந்துள்ளது.

அரச நிறுவனங்களில் மத அடையாளங்களை பிரதிபலிக்கும் ஆடைகளை அணியக் கூடாது என குபெக்கில் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் முஸ்லிம் பெண்கள் மீது அதிகளவில் துன்புறுத்தல்கள் பதிவாகின்றன என மகளிர் உரிமை அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது. பில் 21 என்ற குறித்த சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் பெண்கள் மீதான துன்புறுத்தல்கள் தொடர்பில் 40 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இழிவான சொற்களினால் தூற்றுதல் முதல் உடல் ரீதியான துன்புறுத்தல்கள் வரையில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக ஹிஜாப் அணியும் பெண்களே அதிகளவில் சம்பவங்களில் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இஸ்லாமிய எதிர்ப்பு கருத்துக்களை வெளியிட்டார் - முன்னாள் வேட்பாளருக்கு 2.5 மில்லியன் தண்டம்




இஸ்லாமிய எதிர்ப்பு கருத்துக்களை வெளியிட்ட மிசிசாகா நகர முதல்வருக்கான முன்னாள் வேட்பாளர் கெவின் ஜோன்ஸ்டனுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பிரபல உணவு விடுதிகளின் உரிமையாளர் மொஹமட் பாகியை மிகவும் இழிவாக மத வெறுப்புணர்வைத் தூண்டும் வகையில் ஜோன்ஸ்டன் கருத்து வெளியிட்டிருந்தார்.

இஸ்லாமிய எதிர்ப்பு கருத்துக்களை வெளியிட்ட ஜோன்ஸ்டனுக்கு ஒன்ராரியோ உச்ச நீதிமன்றம் 2.5 மில்லியன் டொலர்கள் அபராதம் விதித்துள்ளது.

கடந்த 2017ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் பல்வேறு சந்தர்ப்பங்களில் வகையிலான காணொளிகள் மற்றும் பதிவுகள் ஊடாக ஜோன்ஸ்டன் மொஹமட் பாகியை இழிவுபடுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜோன்ஸ்டன் மேயர் பதவிக்காக தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்ராறியோ அரசின் செலவுக்குறைப்பு சவால்களை எதிர்நோக்கும் உயர்நிலைப்பள்ளிகள்



ஒன்டாரியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் தலைமையிலான புரோகிரசிவ் கொன்சவேடிவ் அரசாங்கத்தின் செலவு குறைப்பு நடவடிக்கைகளினால் மாகாண உயர்நிலைப் பள்ளிகளில் நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது.

வழமை போன்று விருப்பத் தெரிவு கற்றை நெறிகளை நடாத்திச் செல்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக உயர்நிலைப் பள்ளி நிர்வாகங்கள் தெரிவித்துள்ளன.


செலவுக் குறைப்பு நடவடிக்கைகளினால் ஆசிரியர்கள் தொழில் வாய்ப்புக்களை இழக்க நேரிட்டுள்ளதுடன், சில கற்கை நெறிகளும் நிறுத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது.

கெல்டொன் (Caledon) மேஃபீல்ட் (Mayfield) உயர்நிலைப்பள்ளியில் மட்டும் நிதிப் பற்றாக்குறை காரணமாக 22 கற்கை நெறிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இசை, தொழில்நுட்பம் அல்லது கலைத்துறையில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்ராரியோ மாகாண கல்விச்சபைகளுக்கான செலவுக்குறைப்பு - மாணவரே அதிகம் பாதிக்கப்படுவர்

தொடரும் செலவு குறைப்பு நடவடிக்கைகளினால் ஒன்டாரியோ மாவட்ட பள்ளிக்கூட சபைகள் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளன. மாகாண அரசாங்கத்தின் செலவு குறைப்பு நடவடிக்கையினால் ஒன்டாரியோ மாவட்ட பள்ளிக்கூட சபை சுமார் 13 மில்லியன் டொலர்களை இழந்துள்ளது. குறிப்பாக பிரெஞ்சு மொழி ரீதியாக கற்கை நெறிகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு இந்த செலவு குறைப்பு நடவடிக்கைகள் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



பள்ளிக்கூட பேருந்து சேவைகள் உள்ளிட்ட உள்ளிட்ட பல்வேறு வசதிகளை வழங்குவதில் நிர்வாகங்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கும் எனவும் இதனால் மாணவர்களே இறுதியில் பாதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே ஒன்றாரியோ மாகாண காவல்துறைக்கான இவ்வாண்டுக்கான நிதி ஒதுக்கீட்டை ஒன்றாரியோ மாகாண அரசு 46 மில்லியன் டொலரால் குறைக்கவுள்ளது.

போக்குவரத்துச் செலவினங்களையும் களச் செலவினங்களையும் குறைப்பதன் மூலம் இந்தச் செலவினக் குறைப்பு எட்டப்படுமெனவும், காவல்துறை அதிகாரிகள் யாரும் பதவி இழக்க மாட்டார்களெனவும் மாகாண அரசு தெரிவித்துள்ளது.

புதிய ஒதுக்கீட்டைக் கொண்டு தமக்கு முன்புள்ள சவால்களைக் கையாளக் கூடிய வல்லமையை ஒன்றாரியோ மாகாண காவல்துறையின் தலைமை கொண்டிருப்பதாக அமைச்சர் சில்வியா ஜோன்ஸ் கூறினார்.


ஆனால், நெடுஞ்சாலைகள் சிலவற்றில் ஆகக் கூடிய வேகத்தை 110 கிலோ மீட்டராக அதிகரிக்கும் அதேவேளையில் மாகாண அரசு காவல்துறைக்கான நிதி ஒதுக்கீட்டை ஏன் குறைக்கிறதென மாகாண என்டிபி கேள்வி எழுப்பியுள்ளது.

கனடாச் செய்திகள்

ரொறன்ரோவில் நன்கொடைப் பொருள் பெட்டிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை!

நன்கொடைப் பொருள் பெட்டிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கு ரொறன்ரோ நகரசபை நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளது.

ரொறன்ரோவில் தற்போதுவரை 200 ற்கும் மேற்பட்ட சட்டவிரோத நன்கொடைப் பொருள் பெட்டிகள் பல இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. இதில் கடந்த குளிர்கால பகுதியில் வீடற்ற பெண்ணொருவர் குறித்த பெட்டிக்குள் சிக்கி உயிரிழந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.



இந்த கூட்டத்தின்போது சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தங்களது பெட்டிகள் பாதுகாப்பாக இருப்பதை நிரூபிக்க சில ஆவணங்களை சமர்ப்பிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ப்ரூர் ஸ்ட்ரீட் மற்றும் டோவர் சௌர்ட் வீதி அருகே வீடற்றவர்கள் இருக்கும் பகுதியில் வைக்கப்பட்டுள்ள நன்கொடைப் பொருள் பெட்டியில், கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை 8 பேர் சிக்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிபரல் கட்சியின் காலநிலை தொடர்பான பிரேரணைக்கு ஆதரவு தர மாட்டோம் - கன்சவேட்டிவ்



காலநிலை தொடர்பிலான அவசரநிலைமை குறித்த லிபரல் கட்சியின் பிரேரணைக்கு ஆதரவளிக்கப்படாது என்று கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் அன்ட்றூ ஷியர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் பிரதமர் ஜஸ்ரீன் ட்ரூடோ தலைமையிலான தேசிய காலநிலை அவசரநிலைமை குறித்த பிரேரணை கடந்'த வியாழக்கிழமை முன்வைக்கப்பட்டது.

காலநிலை மாற்றம் தொடர்பில் பிரதமர் ட்ரூடே தனிப்பட்ட ரீதியில் எவ்வித கரிசனையும் கொண்டிருக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரத்தியேக விமானத்தில் விடுமுறையை கழிப்பதற்காகப் பல தடவைகள் பயணங்களை மேற்கொள்ளும் ட்ரூடே காலநிலை மாற்றம் பற்றி பேசுவதற்கு தகுதியற்றவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் மாத இறுதிக்குள் தமது கட்சியினால் காலநிலை மாற்றம் தொடர்பிலான பிரச்சினைக்கான காத்திரமான தீர்வுத் திட்ட யோசனைகள் முன்மொழியப்படும் என்றும் ஷியர் தெரிவித்துள்ளார்.

நிதி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் கறுப்புப் பணம் பிரிட்டிஷ் கொலம்பியா நடவடிக்கை

சட்டவிரோதமாக நிதி நடவடிக்கைகள் தொடர்பில் பொது விசாரணைகள் நடத்தப்பட உள்ளதாக பிரிட்டிஸ் கொலம்பிய மாகாண அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனினும், பிரிட்டிஸ் கொலம்பியா மட்டுமன்றி நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் சட்டவிரோதமான கறுப்பு பணம் தொடர்பிலான பிரச்சினைகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குற்றச் செயல்களின் மூலம் ஈட்டப்பட்ட பில்லியன் கணக்கான டொலர்கள் எவ்வாறு நிதி நடவடிக்கைக்கு கொண்டுவரப்படுகின்றது என்பது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மாகாண முதல்வர் ஜோன் ஹோர்கன் தெரிவித்துள்ளார்.

வீடு விற்பனைத் துறை, ஆடம்பர கார் கொள்வனவு மற்றும் கசினோ சூதாட்டம் போன்ற துறைகளில் அதிகளவில் இந்த கறுப்புப் பணத்தின் புழக்கம் காணப்படுகின்றது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரிட்டிஸ் கொலம்பியாவில் பாரியளவில் சட்டவிரோத நிதிப் பரிவர்தனை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எவ்வாறு அனுமதியளிக்கப்பட்டது என்பதனை தெரிந்து கொள்ளும் உரிமை அனைத்து மாகாண பிரஜைகளும் உண்டு என்றும் முதல்வர் ஹோர்கன் தெரிவித்துள்ளார்.

காவல்நிலையத்தில் பூர்வகுடிச் சிறுமி மீது பாலியல் துன்புறுத்தல் - பூர்வகுடி விவகார அமைச்சர் கண்டனம்

கனடிய காவல் நிலையத்தில் பூர்வகுடியின சிறுமியொருவர் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்ட சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பூர்வகுடியினத்தைச் சேர்ந்த பதின்மவயதுடைய சிறுமியொருவரை விசாரணைக்கு உட்படுத்திய ஆண் காவல்துறை உத்தியோகத்தர் ஒருவர் மிகவும் அநாகரீகமான முறையில் கேள்விகளை எழுப்பி விசாரணை நடத்தியமை குறித்த காணொளி வெளியாகியுள்ளது.

இந்த சம்பவம் கடந்த 2012ம் ஆண்டில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாலியல் வன்கொடுமைச் சம்பவமொன்று தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக காவல் நிலையத்திற்கு சென்றிருந்த போது இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் இதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் பூர்வகுடியின விவகார அமைச்சர் கரோலைன் பென்னட் தெரிவித்துள்ளார்.

சம்பவமொன்றில் பாதிக்கப்பட்டு நியாயம் தேடி வருவோரை மீளவும் துன்புறுத்துவது மிகவும் இழிவான செயற்பாடு என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இறுதிப் போரில் இயங்கிய மருத்துவமனைகள் போல் இன்று ஒரு மருத்துவமனையை காணமுடியாமல் இருக்கிறது. வசதிகள் இல்லாமல் இயங்கிய மருத்துவமனைகள் இருந்த மண்ணில் இன்று வசதிகள் பல இருந்தும் இயங்க மறுக்கும் மருத்துவமனைகள் இருக்கின்ற சூழலில் அந்த மருத்துவமனைகளை நினைக்கத் தோன்றுகிறது.

கால் இழந்து மருத்துவமனையில் இருப்பதுவும் தெரியாது. அந்த மருத்துவமனை மீது இராணுவத்தினரால் தாக்குதல் நடத்தப்பட்ட போது மருத்துவமனைக்குள்ளேயே இறந்து கிடந்தார். மருத்துவமனைகளில் இறந்தவர்களை ஒன்றாக ஒரு இடத்தில் குழிவெட்டி மூடினர். போர் உக்கிரமடைந்த காரணத்தால் இவரது மனைவி வர முதலே குழிவெட்டி மூடினர்.

மறக்க முடியுமா?

தமிழின அழிப்பு நினைவு நாள் சிறப்புக் கட்டுரை

இறுதிப் போரில் மருத்துவமனைகள் பல கதைகள் சொல்லும். தமிழீழ பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளராக இருந்த கவிஞர் புதுவை இரத்தினதுரை அண்ணரின் உதவியாளராக இருந்த கனெக்ஸ் அண்ணரை தெரியாத ஆட்கள் கிடையாது. அந்தளவுக்கு எல்லோருடனும் புன்னகையுடன் பழகும் கனெக்ஸ் அண்ணர் ஒரு காலை இழந்து மருத்துவமனையில் இருக்கும் போது அந்த மருத்துவமனை மீதே தாக்குதல் நடத்தப்பட்டு கனெக்ஸ் அண்ணர் பிரிந்தது இன்றும் பலரது நினைவுகளில் இருக்கிறார்.

மருத்துவமனையில் கனெக்ஸ் அண்ணர் இருந்த போது அவரைப் பார்க்கப் போகிறவர்களிடம் மண்ணுக்காக காலப் பங்கை கொடுத்துவிட்டேன் என்று நகைச்சுவை கலந்த உரையாடலுடன் சொல்லுவாராம்.

அத்தனை பெரிய வலி என்றாலும் அதனைத் தாங்கிக் கொண்டு தன்னைப் பார்க்க வந்தவர்கள் கவலையின்றி செல்ல வேண்டும் என்பதற்காக சிரித்த முகத்தோடு அந்த மருத்துவமனையில் தான் கடைசியாக இருந்தார்.

கனெக்ஸ் அண்ணரின் மனைவிக்கு இவர் எங்கிருக்கிறார் என்று தெரியாது. இவர்

இறுதிப்போரில் பாதுகாப்பான இடமாக மக்கள் கருதிய மருத்துவமனைகளை மீது இராணுவத்தினர் இலக்கு வைத்து தாக்கினர். மருத்துமனைகள் என்று தெரிந்தும் இனஅழிப்பையே செய்தது இராணுவம்.

இன்று போர் விதிமுறைகளுக்கமைய போரை நடத்தினோம் என்று சொல்ல இவர்களால் எப்படி முடிகிறது.

உதயன்

கிளிநொச்சியில் இருந்த மக்கள் அனைவரும் இடம்பெயரும்வரை கிளிநொச்சி மருத்துவமனை இயங்கிக் கொண்டிருந்தது. கிளிநொச்சி மருத்துவமனை என்று தெரிந்தும் விமானத்தாக்குதலை சர்வதேசத்துக்குத் தெரியும் படி மனிதநேயமில்லாமல் வெளிப்படையாக தாக்குதலை மேற்கொண்டது இலங்கை இராணுவம்.

தருமபுரம் மருத்துவமனை, புதுக்குடியிருப்பு மருத்துவமனை இரண்டும் மருத்துவமனை என்ற வளம் அங்கு இருக்கவில்லை. காயமடைந்து கொண்டுவரப்படும் மக்களின் எண்ணிக்கை நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துக் கொண்டிருந்த போது என்ன செய்வது என்று தெரியாமல் முதல் உதவிச் சிகிச்சையை மட்டும் செய்தனர். மருத்துவர்கள் இரவு பகல் பாராமல் சிகிச்சையளித்துக் கொண்டே இருந்தனர்.

மருத்துவமனைகள் காயப்பட்டவர்களால் நிரம்பி வழிய பாடசாலைக் கட்டடங்களை மருத்துவமனைகளாகப் பயன்படுத்தினர். அரசாங்கத்திடம் இருந்து மருந்துப் பொருட்களும் மற்றும் எரிபொருட்களும் முற்றாக இடைநிறுத்தப்பட்டிருந்தன. வைத்திய அதிகாரிகள் உடனுக்குடன் மருத்துவமனை நிலைப்பாட்டினை எடுத்துக்கூறியும் எந்த ஒரு பலனும் கிடைக்கவில்லை மாறாக அந்த இடங்களுக்கு செல் தாக்குதல்கள் நடத்தப் பட்டன.



மருத்துவமனைகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களால் அரசாங்க மருத்துவமனைகளில் வேலை செய்ய பலர் முன்வரவில்லை. ஒரு சிலர் மட்டும் கடமையில் ஈடுபட்டனர். ஒரு நாட்டு அரசு என்று சொல்லிக் கொண்டிருக்கும் அரசு அந்த நாட்டு தமிழ் இன மக்களை காப்பாற்றத் தவறியது.

தமிழீழ மருத்துவத் துறையினர் மக்களுக்கான பணியில் ஈடுபட்டது யாவரும் அறிந்ததே. பெண்களும் குழந்தைகளும் அதிகளவில் காயமடைந்து கொண்டுவரப்பட்டபோது அவர்களிற்கான அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாது மருத்துவ துறையினர் தள்ளாடினர்.

போர்க்காயங்களில் குருதி ஏற்ற வேண்டிய தேவை மிகவும் அவசியம் இருந்தது. ஆனால் கண்மூடித்தனமாக தாக்குதல்கள் இடைவிடாது நடத்தப்பட்டுக் கொண்டு இருந்ததால் யாரிடமும் குருதியை எடுக்க முடியாத நிலை! ஒருவரிடம் குருதியை பெற்றால் அடுத்த நிமிடமே அவரும் காயமடைந்து வரக்கூடிய அசாதாரண நிலைதான் அங்கு நிலவியது. இக்கட்டான நிலையில் தான் தமிழீழ மருத்துவத்துறை அங்கு இயங்கிக் கொண்டிருந்தது.

இயலுமானவரை அவசியமான காயங்களிற்கு விரைவாக சத்திரசிகிட்சை மேற்கொள்ளப்பட்டது.

மருத்துவமனை வளாகங்களிலெல்லாம் காயமடைந்தவர்கள் தேங்கிக்கிடந்தார்கள் அவர்களிற்கான சிகிச்சை முடிப்பதற்கு முன்பே இன்னும் பெருமளவிலான மக்கள் காயத்துடன் கொண்டுவரப்படுவார்கள்.

காயங்களின் தன்மையை விபரிக்க முடியாது!

பாரிய காயங்களாகவும் கொத்துக்குண்டு தாக்குதல்களில் காயமடைபவர்கள் பலர் அந்த இடத்திலே கொல்லப்பட்டார்கள்.

பாரிய எரி காயங்கள் ஏற்பட்டிருந்தன. குழந்தைகள் பெரும்பாலும் மருத்துவமனைக்கு கொண்டு வரும்போதே இறந்து விடுவார்கள்.

பொஸ்பரஸ் குண்டு தாக்கத்தால் பலர் மயக்கமடைந்து கொண்டுவரப்பட்டார்கள். தாய்மார் பார்த்துக்கொண்டு இருக்கும்போது குழந்தைகள் இறப்பதும், குழந்தைகள் பார்த்துக் கொண்டிருக்கும் போது தாய் சகோதரர்கள் இறப்பதும் என்று ஒரு மனித குலத்திற்கு நடக்கக்கூடாத கொடூரங்களை இலங்கை அரசு தமிழினத்திற்கு நடத்திக்கொண்டிருந்தது.

மருத்துவமனைகளில் சிகிக்சை பெற்றுக் கொண்டிருக்கும் போதே மக்களும் மருத்துவ துறையினரும் கொல்லப்பட்டு இருக்கின்றார்கள். கிளிநொச்சி, உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, புதுமாத்தளன், வலைஞர்மடம் போன்ற இடங்களில் இருந்த மருத்துவமனைகள் மீது செல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.



மருத்துவமனைகளில் சிகிக்சை பெற்றுக்கொண்டிருக்கும் போதே மக்களும் மருத்துவதுறையினரும் கொல்லப்பட்டு இருக்கின்றார்கள். கிளிநொச்சி, உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, புதுமாத்தளன், வலைஞர்மடம் போன்ற இடங்களில் இருந்த மருத்துவமனைகள் மீது செல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

குறிப்பாக ஏப்ரல் 29 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் கனிஸ்ட உயர்தர வித்தியாலயத்தில் இயங்கிய மருத்துவமனை மீது இலங்கை இராணும் இடைவிடாது மிலேச்சத்தனமாக செல் தாக்குதலை மேற்கொண்டது.

பாரிய சத்திர சிகிட்சைகளை முடித்து icu என்று சொல்லப்படும் அவசர சிகிச்சை விடுதியில் நோயாளர்களுக்கான சிகிச்சை நடைபெற்று கொண்டிருந்த போது அந்த விடுதியின் நடுவில் விழுந்த செல் அந்த இடத்திலே பலரது உயிரைப்பறித்தது பலர் மீண்டும் காயமடைந்தவர்கள் 50 மேற்பட்டோர் கொல்லப்பட்டும் படுகாயமும் மடைந்தார்கள்.

இவை எல்லாம் பார்க்கும்போது முற்றாக தமிழினத்தை அழிக்க அரசாங்கம் தெட்ட தெளிவாக மேற்கொண்ட நடவடிக்கையே.

தொடர்ச்சி 54ம் பக்கம்...

தமிழின அழிப்பு...

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

இம்மாநிலத்தின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் தமிழர்களது உழைப்பும் இன்றியமையாதது. எனவே, ஒன்ராறியோ மாநில மன்ற உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு தீர்மானம் அல்லது சட்டமூலம் கனடிய நாடாளுமன்றத்திலும் தாக்கத்தினை ஏற்படுத்த வல்லது. அத்துடன் இதுபோன்றதொரு சட்டமூலமொன்றினை கனடிய நாடாளுமன்றத்திலும் கொண்டுவருவதற்கான அடிப்படைகளை இது ஏற்படுத்திக் கொடுக்கும்.

கனடா நாட்டில் மட்டுமன்றி, தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் பிற நாடுகளிலும் கூட இது சில மாற்றங்களுக்கு வழிவகுக்கலாம். பிற நாடுகளிலும் வாழும் தமிழர்கள் தத்தமது அரசியல் கட்டமைப்புகளுக்கு ஊடாக இவ்வாறான முயற்சிகளை மேற்கொள்வதற்கு இது ஒரு முன்னுதாராணமாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

இதற்கு அடித்தளமிடும் செயற்பாடுகளை கடந்த காலங்களில் இளையோர்களும் தமிழ் சமூகத்திலுள்ள பல தரப்பினரும், அனைத்து மட்டங்களிலுமுள்ள தமிழ் மக்களும் எடுத்திருந்தனர். அரசியல் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவது, கையெழுத்து அட்டைகள் அனுப்புவது, ஆதரவுக் கையெழுத்துகள் சேர்த்து அனுப்புவது போன்றவற்றை பலரும் தொடர்ந்து செய்துவந்தனர்.

இவற்றின் பலனாக ரொறன்ரோ மாநகர சபை மற்றும் பிரம்டன் நகரசபை போன்றவற்றில் தமிழின அழப்புக்கு எதிரான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன என்பது யாவரும் அறிந்ததே.

முள்ளிவாய்க்கால் இன அழிப்பின் பத்தாம் ஆண்டில் கொண்டுவரப்படும் இச்சட்டமூலமானது, கனடா வாழ் தமிழ் மக்களின் தமிழின அழிப்புக்கு எதிரான நீதி வேண்டிய போராட்டத்துக்குக் கிடைத்திருக்கும் குறிப்பிடத்தக்கதொரு வெற்றியென்றே கூற வேண்டும்.

2009 காலகட்டத்தில் நாம் வீதிகளில் நின்று உச்சமடைந்திருந்த இன அழிப்புக்கு நீதி கேட்டுப் போராடினோம். நடைபெறவில்லை.

ஆனால், இன்று எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் தேடி நாமே சில நகர்வுகளை மேற்கொண்டுள்ளோம். இதில் இங்கு வாழும் நம் ஒவ்வொருவரதும் ஆதரவு நிச்சயம் தேவை.

இதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு, இதனை சட்டமூலமாக கொண்டுவந்த ஒன்ராறியோ மாநிலமன்ற உறுப்பினர் திரு. விஜய் தணிகாசலம் அவர்களைப் பாராட்டுவதுடன், இனிவரும் காலங்களில் அவர் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும் நாம் துணைநிற்க வேண்டும்.

இச்சட்டமூலம் இப்போது வாக்கெடுப்புக்கு விடப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், எதிர்காலத்தில் இது ஒரு முழுமையான சட்டமாக்கப்படுவதற்கான அனைத்து முயற்சிகளிலும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைப்பது எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

தமிழின அழிப்பு பிரேரணை...

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

1. இலங்கையில் வன்முறை, பயங்கரவாதம், போர் என்பவற்றால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அதன் இரங்கலைத் தெரிவிக்கிறது.
2. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக் கப்பட்டோருக்கு நீதி வழங்குவதற்கும், மதச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அனைத்து மத வழிபாட்டுத் தலங்களையும் பாதுகாப்பதற்கும் இலங்கை அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவை வழங்குகிறது.
3. ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் 30/1, 40/1 ஆகிய தீர்மானங்களின் கீழ் இலங்கைக்கு உள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுமாறு கனேடிய அரசு விடுத்த கோரிக்கையை மீள உறுதிசெய்வதுடன், பொறுப்புக் கூறலை மேற்கொள்வது, சமாதானத்தை ஏற்படுத்துவது, நாட்டில் உள்ள அனைவருக்கும் மத்தியில் மீளிணக்கத்தை ஏற்படுத்து ஆகியவற்றுக்குக் கனடாவின் ஆதரவை மீள உறுதிசெய்கிறது. அத்துடன்,
4. 2009 ஆம் ஆண்டில் இலங்கைப் போரின் இறுதியில் தமிழர்கள் மீது புரியப்பட்டதாகக் கூறப்படும் இனப்படுகொலை குறித்து விசாரணை செய்வதற்கு சுதந்திரமான, சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை அமைக்குமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் கோரிக்கை விடுக்கிறது.

ஒட்டாவா நாடாளு...

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

இதேவேளை, இலங்கை அரசாங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட சிங்கள இனத்தைச் சார்ந்த ஒரு பௌத்த பிக்கு உட்பட 25 நபர்கள் சிங்கக் கொடியுடன் தமிழர்களுக்கு எதிராக போர்க்கொடி தூக்கி உள்ளனர். இலங்கையில் நடந்தது இனப்படுகொலை இல்லை என்றும், போரில் தீவிரவாதிகள் மட்டுமே கொல்லப்பட்டனர் என்றும் சிங்கக் கொடியை உயர்த்தி பிடித்தபடி கோசம் இட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் தமிழ் மக்களின் 2009 இனப்படுகொலை சாட்சியாளர் வைத்தியர் வரதராஜா பங்கு கொண்டு இறுதிப் போரில் நடந்த விடயங்களை மிகவும் விரிவாக விளக்கமளித்துள்ளார்.

மொன்றியலில் இருந்து வந்த பிதா ஜஸ்ட் நிக்சன் ஈஸ்டர் தினத்தில் நடந்த படுகொலை மற்றும் 2009 இனப்படுகொலை போன்றவை மீண்டும் எமது இனத்துக்கு நடக்க கூடாது என்று பிரார்த்தனை செய்துள்ளார்.

அதனை தொடர்ந்து அடுத்த தலைமுறையை சார்ந்த இளையோர் பலர் சிறுவர்களை பார்த்து நீங்கள் தான் அடுத்த தலைமுறையினர் என்றும் எமது இனத்தின் விடுதலைக்காக உழைக்க வேண்டும் என்றும் எடுத்து உரைத்துள்ளனர்.

இறுதியாக ஒட்டாவா நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய அனிதா வன்டென்பெல்ட் அம்மையார் தமிழ் இனத்திற்கு எதிராக நடந்த கொடூரமான இனப்படுகொலை குறித்த விடயங்களை தான் மிக நன்றாக அறிந்து உள்ளதாகவும், தமது அரசாங்கம் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் சேர்ந்து நிரந்தர சமாதானத்தை உருவாக்க இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதாகவும் கூறினார்.

இறுதியாக இரண்டு நிமிட அமைதி வணக்கத்துடன் இனப்படுகொலை ஞாபகார்த்த நிகழ்வு ஒட்டாவா நாடாளுமன்றத்தின் முன் நிறைவடைந்தது. கலந்து கொண்ட அனைவரும் எதிர்வரும் காலங்களில் மேலும் உத்வேகத்துடன் தமிழின விடுதலை நோக்கிய போராட்டங்களை முன்னெடுப்பதாக உறுதி எடுத்தனர்.



முள்ளிவாய்க்காலுடன் முற்றுப்பெறுமா?

ஒரு சமுதாயத்தில் பெண்களின் பங்களிப்பும் பெண்களின் ஆளுமையும் அனைத்து சக்திகளாலும் ஆழமாக உள்நோக்கப்படுகின்றது. மேலைத்தேய நாகரீகத்திலும் சரி கீழைத்தேய நாகரீகத்திலும் சரி பெண்களின் பங்களிப்பு என்பது மிகவும் அவசியமான ஒன்றாகவே நோக்கப்படுகின்றது.

பெண் சமுதாயத்தில் ஏற்படும் வழுக்களும் தவறுகளும் அந்த சமுதாய இனவிருத்தியை முற்று முழுதாக அழித்து அந்த இனத்தையே பாழடையும் நிலைக்கு கொண்டு செல்லும் சக்தி வாய்ந்த ஒன்றாக மாறிவிடும் என்பதை நாம் உற்றுநோக்க வேண்டும்.

ஒவ்வொரு புரட்சியிலும் ஒவ்வொரு எழுச்சியிலும் மறைமுகமாக ஒரு பெண் நிச்சயம் வீற்றிருப்பாள். அவளை நாம் ஆழமாக கவனிக்க தவறுகின்றோம். அல்லது ஆணாதிக்க சமுதாயம் பெண்களின் எழுச்சியை மலர்ச்சியை இருட்டடிப்பு செய்து விடுகின்றது என்றும் கூறலாம்.

முள்ளிவாய்க்கால் முடிவுவரை எம் பெண்களை எவ்வாறு நாம் உற்று நோக்கினோம் அவர்களின் செயற்திட்டங்களை எவ்வாறு ஈழ சமுதாயம் கவனித்துக்கொண்டது என்ற ஒரு நோக்காக இந்த பதிவினை பதிகின்றேன்.

நிலா

2009 ஆண்டு காலத்திற்கு முன்னர் பெண்களை நாம் பல கோணங்களில் நோக்கியிருந்தோம். அந்த வழிமுறைகளை இப்போது நாம் கவனித்தால்

1) போராட்ட களத்தில் தீர்க்கமான போராடிய பெண்கள்
2) அரசியல் துறையில் நேர்த்தியாக பணிபுரிந்த ஆளுமையான பெண்கள்
3) நீதித்துறையில் நெருப்பாக நின்று தீர்ப்பெழுதிய பெண்கள்
4) பாதுகாப்பு பணியில் கடமையாற்றிய பாதுகாப்பு பெண்கள்
5) நிதித்துறையில் நியாயமாக நிதியை கையாள தெரிந்த நேரிய பெண்கள்
6) கல்வியில் முன்னணி பெற்று கல்வித்துறையில் சாதனை பெற்ற பெண்கள்
7) விளையாட்டு துறையில் வீரியம் பெற்ற விளையாட்டு துறை பெண்கள்
8) கலை, பண்பாட்டு, நடன துறையில் மிடுக்காக மிளிரும் ஒழுக்கம் நிறைந்த பெண்கள்
9) குடும்பத்தில் அழியாத காதல் கொண்டு குடும்ப படகை சரியாக வழிநடத்திய மாலுமி பெண்கள்

இந்த கட்டமைப்பை இன்று நாம் எவ்வாறு நோக்குகின்றோம் என்று கவனித்தால் முதல் ஐந்து தொழிற்பாட்டில் ஈடுபட்ட பெண்களை வாழ்விழந்தவர்கள் அல்லது வலுவிழந்தவர்களாக நோக்குகின்றோம்.

கொள்வதற்காக அந்த நேரத்தில் இருந்த உறுதிமிக்க ஒரு அமைப்புடன் இருந்து எமது விடுதலையை வேண்டியது எவ்வாறு குற்றமாக முடியும்? எமது வரலாற்று கடமையை சரியாக செய்யாமல் ஓடி ஒளிந்து எமக்கான அடிப்படைவாழ்வினை பெற்றுக் கொள்ளவும் பணம் சம்பாதிக்கவேண்டும் என்றும், பாரிய பொய்களை சொல்லி எமது விடுதலை போராட்டத்தை தீவிரவாதமாக சித்தரித்து தமது நலவாழ்வினை பெற்றுக் கொள்வதற்காக விடுதலை புலிகளால் நாம் பாதிக்கப்பட்டோம் என்று வாய்கூசாமல் பொய் பேசியவர்கள் பலர் தமது வாழ்விரிமையை மேலை நாடுகளில் பெற்றுக்கொள்ள எம் இனத்தின் விடிவிற்காக போராடிய அனைவரையும் தூக்குமேடையில் ஏற்றினோம் என்ற குற்ற உணர்வற்று, தேசம்விட்டு வேறு தேசம் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர்.

இப்படி வாழும் பல ஆண்களும் பெண்களுமே வெட்கி தலைகுனிய வேண்டியவர்கள் என்று கூறலாம்.இவர்களே இன்று ஈழத்தில் போராட்டத்தில் பங்குபற்றிய வீரமிக்க பெண்களை ஏதுமற்றவர்கள் போல சித்தரிப்பதில் முதன்மை பெற்று விளங்குகின்றார்கள். இவர்களாலேயே பலவிதமான இடர்பாடுகளை ஈழ பெண்கள் சந்திக்கின்றார்கள்.

ஈழத்தில் வாழும் பெண்களை நாம் அறிவுள்ள பெண்களாக போரின் வடுவில் பாதிக்கப்பட்ட இளைய சமுதாயத்தின் வழிநடத்தலில் இருந்து காக்கும் பாரிய பொறுப்பில் உள்ளவர்களாக இருக்கின்றோம். ஒரு சமுதாயத்தில் பெண்களின் வளர்ச்சியையும், எழுச்சியையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தினாலேயே அந்த சமூகத்தை அழிவில் இருந்து காப்பாற்றிட முடியும்.

அவர்களை சமூக அமைப்புக்களுடன் இணைத்து வாழ முடியாதவர்களாக மாற்றி விடுதலை புலிகளின் கட்டமைப்புக்குள் வாழ்ந்த பெண்களைநாம் அணைத்துக்கொண்டால் அவர்களால் எமக்கு தொந்தரவு என்று எண்ணி அவர்ளை ஒதுக்கி சமூக சூழலில் இருந்து தனித்து விட்டிருக்கின்றோம்.

விடுதலை போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்தி எம்மை பாதுகாத்த எம் நாட்டு தேவதைகளை சமூகத்தின் முன்னால் விபச்சாரிகள் என்றும், வறுமைப்பட்டு வாழ்வதால் தீண்டதகாதவர்கள் என்றும் கூறிக்கொண்டு எம்மை நீதியாளர்களாக காட்டிக்கொண்டு வாழ்கின்றோம்.

விடுதலை போராட்டத்திற்கு தம்மை அர்ப்பணித்த பெண்களை விலைபேசி அவர்களின் ஆளுமையை, அவர்களின் எழுச்சியை முடமாக்கி அவர்களை ஏதுமற்றவர்கள் போல உணரவைத்து அவர்களின் நாளாந்த செயற்பாட்டினை முடக்கி வைத்திருக்கின்றோம்.

"விடுதலை போராட்டத்தில் நீங்கள் ஈடுபட்டது மாபெரும் குற்றம்" என்பது போல சித்தரித்து அல்லது அவ்வாறான ஒரு மனநிலையை உருவாக்குவதில் பணம் படைத்த கல்வியாளர்கள் என்று கூறும் பலரும் சமூக சேவை செய்கின்றோம் என்று கூறும் சிலரும் காரணமாக இருக்கின்றோம்.

உண்மையில் விடுதலை போராட்டத்தில் ஈடுபட்டது தவறா?

இல்லை எமது உரிமையை பெற்றுக்

2009 ஆண்டு காலத்தின் முன்னர் ஒரு குடும்ப பொறுப்பை சுமக்கும் பெண்களாக இருந்தாலும் போராட்ட களத்தில் மேம்பட்டு வாழ்ந்த பெண்களாக இருந்தாலும் சரி சமூக சூழல் சிந்தனை பெற்றவளாக பெருவலு பெற்ற சிந்தையின் சக்தியாக விளங்கினார்கள். தத்துவம் என்று தெரியாமலே தத்துவ ஒழுக்க கோட்பாட்டில் வாழ்ந்து வந்தார்கள்.

போராட்டத்தை சுமத்த பெண்களை விடுதலை கட்டமைப்பு புடம்போட்டு ஒழுக்க சிந்தனை சக்திகளாக ஆளுமையின் தோற்றத்தின் எதிரொலியாக ஆத்ம சிந்தையின் உயிர்ப்பாக புடம்போட்டு வளர்த்தெடுத்தது. பெண்களின் சக்தியை மிகவும் சிறப்பாக பேணியது.

குடும்பம் என்ற பாரத்தை சுமந்த ஒவ்வொரு பெண்களும் "குடும்பம்" என்ற பாரத்தை சுமப்பது தனது அத்தியாவாசிய தேவை என்பதை அவளை சார்ந்த சொந்தங்கள், உறவுகள், அவளை சார்ந்த சமுதாய, சூழல் உருவாக்கி கொடுத்திருந்தது. குறித்த ஒரு குடும்பத்தில் பிணக்கு ஏற்படும்போது குடும்ப உறவுகள் தோளோடு தோள்நின்று பிணக்குகளை தீர்க்குவைக்கும் நிலை காணப்பட்டது.

தொடர்ச்சி 72ம் பக்கம்...


Soft Silk
Tusar Silk
Seiko
Chiffon Silk
Kalamkari


50% OFF
MAY 18,19,20 (10 AM to 9 PM)
SILK EXPO 2019
1120 Tapscott Road, Scarborough | M1X 1E8
ASIYANS
Quality Forever
TO
50%
OFF
MAY 18,19,20 (10 AM to 9 PM)
VICTORIA DAY SALE
3601 LAWRENCE AVE. EAST | ON M1G 1P5
Kancheepuram
Kalyani Silk
Mysore Silk
Banarasi Silk
Bangalore Silk

தமிழினப் படுகொலையின் 10ஆவது ஆண்டு நினைவு



ஏப்ரல், 2009 - ரொறன்ரோ

மே, 10, 2009 - கார்டினர் கடுகதி நெடுஞ்சாலை

அழுதோம்! புரண்டோம்! வீதிகளில் திரண்டோம்!



மே, 10, 2009 - கார்டினர் கடுகதி நெடுஞ்சாலை



மே, 13, 2009 -ரொறன்ரோ

மே, 1 , 2009 -ரொறன்ரோ



மே, இறுதி வாரம், 2009

மே, 13, 2009 -ரொறன்ரோ

நீதி கிடைத்ததா?



மே, 1 , 2009 - குயின்ஸ் பார்க்



முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு 2009



வீரமும் தீரமும் விளைந்த மண்

தேடிச்சோறு
சின்னஞ் சிறு
வாடித்துன்பமிக
வாடப் பல செயல்
கூடிக் கிழப்பருவ
கூற்றுக் கிரையென
வேடிக்கை மனித
வீழ்வே னென்று





2019 Mullivaikkaal Tamil Genocide




ின்று - பல
ள்பேசி - மனம்
ன்று - பிறர்
செய்து - நரை
ப்பதி - கொடுங்
ல் மாயும் - பல
போலே - நான்
னைத்தாயே!

கண்ணீரும் செந்நீரும் கலந்த மண்




தமிழின படுகொலையின்
10ஆவது ஆண்டு நினைவு






ஏப்ரல், 21, 2009 - கனடிய பாராளுமன்றம் முன்பாக





ஏப்ரல், 21, 2009 - ஒட்டாவா


கை கூப்பி கண்ணீர் மல்கி இரந்து நின்றோம்!




ஏப்ரல், 2009 - ஒட்டாவா














மே, 22, 2009 - குயின்ஸ் பார்க்










நியாயம் கிடைத்ததா?



ஏப்ரல், 21, 2009 - ஒட்டாவா

ஏப்ரல், 21, 2009 - கனடிய பாராளுமன்றம் முன்பாக


Formula Honda
SCARBOROUGH 31ST ANNIVERSARY
Honda CHECKERED FLAG EVENT
OUR BIGGEST EVENT OF THE YEAR IS BACK!
HONDA
2019
CR-V LX
$85/3.99% APR
WEEKLY LEASE FOR 60 MONTHS
$0 DOWN PAYMENT/OAC $0 SECURITY DEPOSIT
Proudly built in Ontario. The 2018 best-selling SUV in Ontario.
^Based on DesRosiers Sport Utility segmentation for the sales period January 1, 2018 – December 31, 2018
2019
Civic LX
$61/1.99%
2019
Accord LX
$83/2.99%
HondaOntario.com
Ontario Honda Dealers
LEASE PAYMENTS INCLUDE FREIGHT AND PDI.
EXCLUDES LICENCE AND HST. DEALER ORDER/TRADE MAY BE NECESSARY.
50 YEARS HONDA
Limited time lease offers available through Honda Financial Services Inc. (HFS), to qualified retail customers on approved credit. Weekly payments include freight and PDI ... depending on model, tire & environmental fee ($21) [This fee covers the cost to Honda Canada of collecting and recycling tires], A/C charge ($100), and OMVIC fee ($10). Taxes, licence, insurance and registration are extra. ^Representative weekly lease example: 2019 CR-V LX 2WD CVT (Model RW4H3KES) // 2019 Civic LX Sedan 6MT (Model FC2E5KEX) // 2019 Accord LX-HS Sedan (Model CV1F1KE) on a 60-month term with 260 weekly payments at 3.99% // 1.99% // 2.99% lease APR. Weekly payment is $84.23 // $60.03 // $82.88 with $0 down or equivalent trade-in and $0 total lease incentive included. Down payments, $0 security deposit and first weekly payments due at lease inception. Total lease obligation is $21,899.85 // $15,607.62 // $21,549.94. 100,000 kilometre allowance; charge of $0.12/km for excess kilometres. PPSA lien registration fee of $40.00 and lien registering agent's fee of $6.50, due at time of delivery are not included. For all offers: licence, insurance, PPSA, other taxes (including HST) and excess wear and tear are extra. Taxes payable on full amount of purchase price. Offers only valid for Ontario residents at participating Ontario Honda Dealers. Dealer may lease for less. Dealer order/trade may be necessary but may not be available in all cases. Colour availability may vary by dealer. Vehicles and accessories are for illustration purposes only. Offers, prices and features subject to change without notice. See your Ontario Honda Dealer or visit HondaOntario.com for full details.
HONDA
Formula Honda
Where You're Treated like Family.
Shan Sarvananthan
Sales Manager
Cell: 416-720-1184
2240 Markham Road
(just below Finch)
Scarborough
1-888-496-7156
www.formulahonda.com
Steeles
Finch
McCowan
Markham Rd.
Hwy 401
N
Rajah Tharmalingam
Sales Manager
Cell: 647-833-4998

கவி வெளி

எப்படி மறப்பது இந்த மே 18 ஐ.....?

தாழம் பூவோடும்
தாமரைத் தட்டோடும்
நாகதீபம் வரை
வந்து போகிறீர்கள்

வெள்ளை உடுப்புடுத்தி
நீங்கள் வரும்போது
வெள்ளைக் கொடியோடு
வெண் புறாக்கள் போன கதை
வந்து வந்து போகுது.

ஏதோ கொண்டு வருகிறீர்கள்
கொடுத்ததும் பார்க்கிறீர்கள்.
இனி இவர்கள்
மறந்து போவார்கள்
மாண்ட தமிழர்களை
மறைத்த உறவுகளை.

எப்படி மறப்பது
இந்த மே 18 ஐ..... ?

இது
கொன்ற தினத்தை
கொண்டாடிய நாள் அல்லவா!

மேனி கருகி
மேடாய் தெரிந்த நாள்

கூட்டாய் கொன்று குவித்ததை
கூகிளில் பார்த்து
கூக்குரல் இட்ட நாள்.

குழிவெட்டி எம் குஞ்சுகளை
குடும்பத்தோடு
புதைத்த நாள்.

எப்படி மறப்பது
இந்த மே 18 ஐ ....?

சரண் புகுந்த
தாய் குலத்தை
சட்டை அவிழ்த்து
பங்கு போட்ட நாள்..

சங்கர் மேனனும்
சங்கர் தயாள் சர்மாவும் சேர்ந்து
செய்து முடித்த நாள்

எப்படி மறப்பது
இந்த மே 18 ஐ ....?

ஐநா வரும் என்று
அதன் பொய்..நா... பார்த்து
பொசுங்கிப் போன நாள்

அமெரிக்க நரிகளை நம்பி
நடந்து போகையில்
நடு நெஞ்சில் சூடு
வாங்கிய நாள்

எப்படி மறப்பது
இந்த மே 18 ஐ....?

வெள்ளை கொடியோடு
போனவனை
வெட்டிப் போட்டு
வெற்றி என்று சொன்ன நாள்.

வெம்பி நின்ற சிறுசுகளை
கை கால் கட்டி
பின்னுக்கு நின்று
பிடரியில் சுட்ட நாள்

எப்படி மறப்பது
இந்த மே 18 ஐ .....?

புனர் வாழ்வு என
புது வான் இல் ஏற்றி இன்றும்
புதிராய் இருக்கும்
காணாமல் போனோரை
கைது செய்த நாள்.

கண்ணை கவரும்
நம் கன்னியரை
கவுன்சிலிங் என்று
கட்டிப் பிடித்த நாள்

எப்படி மறப்பது
இந்த மே 18 ஐ ....?

அகதி என்று
அனாதரவாக
அரை துண்டோடு
முட் கம்பிகளுக்குள்
முடங்கிக் கிடந்த நாள்

இறந்த எம் பிணங்களை
இழுத்துச் சென்று
இரசித்து, இச்சை தீர்த்து
இன்புற்ற நாள்.

எப்படி மறப்பது
இந்த மே 18 ஐ .... ?

கெடுத்து, கெடு தீர்த்து
மீண்டும் உடுத்தி
உலகுக்கு காட்டி
மருந்து போட்ட நாள்

மாசக் கர்ப்பிணிகளை
மழலை குஞ்சுகளை
பல குழல் பீரங்கிகள்
பதம் பார்த்த நாள்

எப்படி மறப்பது
இந்த மே 18 ஐ .... ?

வெற்று முலையில்
பால் கொடுத்து
வெம்பிய தாயையும்
முலை வற்றி மூச்சிழந்த
குழந்தையையும்
முள்ளி வாய்க்காலில்
பார்த்த நாள்.

ஓட்டுக் குழுக்களோடு
ஒன்பது நாடுகள் கூடி
ஒழித்திருந்து
காட்டிக் கொடுத்ததை
எப்படி மறக்க முடியும்

அந்த நந்தி கடலும்
முள்ளி வாய்க்காலும்
மூன்று முறை பிறந்தாலும்
முன்னூறு ஆண்டுகள் கடந்தாலும்
மறக்க முடியுமா என்ன ?

- தமிழ் குருவி





இலங்கையின் இனப்படுகொலை வரலாறு...!

பொன். தேசிகன்

உலகெங்கும் வாழும் தமிழர்கள் உரத்து உச்சரிக்கும் சொல்லாகவே இனப்படுகொலை உருவாகியிருக்கின்றது. குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் இளைய தலைமுறையினரும் பிறவினத்தோரும் இன்படுகொலை என்ற கோரக்கொலைகளின் ஆழத்தைப் புரிந்துவருகின்றனர்.

சிறிலங்காவின் நடந்த, நடந்து வருகின்ற இனப்படுகொலைகளுக்கான வரலாற்றுப் பின்னணி நீண்டது. இக்கொலைகள் பேரினவாதத்தை அடிப்படையாகக் கொண்டவை. பெரும்பான்மையினத்தவரான சிங்கள மக்களில் உள்ளத்தில் இப்பேரினவாத உணர்வுகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தலைதூக்கியிருந்தன எனலாம்.

5ம் 6ம் நூற்றாண்டுகளில் சைவ சமயமும் வைணவ வமயமும் தென்னிந்தியா எங்கும் ஆளுமை பெற்றன. அதற்கு முன் செல்வாக்குப் பெற்றிருந்த சமணமும் பௌத்தமும் மறையத் தொடங்கின. இலங்கையில் இந்த மதப் பரவலாக்கம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோர் தேவார, பாசுரங்களை உள்வாங்கி சைவர்களாக, வைணவர்களாக மாறினர்.

மதவாதப் போட்டிகளில் ஆயிரக்கணக்கில் பௌத்த துறவிகளை இழந்த இலங்கை பௌத்தர்கள் இந்த மத மாற்றத்தை ஏற்கவில்லை. மாறாக, தனித்துவம் மிக்கதாக பௌத்தத்தைப் போற்ற முற்பட்டனர்.

இக்காலத்தில் சிங்களம் என்ற மொழி தோன்றியிருக்கவில்லை. இலங்கை பௌத்தவர்கள் சிங்களவர்கள் என்று அழைக்கப்படவும் இல்லை. இக்காலகட்டத்தில்தான் பௌத்தத்தை நிலைநிறுத்துவதற்காக இலங்கை ஒரு பௌத்த நாடு என்ற கருதுகோளின் அடிப்படையில் மாகாவம்சம் என்ற நூல் எழுந்தது. இலங்கை வரலாற்றின் வ்ழியே இலங்கையை பௌத்த நாடு என்பதாகவே வரலாற்றைத் திரித்து எழுதியது மாகவம்சம்.

இந்த நூல் எழுந்த ஆறாம் நூற்றாண்டில் சிங்கள மொழி வ்ழக்கத்தில் இல்லாததால் பாளி மொழியிலேயே இது எழுதப்பட்டது.

எல்லாளனுக்கும் துட்டகெமுனுவுக்கும் நடந்த போர் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டதே தவிர, மதத்தையோ மொழியையோ காரணமாகக் கொண்டதல்ல. இருவர் படையிலும் தமிழரும் சிங்களவரும் கலந்திருந்தனர். மகாவம்சம் அதை மதப்போராகச் சித்தரிக்க முற்பட்டது.

ஒருவகையில் மதம் சார்ந்த இனவாதம் பௌத்தர்களிடையே தோற்றம் கொண்ட காலமாக இதைக் கருதலாம்.

ஏறக்குறைய 18ம் நூற்றாண்டுவரை அதிகாரப் போட்டிகளுக்குள் சிக்கியிருந்த இலங்கையில் மொழி சார்ந்த இனவடையாளங்கள் பெரியளவில் பேசப்படவில்லை. மதஞ்சார்ந்த மோதல்களும் பெருமளவில் அடையாளப்படுத்தவில்லை.

அநாகரிக தர்மபால என்ற பௌத்த துறவியின் வருகையின் பின்னரே, இலங்கையில் மதவாதம் புது வடிவங்களில் தலையெடுக்க ஆரம்பிக்கின்றது.

இந்த மதவாதப் போக்குகளே சைவத்துக்கு ஆறுமுகநாவலரையும் இஸ்லாத்துக்கு முகமது சித்திலெப்பையையும் உருவாக்குகின்றது.

இந்த முரண்களின் வழியே இலங்கையில் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்த சிங்கள மக்கள் தமது பேரினவாதச் சிந்தனைகளைக் கட்டமைத்துக் கொள்கின்றனர்.

பிரித்தானியர் ஆட்சியில் கல்வியில் சிறந்து விளங்கிய தமிழர், தம்மை இலங்கையராக கருதினர். முழு இலங்கைக்குமான தேவைகளுக்காகச் செயற்பட்டனர். எனினும் பேரினவாதச் சிந்தனைகள் அவர்களைத் தமிழராக வாழ வற்புறுத்தியது.

> சிறிலங்காவின் நடந்த, நடந்து வருகின்ற இனப்படுகொலைகளுக்கான வரலாற்றுப் பின்னணி நீண்டது. இக்கொலைகள் பேரினவாதத்தை அடிப்படையாகக் கொண்டவை. பெரும்பான்மை யினத்தவரான சிங்கள மக்களில் உள்ளத்தில் இப்பேரினவாத உணர்வுகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தலைதூக்கியிருந்தன எனலாம்.

பல்வேறு சிற்றரசுகளால் ஆளப்பட்ட இலங்கையை 1833இல் கோல்புறூக் சீர்திருத்தம் என்ற பெயரில் பிரித்தானியர் ஒருங்கிணைத்தனர். இந்த ஒருங்கிணைப்பு 1921இல் மானிங் சீர்திருத்தம் உருவாக்கம் பெறும் வரை நடைமுறையில் இருந்தது.

கோல்புறூக் அரசியல் முறைமை அனைவரையும் இலங்கையராகவே கருதியது. இனவடையாளங்கள் முதன்மைப்படுத்தப்படவில்லை. சேர். முத்துக்குமாரசுவாமி, சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் போன்ற தலைவர்கள் தமிழினத்தின் தலைவர்களாகக் கருதப்படவில்லை.

இலங்கையின் அரசியல் தலைவர்களாகவே இயங்கினார்கள்.

ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் அவர்கள் அறிமுகப்படுத்திய கல்விமுறைகளை உள்வாங்கி தம்மை கல்வியால் வளப்படுத்தியவர்களாகத் தமிழர்கள் இருந்தனர். அவ்வாற கல்வி வளர்ச்சி சிங்களவரிடையே இருக்கவில்லை. இதனால் சிங்களவரிடையே கல்வியறிவு மிக்க தலைவர்கள் போதியளவு இல்லாதிருந்தனர். இந்நிலையில் பிரித்தானிய அரசுடன் இணைந்து பணியாற்றிய தமிழ்த் தலைவர்கள் இலங்கை மக்கள் அனைவருக்குமாகவும் குரல் கொடுத்தனர். பெரும்பான்மை சிங்கள மக்களின் இறையாண்மையைப் பாதுகாத்தனர்.

கிறித்தவர்களாக மதம் மாறிய சிங்களவர்களே கல்வியறிவு பெற்று, சிங்கள மக்களின் பிரதிநிதிகளாக இருந்தனர். ஆனால் தமிழ்த்தலைவர்கள் சுதேச மதமான சைவத்தையே சார்ந்திருந்தமையும் பௌத்த சிங்களவர்களை ஈர்த்திருந்தது.

சிங்களவருக்குள் கிறித்தவ மதம் பரவிய வேளை, பௌத்த சிங்களவர் அதைக் கடுமையாக எதிர்த்தனர். வடக்கில் ஆறுமுகநாவலரும் அவர் அவர் வழிவந்த சேர்.பொன். இராமநாதன் போன்ற தலைவர்களும் கிறித்தவ மதப் பரவலை எதிர்த்தனர். இதுவம் பௌத்த சிங்களவர்களுக்கப் பிடித்திருந்தது. எனவேதான் பௌத்த சிங்களவர்கள் தமிழ்த் தலைவர்களின் தலைமையை ஏற்றனர்.

பிரித்தானிய அரசு நடைமுறைப்படுத்திய மற்றுமொரு சட்டத் சீர்திருத்தத்தின்படி, 1911இல் இலங்கை சட்டசபைக்கான முதலா்வது தேர்தல் நடைபெற்றது. சிங்களவர் உட்பட இலங்கையில் கல்வியறிவு பெற்ற அனைவரும் இலங்கையின் பிரதிநிதியாகப் பொன். இராமநாதனையே தெரிவுசெய்தனர்.

மாமனார் வழிச் செல்வாக்கும் கல்வியறிவும் பேச்சாற்றலும் சுதேச மதமான சைவ நெறியைக் கைவிடாமையுமே இராமநாதனின் செல்வாக்குக்குக் காரணமாக அமைந்தன.

1915இல் சிங்களவர்கள், இஸ்லாமியர் மீது திட்டமிட்ட தாக்குதல்களை நடத்தினர். இதில் கணிசமான இஸ்லாமியர் கொல்லப்பட்டனர்.

பிரித்தானிய அரசு இப்போராட்டத்தை அடக்கிக் காரணமான சிங்களத் தலைவர்களான டி.எஸ்.சேனநாயக்கா, எவ்.ஆர். சேனநாயக்கா, டயஸ் பண்டாரநாயக்க உட்பட பல தலைவர்களைச் சிறையில் அடைத்தது. அவர்களுக்கு மரண தண்டனையும் விதித்தது.

1915க்கு முன்னர் ஆங்காங்கே சிங்களவர் இனவாத முகத்தைக் காட்டியிருந்தாலும் பௌத்தத்தின் அடிப்படையில் கொடூரமான மதவாத முகத்தை பெருவடிவில் வெளிப்படுத்திய நிகழ்வு இதுதான்.

இந்தத் தண்டனைக்கு எதிராகப் போராடிய இராமநாதன், இங்கிலாந்து சென்று, மகாராணியைச் சந்தித்து அவர்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தார். இந்த நிகழ்ச்சி இன்றுவரை சிங்களவர்களால் நினைவுகூரப்படுகின்ற வரலாற்றுப் பதிவாகும்.

இராமநாதனும் தன்னை இலங்கையராகவே கருதிச் செயற்பட்டார். இலங்கையில் வாழும் இனங்கள் யாவும் ஓரே குலம் எனக் கருதினார்.

பௌத்த ஆலயங்களின் சொத்துரிமைச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கும் வெசாக் விடுமுறைத் தினச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கும் காரணமானார். சிங்கள மக்கள் மத்தியில் மொழிப்பற்றையும் தேசிய உணர்வையும் ஊட்டினார்.

1904 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி ஆனந்தா கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இராமநாதன், அங்கிருந்த சிங்கள மக்களைப் பார்த்து "சிங்கள நாக்குகள் சிங்கள மொழியைப் பேசாவிடின் வேறுயார்தான் இதைப் பேசப்போகின்றார்கள்?" என்று கர்ச்சித்தார். இவர் 1924இல் அரசியல் இருந்து ஓய்வுபெற்றார்.

இவருடைய சகோதரரான சேர்- பொன். அருணாசலம் 191 இல் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்று அரசியலில் ஈடுபடத் தொடங்கினார். இலங்கையர் என்ற அடையாளத்தைக் கொண்டவராக, பல பணிகளைச் செய்தார். அவற்றில் இரண்டு முக்கியமானவை. ஒன்று இலங்கைத் தேசியத்திற்கான அடித்தளத்தை உருவாக்கினார். அரசியல் சீர்திருக்கக் கழகத்தை உருவாக்கி, பிரித்தானியரிடமிருந்து விடுதலை வேண்டும் எனக் கோரி நின்றார்.

இலங்கை மக்களுக்கு ஒருமைப்பாடு கொண்ட தேசிய இயக்கம் தேவை என வலியுறுத்தினார். இந்த நோக்கில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பை உருவாக்கினார். இந்தியாவில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களும் அங்கு தோற்றம் பெற்ற இந்திய காங்கிரசின் செயற்பாடுகளும் இவருக்கு வழிகாட்டிகளாக அமைந்தன. இந்த அமைப்பின் முதலாவது தலைவராகவும் அவரே பதவியேற்றார்.

இவர் 1917 இல் அரசியல் சீர்திருத்தக் கழகத்தை உருவாக்கி பூரண சுதந்திரக் கோரிக்கையை வற்புறுத்தினார். பல்வேறு பிரதேசங்களிலும் இதற்காக பிரசாரம் செய்தார். இலங்கை மக்களுக்கென ஐக்கியப்பட்ட ஒரு தேசிய இயக்கம் தேவை எனக் கருதி இனரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் பிளவுண்டிருந்த எல்லா அமைப்புகளையும் இணைத்து 1919 இல் இலங்கைத் தேசிய காங்கிரஸை உருவாக்கினார். அதன் முதலாவது தலைவராகவும் அவரே பதவியேற்றார்.

இலங்கையர் என்ற அடையாளத்தை உயர்த்திப் பிடித்தே அருணாசலம் தன் பணிகளை முன்னெடுத்தார். பிற தமிழ்த் தலைவர்களும் அவ்வாறே கருதினர்.

1921இல் மானிங் அரசியல் சீர்திருத்தம் நடைமுறைக்கு வந்தது. மாகாண மட்டத்தில் பிரதிநிதிகள் தெரிவாகும் வாய்ப்புகள் ஏற்பட்டன. மேல் மாகாணத்தில் பிரதிநிதிகள் தெரிவில், சிங்களத் தலைவர்கள் ஒப்புக்கொண்ட பிரதிநிதித்துவத்தை வழங்க மறுக்கவே, திரு அருணாசலம் நொடிந்து போனார். இலங்கையர் என்ற ஒருமைப்பாட்டுக்கு அப்பால் சிங்கம் தன் பேரினவாத முகத்தை வெளிப்படுத்த ஆரம்பித்த நிகழ்வாகவும் இது இருந்தது.

இதுவே தமிழர் என்ற இனத்துக்கெதிராக இனவாதப் போக்கை அரசியல் சார்ந்து சிங்களவர் வெளிப்படுத்திய முதல் நிகழ்வாகும்.


அரசியல் மாற்றங்களுக்கமைய பிரத்தாணியர் அதிகாரத்தைச் சிறிதுசிறிதாக இலங்கையருக்கு வழங்கினர்.

இலங்கையர் என்ற வகையில் பெருமளவு அதிகாரங்கள் சிங்களவர்களின் கைகளுக்கே சென்றது. அவர்கள் திட்டமிட்டே இனஞ்சார்ந்து அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ச்சி 54ம் பக்கம்...


Buying a Home Right Now.....
"will be the best opportunity in your life time"
Over 26 years experience in Business. Always.. Forever ... Call: UTHAYAN
www.iyamhomes.com
Century 21
CENTURY 21 Green Realty Inc., Brokerage*
6980, MARITZ DRIVE, UNIT #8
Mississauga, ON. L5T 1Z3
Office: 905-565-9565, 416-293-2121
Uthayan Iyampillai
Sales Representative
Dir: 416-827-1366
Email: iuk2410@gmail.com
BRAMPTON
Williams Pkwy / North Park Dr
BR 3, WR 2
$$658,000
BRAMPTON
Wanless/Hurontario
BR 4, WR 3
$725,000
BRAMPTON
Van Kirk & Sandalwood Pkwy
BR 3, WR 3
$729,000
Uthayan Iyampillai
Sales Representative
Dir: 416-827-1366
BRAMPTON
W.Hurontario /Cresthaven
BR 3+2, WR 4
$729,000
BRAMPTON
Bramalea / Bovaird
BR 3+1, WR 4
$729,888
CALEDON
Rustic Way And Royalton
BR 3, WR 3
$759,000
BRAMPTON
Queen Mary & Sandalwood
BR 4+1, WR 4
$784,888
BRAMPTON
North Park/Dixie Rd
BR 4, WR 4
$784,900
BRAMPTON
Drinkwater/Queen
BR 4+2, WR 4
$799,000
BRAMPTON
Sandalwood & Queen Mary
BR 3, WR 3
$799,000
BRAMPTON
Mclaughlin/Sandalwood
BR 3+1, WR 4
$799,900
-Residential Mortgage
-Refinance
-1st 2nd and 3rd Mortgage
-Self Employed
-Newcomer to Canada
-Commercial Mortgage
I can BEAT THE BANK RATES
Cell: 416-827-1366
Office: 905-361-0166 Fax: 905-361-0711
email: uthayan_iyampillai@centum.ca
www.centum.ca/uthayan_iyampillai
CENTUM®
NEXES Financial Inc.
Brokerage Lic.# 12531
UTHAYAN Iyampillai
Mortgage Agent Lic: M16001232

ஈழ இனப்படுகொலையின் பத்தாம் ஆண்டு நினைவு குற்றவாளிகளைத் தண்டிப்பதே உண்மையான வீரவணக்கம்: - ராமதாஸ்



ஈழ இனப்படுகொலை .குற்றவாளிகளைத் தண்டிப்பதே உண்மையான வீரவணக்கம் என, பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ராமதாஸ் (செவ்வாய்க் கிழமை) வெளியிட்ட அறிக்கையில், "இலங்கையில் கண்ணியமாக வாழும் உரிமை கோரியதற்காக ஒன்றரை லட்சம் அப்பாவித் தமிழர்களை சிங்களப் படையினர் கொடூரமான முறையில் இனப்படுகொலை செய்ததன் பத்தாம் ஆண்டு நினைவு நாள் வரும் 17, 18 ஆகிய தேதிகளில் கடைபிடிக்கப் படுகிறது. உலகின் மிகக்கொடிய இனப்படுகொலை நிகழ்ந்து பத்தாண்டுகளாகியும் அதற்கு காரணமான கொடியவர்கள் தண்டிக்கப்படாதது கண்டிக்கத்தக்கது.

இன்றிலிருந்து பத்தாண்டுகளுக்கு முன்பு இலங்கையில் அப்பாவித் தமிழர்களை துப்பாக்கி குண்டுகள், ஏவுகணைகள் மட்டுமின்றி, தடை செய்யப்பட்ட கொத்து குண்டுகளையும் வீசிக் கொன்றொழிக்கும் சதியில் இலங்கை அரசு தீவிரம் காட்டியது. இந்தியாவில்·மக்களவைத் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு முன்பாக அனைத்து தமிழர்களையும் அழித்து விட வேண்டும் என்று வெறியாட்டம் ஆடிக் கொண்டிருந்தது ராஜபக்சே தலைமையிலான சிங்கள பேரினவாத அரசு. "தொப்புள்கொடி உறவுகளான எங்களைக் காப்பாற்றுங்கள்" என்று ஈழத்தில் இருந்து தமிழகத் தலைவர்களுக்கு வேண்டுகோள்கள் வந்து கொண்டிருந்தன. ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று என் போன்ற தலைவர்களும் மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தினோம்.

இலங்கையில் ஒன்றரை லட்சம் அப்பாவித் தமிழர்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அவர்களின் உடல்கள் உருத்தெரியாத வகையில் சிதைக்கப் பட்டு, யாராலும் கண்டுபிடிக்க முடியாதபடி அழிக்கப்பட்டிருந்தன. பல லட்சம் தமிழர்கள் முள்வேலி முகாம்களில் கொத்தடிமைகளை விட மிகவும் மோசமான முறையில், இயற்கை அழைப்புகளை நிறைவேற்றிக் கொள்வதற்குக் கூட வழியற்ற சூழலில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்

கொல்லப்பட்ட தமிழர்களின் குடும்பங்களுக்கு நீதியையும், அடைத்து வைக்கப்பட்டிருந்த தமிழர்களுக்கு விடுதலையையும் பெற்றுத் தர வேண்டிய தமிழக ஆட்சியாளர்கள், மத்திய அரசில் தங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த துறைகளை வழங்க வேண்டும் இல்லாவிட்டால் அமைச்சரவையில் சேர மாட்டோம் என்று மிரட்டிக் கொண்டிருந்தனர். மாறாக, 2009 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் படுதோல்வியடைந்த பாமக, அதை எண்ணி தளர்ந்து விடாமல், கொல்லப்பட்ட ஈழச் சொந்தங்களுக்கு நீதி பெற்றுத் தர வேண்டும் என்பதற்காக இலங்கை அரசு மீது இனப்படுகொலை மற்றும் போர்க்குற்ற விசாரணைக்கு ஆணையிட வேண்டும் என்று ஐநா மனித உரிமை ஆணையத்தில் இனப்படுகொலை நடந்த சில நாட்களில் பசுமைத் தாயகம் அமைப்பின் மூலம் வலியுறுத்திக் கொண்டிருந்தது.


அதன்பின் 10 ஆண்டுகளாகி விட்ட போதிலும் அதே நிலை தான் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பசுமைத் தாயகம் அமைப்பு மேற்கொண்ட முன்னெடுப்புகளாலும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் ஆதரவாலும் இலங்கையில் போர்க்குற்றங்கள் நடந்தது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும், திமுகவும், அதன் கூட்டணிக் கட்சிகளும் ராஜபக்சேவை வணங்கி, பரிசுப்பெட்டிகளை வாங்கி வந்ததையும், ஐ.நா.வின் பொதுச் செயலாளரை சந்திப்பதாகச் சென்று அதன் வாயில்காப்போனிடம் மனு கொடுத்து வந்ததையும் தவிர துரும்பைக் கூட அசைக்கவில்லை. ஈழத்தமிழர் நீதி பெறுவதில் அவர்களுக்கு அக்கறையில்லை. இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மீதான நீதி விசாரணைகள் குறித்து கடந்த மார்ச் மாதம் விவாதித்த ஐநா மனித உரிமைப் பேரவை, அடுத்த இரு ஆண்டுகளில் நீதி விசாரணையை முடித்து குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும் என்று காலக்கெடு நிர்ணயித்துள்ளது.

ஆனால், அதன்பின்னர் இரு மாதங்கள் கடந்து விட்ட நிலையில், அதற்கான நடவடிக்கைகள் எதையும் சிங்களப் பேரினவாத அரசு மேற்கொள்ளவில்லை இனி வரும் காலங்களிலும் சிங்கள அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காது. இலங்கை இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் குறித்த விசாரணையை அடுத்தடுத்தக் கட்டங்களைக் கடந்து 'தி ஹேக்' நகரில் உள்ள பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் ஐநா மனித உரிமை ஆணைய விசாரணைக் குழுவினர் திரட்டிய ஆதாரங்கள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் ராஜபக்சே சகோதரர்கள், சரத் பொன்சேகா உள்ளிட்ட போர்க் குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை ஈழத்தமிழர்களின் தந்தை நாடான இந்தியா மேற்கொள்ள வேண்டும். அதுதான் சிங்கள வெறி அரசால் இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழர்களுக்கு அவர்களின் பத்தாவது நினைவு நாளில் செலுத்தப்படும் சிறப்பான வீரவணக்கமாக அமையும்" என, ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

"இந்தியாவின் முதல் தீவிரவாதி நாதுராம் கோட்சே" ஒரு இந்து: கமல்ஹாசன் கருத்து, பாஜக கண்டனம்

சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதி நாதுராம் கோட்சே என்ற இந்து என மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. பாரதீய ஜனதாக் கட்சியினர் இதற்கு கடும் எதிர்வினையாற்றிவருகின்றனர்.

அரவக்குறிச்சி தொகுதிக்கு நடைபெறும் இடைத் தேர்தலில் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யத்தின் சார்பில் மோகன் ராஜ் என்பவர் போட்டியிடுகிறார். இவருக்காக பள்ளப்பட்டி அண்ணா நகர் பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்ட கமல்ஹாசன், "சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதி ஓர் இந்து. அவர் பெயர் நாதுராம் கோட்சே. அங்கு துவங்குகிறது அது. நான் காந்தியின் மானசீக கொள்ளுப்பேரன். அந்தக் கொலைக்குக் கேள்விகேட்க வந்திருக்கிறேன் நான் இன்று. இது சமரச இந்தியாவாக சமமான இந்தியாவாக, மூவர்ணக் கொடியில் மூவர்ணங்களும் அப்படியே இருக்க வேண்டும் என்பதுதான் நல்ல இந்தியர்களின் ஆசை. நான் நல்ல இந்தியன்" என்று பேசினார்.



அவரது இந்தக் கருத்துக்கு பாரதீய ஜனதாக் கட்சியினர் கடுமையாக எதிர்வினையாற்றிவருகின்றனர். பள்ளபட்டியில் சிறுபான்மை மக்கள் நடுவில் நின்றுகொண்டு மத உணர்வுகளைத்தூண்டி கலவரத்தை ஏற்படுத்த நினைக்கும் இவர்மீது தேர்தல் ஆணையம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என் பா.ஜ.க.வின் தமிழகத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கூறியிருக்கிறார்.

மேலும், "மகாத்மாவின் படுகொலையை கண்டித்து நாடே பதறியத் கொலையாளி தூக்கிலிடப்பட்டார். ஆனால் அதை இந்து தீவிரவாதம் என தேர்தல் பிரச்சாரத்தில் பேசுவது விஷமத்தனமானதும் ஆபத்தானதும் கூட. புதிய அரசியலை முன்னெடுப்பதாகக் கூறும் கமல், பழையதை கையில் எடுப்பது மத விஷம் பரப்பி வரும் ஓட்டுக்காகத்தானே?" என்று கேள்வியெழுப்பியுள்ள தமிழிசை, "தன் வாழ்க்கையில் எப்போதும் ஒழுக்கத்தையே கடைப்பிடித்த காந்தியின் கொள்ளுப்பேரன் தான் என்று சொல்லிக்கொள்ள எந்த தகுதியும் இல்லாதவர் கமல். ஏனெனில் இதுவரை அவர் வாழ்ந்த வாழ்க்கையில் எந்த ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்காதவர் என்பது நாடறிந்த உண்மை!" எனவும் சாடியுள்ளார்.

கமல்ஹாசனின் கருத்தைக் கண்டித்திருக்கும் பா.ஜ.கவின் தேசியச் செயலர் எச்.ராஜா, கமல்ஹாசனை ஜின்னாவின் பேரன் என்று கூறியதுடன், முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டிய விஷச்செடி மக்கள் நீதி மய்யம் என்றும் கூறியிருக்கிறார். அத்துடன் முஸ்லிம்களின் ஓட்டுக்காக இந்துக்களை கமல்ஹாசன் இழிவுபடுத்துவதாகவும் கூறியிருக்கிறார்.

கமல்ஹாசன் மீது செருப்பு வீச்சு!

திருப்பரங்குன்றத்தில் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்ட மேடையிலிருந்த மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசனை நோக்கிச் செருப்பு வீசப்பட்டுள்ளது. செருப்பு வீசிய நபரைப் பிடித்துப் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதி ஓர் இந்து என்று கமல் கூறியதற்குப் பாஜகவினரும் இந்து அமைப்புகளும் கடும் கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றனர். இதனால் எழுந்த சர்ச்சையால் கடந்த இரண்டு நாட்களாகப் பிரச்சாரத்திற்குச் செல்லாமல் இருந்த கமல் போலீஸ் பாதுகாப்புடன் கடந்த புதன்கிழமை திருப்பரங்குன்றத்தில் பிரச்சாரத்தைத் தொடங்கினார்.

வில்லாபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த பொதுக்கூட்ட மேடையில் பிரச்சாரம் மேற்கொண்டார். முதலில் மேடையில் இருந்த கமல், நிர்வாகிகள் பேசி முடித்த பிறகு, பேசுவதற்காக எழுந்து மைக் அருகில் வந்தார். அப்போது திடீரென கூட்டத்தில் இருந்த ஒருவர் கமலை நோக்கி செருப்பை வீசியுள்ளார். பின்னர் அங்கிருந்த சில இளைஞர்கள் கமலுக்கு எதிராக கோ'ம் எழுப்பியுள்ளனர்.

பிரச்சார கூட்டத்துக்குப் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்த போதும் இந்த சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இந்த சம்பவத்தைத் தொடர்ந்து கமலை நோக்கிச் செருப்பு வீசியவரையும் கோ'மிட்டவர்களையும் கைது செய்த போலீசார் அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். அவர்கள் பாஜகவைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

எலெக்ட்ரிக் வாகனங்களால் பெருகும் வேலை!



வரும் காலங்களில் எலெக்ட்ரிக் வாகனத் துறை 1 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று ஆய்வு ஒன்று கூறுகிறது. பெட்ரோலியப் பொருட்கள் விலையேற்றம், சுற்றுச் சூழல் மாசுபாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இந்தியா எலெக்ட்ரிக் வாகனப் பயன் பாட்டுக்கு மாறிவருகிறது. இதனால் வாகன எஞ்சின் விதி முறைகளும் கடுமையாக்கப்பட்டு வருகின்றன. எலெக்ட்ரிக் வாகனப் பயன்பாட்டை நோக்கிய பயணத்தில், எலெக்ட்ரிக் வாகனத் துறைக்குத் தேவையான மனித சக்தி உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்தித் தரும் நடவடிக்கையில் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு அமைச்சகம் இறங்கியுள்ளது.


வடிவமைப்பு, பரிசோதனை, பேட்டரி உற்பத்தி, விற்பனை, சேவை மற்றும் உள்கட்டுமானம் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வேலையாட்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இதன் மூலம் 1 கோடி வேலை வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று புனேவை மையமாகக் கொண்டு இயங்கும் இந்திய ஆட்டோமோட்டிவ் ஆய்வு கூட்டமைப்பு வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டுக்குள் இந்தியச் சாலைகளில் சுமார் 70 லட்சம் எலெக்ட்ரிக் வாகனங்கள் இயங்கும்படியான திட்டம் ஒன்று 2013ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதன் கீழ் வாகனப் போக்குவரத்தில் 30 சதவிகித அளவை எலெக்ட்ரிக் மயமாக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. மேலும், மத்திய அரசின் ஆட்டோ மெீன் திட்டத்தின் கீழ் கூடுதலாக 6.5 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப் படவுள்ளன.

பணப்பட்டுவாடா: அதிமுகவினர் 4 பேர் கைது!

திருப்பரங்குன்றத்தில் வாக்காளர்களுக்குப் பணம் விநியோகம் செய்ததாக அதிமுகவினர் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மே 19ஆம் தேதி நடைபெறும் 4 சட்ட மன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் திருப்பரங்குன்றம் தொகுதியில் அதிமுக சார்பில் எஸ்.முனியாண்டி போட்டியிடுகிறார். அவரை ஆதரித்து தமிழக முதல்வரும், அதிமுக இணை ஒருங்கிணைப்பாளருமான பழனிசாமி உள்ளிட்ட அதிமுகவின் பல்வேறு முக்கிய நிர்வாகிகள் பிரச்சாரம் செய்து வருகின்றனர். அதிமுக வேட்பாளர் முனியாண்டியை வெற்றி பெறச் செய்வதற்காக அதிமுகவினர் பணப்பட்டுவாடாவில் ஈடுபட்டு வருவதாக தேர்தல் பறக்கும் படை அதிகாரிகளுக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.

உலகச் செய்திகள்

எல்லா மொழி விக்கிபீடியாவும் சீனாவில் முடக்கம்



சீன பெருநிலப்பரப்பில், ஆன்லைன் என்சைக்லோபீடியாவான விக்கிபீடியா தளம் முழுமையாக முடக்கப்பட்டுள்ளது என அந்த வலைதளத்தை நடத்திவரும் விக்கிமீடியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாத இறுதியில் இருந்து விக்கிபீடியாவின் அனைத்து மொழித்தளங்களையும் சீனாவில் அணுக முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது என்று விக்கிபீடியா நிறுவனம் கூறியுள்ளது.

இது தொடர்பாக தங்களுக்கு நோட்டீஸ் எதுவும் வழங்கப்படவில்லை என்றும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

ஃபேஸ்புக், டிவிட்டர் உட்பட நூற்றுக்கணக்கான வலைதளங்கள் சீன அதிகாரிகளால் முடக்கப்பட்டுள்ளன. சீன மொழி விக்கிபீடியா தளத்தை 2015ஆம் ஆண்டிலிருந்து பயனர்கள் பயன்படுத்த முடிவதில்லை.

எவர் வேண்டுமானாலும் பக்கங்களை உருவாக்க, எடிட் செய்ய வழியுள்ள விக்கிபீடியாவை 2017-ம் ஆண்டு துருக்கி தடை செய்தது. இந்த ஆண்டு வெனிசுவேலாவில் இந்த தளம் அவ்வப்போது முடக்கப்படுகிறது.

செவ்வாய் கிரகத்தில் வாழும் திறனுள்ள பூமியின் பழங்கால உயிரிகள்



சில தாவரங்கள் மிக கடுமையான சூழலிலும் வாழக் கூடியவை. ஆக்சிஜனே இல்லாத நிலையிலோ அல்லது மிகவும் அதிக வெப்ப நிலையிலோ உயிர்வாழக் கூடியவையாக அவை உள்ளன.

தாவரங்களின் தாக்குபிடிக்கும் தன்மையானது, பருவநிலை மாற்ற சூழ்நிலை நமது உணவு உற்பத்தியை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பது பற்றியும், மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப பயிர்கள் எப்படி தகவமைப்பு செய்து கொள்ளும் என்பது பற்றிய ஆராய்ச்சியில் விஞ்ஞானிகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் ஒன்றைவிட மற்றொரு தாவரம் அதிக தாக்குபிடிக்கும் தன்மை கொண்டது என எப்படி அமைகிறது? இதற்கான பதிலை கண்டறிவதற்கு தாவரவியலாளரும் பிபிசி நிகழ்ச்சித் தொகுப்பாளருமான ஜேம்ஸ் வோங் முயற்சி மேற்கொண்டார். அப்போது நமது பூமியின் கடினமான தாவரங்களின் வினோதமான மற்றும் ஆச்சர்யத்துக்குரிய உண்மைகளை அவர் கண்டறிந்தார்.

அமெரிக்காவில் தகவல் தொழில்நுட்ப அச்சுறுத்தல் அவசர நிலை பிரகடனம் செய்த டிரம்ப

வெளிநாட்டு எதிரிகளிடம் இருந்து அமெரிக்காவின் கணினி நெட்வர்க்குகளை பாதுகாக்க, அந்நாட்டில் அவசர நிலையை அதிபர் டொனால்டு டிரம்ப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

அவசர நிலைக்கு டிரம்ப் கையெழுத்திட்டதை தொடர்ந்து, அமெரிக்க நிறுவனங்கள், வெளிநாட்டு தொலைதொடர்புகளை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்படுகிறது. அவை அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அபாயம் விளைவிப்பதாக கருதப்படுகிறது.

எந்த நிறுவனம் என்று அதிபர் டிரம்ப் குறிப்பிடவில்லை என்றாலும், சீனாவின் மிகப்பெரிய தொலைதொடர்பு நிறுவனமான ஹுவாவேயை நோக்கியே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அந்நிறுவனத்தின் சாதனங்கள், சீனா வேவுபார்க்க பயன்படுத்தப்படலாம் என்று அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் கவலை தெரிவித்திருந்தன. ஆனால், அதனை ஹுவாவே மறுத்துள்ளது.

மாலி எல்லைப்பகுதி அருகே தீவிரவாதிகள் தாக்குதல் - 28 இராணுவத்தினர் உயிரிழப்பு



மாலி எல்லைப்பகுதி அருகே தீவிரவாதிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதில் உயிரிழந்த நிகர் படையினரின் எண்ணிக்கை 28 ஆக உயர்வடைந்துள்ளது. இதனை உறுதிப்படுத்திய இராணுவ செய்தி தொடர்பாளர், இந்த சம்பவத்தை அடுத்து 11 இராணுவத்தினரை காணவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

டொங்கோ டொங்கோவின் மேற்கு பகுதியில் ஐ.எஸ். உட்பட பல ஜிகாத் குழுக்கள் தீவிரமாக செயல்படும் பகுதியில் வைத்தே இந்த தாக்குதலை நடத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களாக நிகர் உட்பட சில பகுதிகளுக்கு ஐ.எஸ். உட்பட பல ஜிகாத் குழு தீவிரவாதிகள் அச்சுறுத்தலை விடுத்து வருகின்றனர். இதே இடத்தில் 2017 ஆம் ஆண்டு நான்கு அமெரிக்க இராணுவ வீரர்கள் மற்றும் 5 நிகர் படையினர் போராளிகளினால் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமசோன் காடுகளை பாதுகாக்கும் முயற்சியில் பழங்குடித் தலைவர்!



அமசோன் காடுகளைப் பாதுகாக்கும் நோக்கில் பிரபலங்களையும் தலைவர்களையும் சந்திக்கும் நோக்கில் பிரேசிலின் பிரபல பழங்குடித் தலைவர் ராவோனி ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். உதட்டுத் தகடு, இறகுகளைக் கொண்ட தலைப்பாகை இப்படி வித்தியாசமான தோற்றத்துக்குப் பெயர் பெற்றவர் ராவோனி. அவரும் அவரது சகாக்கள் இருவரும் ஐரோப்பியத் தலைவர்கள் மற்றும் திருத்தந்தை ஆகியோரைச் சந்தித்து பேசவுள்ளனர். அமசோன் காடுகளை பாதுகாப்பதற்காக நிதி திரட்டவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர். பிரேசில் பழங்குடியினரில் பலர் மரம் வெட்டுபவர்களாகவும் விவசாயிகளாகவும் உள்ள னர். காடுகளைச் சார்ந்தே அவர்களது வாழ்வாதாரம் அமைந்துள்ளது.

சுமார் 800,000 பேர் வசிக்கும் அத்தகைய காடுகள் பல்லாண்டுகளாகப் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக உள்ளன. அவர்களுக்கு வெளிஉலகத் தொடர்பு கிடையாது. பழங்குடியினரும் அத்தகைய வாழ்க்கையைத் தொடரவே விரும்புகின்றனர்.

எனினும், பிரேசில் ஜனாதிபதி "அமசோன் காடுகளில் வாழ்பவர்கள் விலங்குகளைப் போல் அடைந்து கிடப்பது நல்லதல்ல. அவர்களை வெளியில் கொண்டுவரவேண்டும்." என தெரிவித்துள்ளமைக் குறிப்பிடத்தக்கது

அலாஸ்காவில் ஒன்றோடொன்று மோதிய விமானங்கள் - 3 பேர் உயிரிழப்பு

சுற்றுலாப் பயணிகளுடன் சென்றுக் கொண்டிருந்த இரண்டு விமானங்கள் தென் கிழக்கு அலாஸ்காவில் ஒன்றோடொன்று மோதியதில் குறைந்தது நான்கு பேர் உயிரிழந்துள்ளதாகவும், இரண்டு பேர் மயமாகியுள்ளதாகவும் அமெரிக்க கடலோர காவல்படை தெரிவித்துள்ளது. 11 பேருடன் சென்ற ஒரு விமானமும், ஐந்து பேருடன் சென்ற மற்றொரு விமானமும் தென் கிழக்கு அலாஸ்காவின் கெட்சிகன் என்னுமிடத்தில் மோதி விபத்துக்குள்ளானதாக அசோசியேட் பிரஸ் செய்தி முகமை தெரிவித்துள்ளது. 11 பேருடன் சென்றுக் கொண்டிருந்த முதல் விமானத்தில் உயிர் பிழைத்த பத்து பேர் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மற்றொரு விமானத்தில் பயணித்த ஐவரில் மூன்று பேர் உயிரிழந்துள்ளது உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில், உயிரிழந்த நான்காவது நபர் எந்த விமானத்தில் பயணித்தவர் என்று இன்னமும் உறுதிசெய்யப்படவில்லை.

இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா
INUVIL THIRUVOOR ONTRIAM - CANADA

வரவேற்புபசாரமும் ஆன்மீகச்சொற்பொழிவும்



தாயகத்திலிருந்து அழைக்கப்பட்டு கனடாவுக்கு வருகை தந்திருக்கும் பிரபல ஆன்மிகச்சொற்பொழிவாளர் செஞ்சொற்செல்வர் திரு.ஆறு. திருமுருகன் அவர்களை வரவேற்றுக் கனடா வாழ் இணுவில் மக்கள் சார்பில் மேற்படி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விலே கலந்துகொண்டு சிறப்பிக்கு்மாறு கனடா வாழ் இணுவில் மக்கள் அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

சொற்பொழிவுத் தலையங்கம்:
சிவபூமி அறக்கட்டளையும் அதன் பணிகளும்

காலம்: **19-05-2019 (ஞாயிற்றுக்கிழமை)**

இடம்: **சபரிமலை ஐயப்பன் ஆலயம் (கீழ்த்தள மண்டபம்)**
2721 Markham Road, ON, M1X-1L5 (Suncity Plaza)
(At Nashdine Ave), Scarborough.

நேரம்: காலை 11.00 முதல் மதியம் 3.00 மணி வரை

சிவபூமி அறக்கட்டளையின் சமுதாயப் பணிகளுக்கு உங்களாலான நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: **416-829-8920 416-430-0422 647-885-7407**

HAPPENING 2019
MULTICULTURAL FESTIVAL
MAY 29 - JUN 1 / 2019
918 Bathurst Street, Toronto, Ontario M5R 3G5




VISUAL ARTS / COMMUNITY ARTS / POETRY / DANCE / MUSIC
STORYTELLING / ORGANIZATIONS & ARTISTS NETWORKING
more info: www.musearts.ca

SHIV SHAKTI ASTROLOGER & PSYCHIC



GENERATION TO GENERATION ASTROLOGER FROM INDIA

MASTER: RAM JI




Expert in Palm Reading, Face Reading, Patra Reading & Photo Reading

GOOD NEWS TO THE PEOPLE OF CANADA
WORLD RENOWNED PSYCHIC

9 TIMES MORE EXPERIENCED THAN OTHER ASTROLOGERS
HE HAS SUPERNATURAL VISION TO SOLVE PROBLEMS.
EVERY PROBLEM COMES TO AN END WITH MASTER RAM JI:

VISIT OR CONTACT US FOR SOLUTIONS FOR:

* Business Investments
* Work Problems
* Money Problems
* Childless Couples
* Family Arguements
* Loved ones
* Love issues



* Enemy
* Jealousy
* Negativity
* Sexual
* Depression
* Drinking
* Horoscope

SPECIALIST IN BRINGING BACK LOVED ONES
EXPERT IN REMOVING BLACK MAGIC & EVIL SPIRITS
100% GUARANTEE

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் மாஸ்ரர் கலா பைரவ குருஜீ பல நாடுகளுக்கு சென்று இப்பொழுது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி பிறந்த திகதி, நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை, நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களை கூறுவார்.

படிப்பு, தொழில்
திருமணயோகம்
குழந்தைப்பாக்கியம்
வீடு கட்டுதல்
கணவன் மனைவி ஒற்றுமை
வாஸ்த்து சாஸ்த்திரம்
பிரச்சனைகள்
எதிரிகள்

கண்திருஷ்டி
நீதிமன்ற வழக்குகள்
வாகனப் பொருத்தம்
பணப்பிரச்சனை
பிள்ளைகள் குடும்பத்துடன்
ஒற்றுமையாக பொற்றாருடன்
நிலைத்திருத்தல்

100% GUARANTEED RESULTS

நீங்கள் இதுவரை ஜோதிடர்களை பார்த்து இருக்கலாம்
ஆனால் என்னை ஒரு முறை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம்!

416-558-8496

967 Albion Rd Etobicoke ON M9V 1A6, Next to RAZA.com, Opp TD Bank (ALBION & ISLINGTON)

இராசி பலன்

05-17-2019 - 05-23-2019

தெல்லியூர் சிறி நடராஜ சர்மா

மேஷம்

ராகு, செவ்வாய், குரு, சுக்கிரன் அளப்பரிய நற்பலன் வழங்குவர். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். நற்பெயரும், புகழும் தேடி வரும். வாகனத்தின் பயன்பாடு அளவுடன் இருக்கும். பிள்ளைகள் படிப்பு மற்றும் வேலையில் சிறந்து விளங்குவர். நோய் தொந்தரவு குறைந்து உடல் ஆரோக்கியம் மேம்படும். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடக்கும். தொழில் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணியாளர்கள் தங்கள் பணிசார்ந்த தொழில்நுட்பங்களை அறிந்து கொள்வர். பெண்கள் தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் பாராட்டு பெறுவர்.

ரிஷபம்

சுக்கிரன், சந்திரன் ஓரளவு அனுகூலபலன் தருவர். சுற்றுச்சூழல் உணர்ந்து பணிபுரிவீர்கள். உடன் பிறந்தோர் உதவுவீரகள். வீடு வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். பிள்ளைகளின் செயல்பாடு சிறப்பாக அமைந்திட இதமாக வழி நடத்துங்கள். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீரகள். வெளியூர் பயணத்தில் பாதுகாப்பு அவசியம். புதியவர்களின் ஆதரவால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டங்களை பின்பற்றவும். பெண்கள் பிரார்த்தனை நிறைவேற இ்ட்டதெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

மிதுனம்

சுக்கிரன், குரு, சந்திரனால் வியக்கத்தகு நற்பலன் கிடைக்கும். புதிய யுக்தியுடன் பணிகளை துவங்குவீர்கள். சமூக நிகழ்வு இனிய அனுபவம் தரும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும் பிள்ளைகள் பெற்றோரின் வழிகாட்டுதல்களை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வர். குடும்பத்தில் சுபநிகழ்வு நடந்தேறும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். வழக்கு விவகாரத்தில் சுமுக தீர்வு ஏற்படும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும். பணவரவினால் சேமிப்பும் கூடும். பணியாளர்கள் கடமையுணர்வுடன் பணி மாணவர்களின் ஞாபகத்திறன் அதிகரித்து கல்வியில் சிறந்து விளங்குவர்.

கடகம்

சூரியன், புதன், கேது, சனீஸ்வரரால் ஆதாய பலன் கிடைக்கும். திட்டமிட்ட செயல்களை புதிய முயற்சியுடன் நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்கள் அதிக அன்பு பாராட்டுவர். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். அறிமுகமில்லாதவர்க்கு வீடு வாகனத்தில் இடம் தர வேண்டாம். பிள்ளைகள் படிப்பு செயல்திறனில் மேம்பட அதிக முயற்சி தேவைப்படும். பணவரவுக்கேற்ப செலவுகளும் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து செயல்படுவர். வெளியூர் பயணம் எதிர்பார்ப்பை நிறைவேற்றும். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

சிம்மம்

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். பேச்சில் உண்மையும், சத்தியமும் நிறைந்திருக்கும். விலகிய உறவினர்கள் சொந்தம் பாராட்டுவர். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். பிள்ளைகள் பெற்றோர் சொல்லை வேதமென ஏற்று பின்பற்றுவர். நோய் தொந்தரவு குறையும். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடந்தேறும். தொழில் வியாபாரத்தில் போட்டி குறைந்து ஆதாய பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். மாணவர்கள் நன்றாக படித்து நண்பர்க்கும் உதவுவர்.

கன்னி

சுக்கிரன், சந்திரனால் ஓரளவு நற்பலன் கிடைக்கும். செயல்களில் சமயோசிதமாக ஈடுபட வேண்டும். நண்பர்களின் உதவி ஓரளவு கிடைக்கும். குடும்பத்திற்கான பணச்செலவு அதிகரிக்கும். வீடு வாகனத்தில் உரிய பாதுகாப்பு அவசியம். பிள்ளைகளின் செயல்களை கவனித்து வழி நடத்துங்கள். இ்ட்டதெய்வ வழிபாடு சில நன்மைகளைத் தரும். மனைவி குடும்பநலன் சிறக்க நல்ல ஆலோசனை சொல்வார். வீட்டில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் ஏற்படும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அளவுடன் இருக்கும். பணியாளர்கள் கூடுதல் பணிச் சுமை ஏற்படும். பெண்கள் நகை இரவல் கொடுக்க வேண்டாம். மாணவர்கள் புதியவர்களுடன் நிதானித்து பழகவும்.

துலாம்

புதன், கேது, சனீஸ்வரர், சந்திரனால் சுப பலன் ஏற்படும். சுமூகமான நிகழ்வுகள் மனதில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வெளியூர் பயணம் அதிகரிக்கும். பிள்ளைகளிடம் நல்ல சிந்தனைகள் வெளிப்படும் படிப்பிலும் முன்னேறுவர். சத்தான உணவு உண்டு மகிழ்வீரகள். ஆடம்பர செலவு செய்வதை தவிர்க்கவும். மனைவியின் உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரம் செழித்து லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த நிதியுதவி கிடைக்கும். மாணவர்கள் பெற்றோரின் ஆலோசனையை மதித்து செயல்படுவர்

விருச்சிகம்

குரு, சந்திரன் மட்டுமே ஓரளவு நற்பலன் தருவர். செயல்களில் குளறுபடி வராமல் கவனம் கொள்ளவும். குடும்பத்தில் ஒற்றுமையை பேணிக்காத்திடுவீர. வீடு, வாகனத்தில் அதிக பாதுகாப்பு வேண்டும். பிள்ளைகள் விரும்பிய பொருள் தாராள பணச்செலவில் வாங்கித்தருவீர்கள். விருந்து விழாவில் கலந்து கொள்வதில் ஆர்வம் குறையலாம். மனைவியிடம் உறவினர் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்யவும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டத்தை மதித்து செயல்படவும். மாணவர்கள் முயற்சியுடன் படித்தால் முன்னேறலாம்.

தனுசு

சுக்கிரன், சூரியன், புதன், சந்திரனால் ர்ராஜயோக பலன் கிடைக்கும். மனதில் தயக்கம் விலகி தைரியம் ஏற்படும். பணிகளை அக்கறையுடன் நிறைவேற்றுவீரகள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையால் மனக்குழப்பம் நீங்கி தெளிவு பெறுவர். அவமதித்தவர் வியந்து பாராட்டுவர். பூர்வ சொத்தில் பணவரவு ஏற்படும். பகைவரால் இருந்த தொந்தரவுகளை மாற்று உபாயத்தால் சரி செய்வீரகள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி செய்வீரகள். பணியாளர்கள் பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

மகரம்

சுக்கிரன், ராகு, செவ்வாய், சந்திரன் சுப பலன் வழங்குவர். மனதில் உத்வேகமும், செயல்களில் வசீகரமும் ஏற்படும். உறவினர்கள் நல்ல ஆலோசனை சொல்வர். குடும்பத்தில் சுபநிகழ்வு உண்டாகும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவையை நிறைவேற்றுவீர்கள் ஓரளவு பணம் சேமிக்கவும் செய்வீர்கள். எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். தொழில், வியாபாரம் புதிய வாடிக்கையாளர்களின் ஆதரவில் வளரும். பணியாளர்களுக்கு நற்பெயரும், சலுகையும் கிடைக்கும். பெண்கள் தாராள பணவரவு கிடைத்து புத்தாடை நகை வாங்குவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து நண்பருக்கும் உதவுவர்.

கும்பம்

பெரும்பான்மை கிரகங்களால் தாராள நற்பலன் கிடைக்கும். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நண்பரின் உதவி எதிர் பார்த்த வகையில் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை சீராகும். திட்டமிட்டபடி புதிய வீடு, வாகனம் வாங்கலாம். பிள்ளைகள் கல்வி மற்றும் செயலாற்றலில் முன்னேற்றம் காண்பர். எதிரி சொந்த சிரமங்களால் இடம் மாறுவர். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி புதிய சாதனையை ஏற்படுத்தும். பணியாளர்கள் சுறுசுறுப்பாக பணிபுரிவர் சலுகையும் கிடைக்கும். பெண்கள் பிரார்த்தனை நிறைவேறி தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் புதிய முயற்சிகளில் இறங்குவர்.

மீனம்

சூரியன், சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். மனதில் இரக்க சிந்தனை அதிகரிக்கும். உடன்பிறந்தோர் உதவுவீரகள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பூர்வ சொத்தில் பராமரிப்பு செலவு கூடும். பிள்ளைகளின் குழப்பமான எண்ணங்களை சரிசெய்வீர்கள். சத்தான உணவு உண்டு மகிழ்வீர்கள். மனைவியின் அன்பும், பாசமும் மனதில் நம்பிக்கையை தரும். தொழில் வியாபாரத்தில் கடின உழைப்பு பணவரவை சீராக்கும். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து செயல்படுவர். பெண்கள் பணச்செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் வேண்டும்.

இலங்கையின்...

47 ஆம் பக்கத் தொடர்ச்சி

இதனால் தமிழர்கள் முதல்தடவையாக இன அடையாளத்தை முன்நிறுத்தி அரசியல் நடத்த வேண்டி நிலை ஏற்பட்டது.

இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பை உருவாக்கிய அருணாசலம் மிகவும் மனமுடைந்தார். பின்னர் தமிழர்களை ஒருங்கிணைத்து தமிழர் மகாஜன சபை என்ற அமைப்பை உருவாக்கினார். இதுவே அரசியல் தளத்தில் தமிழர் தமக்கென உருவாக்கிக் கொண்ட முதல் அமைப்பாகும். இந்த அமைப்பின் தோற்றத்தோடு, இலங்கையூர் என்ற ஒருமையுணர்வும் அடையாளமும் அழிய ஆரம்பித்தது.

இலங்கையர் என்ற அடையாளத்துடனும் வேறுபாடற்ற குடிமக்களாகவுமே தமிழர்கள் வாழ விரும்பினர். ஆனால், சிங்களவரிடையே தலையெடுக்கத் தொடங்கிய பேரினவாத உணர்வு அதை அழித்தது. தமிழரைத் தமிழராகவே வாழ வற்புறுத்தியது.

1948இல் இலங்கை சுதந்திரம் பெற்ற பின், உடனடியாகக் குடியுரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்தது ஐக்கிய தேசியக் கட்சி. இதனால் இலட்சக்கணக்காக மலைநாட்டுத் தமிழரின் குடியுரிமையைப் பறித்தது. இது இலங்கையில் தமிழரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட இன விரோதச் செயலே.

பௌத்த மதவாதச் சிந்தனையில் ஊறிப் போயிருந்த சிங்களவர், இலங்கை சுதந்தரம் பெற்ற ஆண்டே, பௌத்தத்தை மட்டும் அரச சமயமாக்கினர்.

பின்னர், 1956 இல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதற்கு எதிராக தமிழர்கள் மாநாடு நடத்தியபோது, தமிழர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். ஏறக்குறைய 150 தமிழர்கள் இதில் இறந்தனர். தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட முதல் இனப்படுகொலை நிகழ்வு இதுவாகும்.

1957இல் உருவான பண்டா செல்வா ஒப்பந்தம் தமிழருக்குச் சில சலுகைகளைத் தர முயன்றது. இதைத் எதிர்த்து பேரினவாதிகள் போராட்டம் நடத்தினர். பண்டாரநாயக்காவும் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதைத் தொடர்ந்து 1958இல் பேரினவாதிகளார் மற்றுமோர் இனவழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆயிரக்கணக்கான தமிழர் கொல்லப்பட்டதுடன், நிலங்களும் சொத்துகளும் பறிக்கப்பட்டு, தமிழர் வெளியேற்றப்பட்டனர்.

இதைத்தொடர்ந்து, 1977இலும் 1983இலும் நடைபெற்ற பெருமளவிலான இனவழிப்பு நடவடிக்கைகளை உலகறியும்.

இவற்றை விட, தீவிரவாதத்தை அடக்குகின்றோம் என்று கூறியவாறு, எழுபதுகளில் இருந்து இன்றுவரை இலங்கை அரசு நடத்திய இனப்படுகொலை நிகழ்வுகள் ஏராளம். அவை இணையத்தளம் எங்கும் பட்டியலிடப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும் இனவாதக் கொடுந்தீயின் உச்சக் கொடூரமே முள்ளிவாய்க்கால் பேரவலம்.

இலங்கையின் பேரினவாதம் எவ்வகையிலும் தணியப் போவதில்லை. அதன் மற்றுமொரு வடிவமே இஸ்லாமியர் மீது முன்னெடுக்கப்படும் வன்முறைகள்.

சரியான வடிவத்தில் அதை எதிர்கொண்டால் மட்டுமே எம் இனத்தின் வேர்களை நாம் அந்த நிலத்தில் பேண முடியும்.

மறக்க முடியுமா?...

33 ஆம் பக்கத் தொடர்ச்சி

அதன் பின் மருத்துவமனையினை முள்ளிவாய்க்கால் அ.த.க பாடசாலைக்கு மாற்றப்பட்டது அந்த பாடசாலையில் சிறிய ஒரு கட்டிடம் மட்டுமே காயமடைந்த மக்கள் ஒரு கால் எடுத்து வைக்க முடியாத அளவிற்கு அந்தப் பகுதி முழுவதும் நிறைந்துகிடந்தார்கள்.

காயமடைந்த மக்களுடன் அகற்ற முடியாத அளவிற்கு இறந்தவர்களின் உடல்களும் கிடந்தன.

நிமிடத்திற்கு நிமிடம் பெரும் தொகை மக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் கொண்டுவரப்பட்டார்கள். மருத்துவமனைகளை இனங்காணக் கூடியவாறு செஞ்சிலுவை குறியீடு இடப்பட்டு இருந்தும் தாக்குதலை மேற்கொண்டு கொன்று குவித்தது அரசு

அரச சார்பற்ற நிறுவனங்களையும் ICRC போன்றவற்றையும் இலங்கை அரசு வன்னிப்பகுதியை விட்டு வெளியேற்றியது. காயமடைந்த நோயாளர்களை யுத்தப் பிரதேசத்தைவிட்டு திருகோணமலைக்கு எடுத்து செல்வதற்கான கப்பல் ஒழுங்கை செய்வதாகக் கூறியும் அதனை செய்யவில்லை.

இரண்டு தடவைகள் மட்டும் கப்பலை அனுப்பிவிட்டு கடற்கரைக்கு மக்களை ஏற்றிச் செல்லும் வாகனம் மீதும் கடற்கரை முழுவதிலும் செல் தாக்குதலை மேற்கொண்டு மக்களை கொன்று குவித்தது இலங்கை அரசும் இராணுவமும். மே 16 இற்குப் பின்னர் மருத்துவமனை எல்லாம் முற்றாக செயலிழந்து போக வீதி வீதியாய் காயமடைந்தவர்கள் கிடந்தார்கள்.

இப்படி திட்டமிட்டு நடத்தப்பட்ட இனப்படுகொலையின் சாட்சிகள் இருந்தும் தமிழர் தரப்பு இன்னும் நான் பெரிது நீ பெரிது என்று போட்டிபோட்டுக் கொள்வதில் பத்தாண்டுகள் முடிந்து போய்விட்டது.

இனியாவது நடந்து முடிந்த இனஅழிப்புக்கு நீதியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பொறிமுறைகளை மேற்கொள்ளுமா?

நமக்கான நீதியை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவையுணர்ந்து தமிழர்கள் ஒற்றுமையுடன் செயற்படுவார்களா? என்ற ஆதங்கமே பாதிக்கப்பட்ட மக்களிடம் இன்றும் இருக்கின்ற கேள்வியாகவுள்ளது.

18 தமிழின அழிப்பு நினைவு நாள்
சிறப்புக் கட்டுரை

இறுதி தருணத்தில்

இன்றைக்கும் நெஞ்சை அழுத்தும் பாரத்தை தரும் பல நிகழ்வுகள் நிறைந்து கிடக்கிறது. அதில் சுபாசினி என்ற கர்ப்பிணிப் பெண்ணை மறக்க முடியாது. அந்தப் பெண் துடிப்புள்ளவள் எதிர்காலத்தை நிதானமாக கணிக்கக் கூடியவள் அதனால் அடிக்கடி

"நான் செத்துடுவன் .... நான் செத்துடுவன் " என பயந்து கொண்டிருந்தாள்.

அவள் கனரக ஆயுதப் பயிற்சிகளைப் பெற்ற ஒரு போராளியாக இருந்தாள். அவளின் சகோதரனான (இரட்டைக் குழந்தைகள்) லெப்டினன் தாவீதன் வீரச்சாவடைந்த நிலையில் அவள் இயக்கத்தில் இருந்து விலத்தி வீட்டுக்கு வந்திருந்தாள். போராட்ட வாழ்க்கையில் இருந்து வீட்டுக்கு வந்து சாதாரண வாழ்க்கையைத் தொடர்ந்தாலும் திடமானவளாகவே காணப்படுவாள்.

தாய் தந்தையின் ஏற்பாட்டில் திருமணம் செய்து மகிழினி என்ற பெண் குழந்தையை பெற்றெடுத்த அவள் வங்கி ஒன்றில் பணியாற்றி வந்தாள். அவளின் வாழ்க்கை மிகச் சிறப்பாகவே போய்க் கொண்டிருந்தது. இவ்வாறான வாழ்க்கைப் பயணத்தில் முள்ளிவாய்க்காலில் நாம் முடக்கப்பட்டிருந்த போது மீண்டும் கருவுற்று ஆறு மாத சிசுவை வயிற்றில் சுமந்திருந்தாள்.



அவள் இறுதி நேர சண்டைகளின்போது தனது திடத்தை இழந்திருந்தாள். தான் சாவடைந்து விடுவேன் என்ற பயம் அவளை ஆட்கொண்டிருந்தது. போராளியாக இருந்ததால் தாக்குதல்களுக்கு எவ்வாறு பாதுகாப்புத் தேட வேண்டும் என்று தெரிந்திருந்தாலும் அவளால் ஆறுமாத கருவைச் சுமக்கும் வயிற்றோடு பாதுகாப்பைத் தேடுவது சிக்கலாக இருந்தது.

அவளால் பதுங்குகுழிகளுக்குள் செல்ல முடியாது. . உடனே நிலத்தில் படுக்க கூட முடியவில்லை. கர்ப்பகாலத்தில் அடிக்கடி வெளியேற்ற வேண்டி இருந்த சிறுநீர் கழிப்பதற்காகவும் அவளால் வெளியில் போக முடியவில்லை. ஐ வடிவ திறந்த பதுங்கு குழிக்குள் அவளால் நீண்ட நேரம் இருக்க முடியவில்லை. அவ்வாறு பல இடர்களைச் சுமந்து வாழ்ந்தாள் சுபாசினி.

தான் உயிர் தப்பவும் தன் பிள்ளையைக் காப்பாற்றவும் தனது வருங்காலத்தை பாதுகாக்கவும் முயன்றாள். அதற்காக அரச மருத்துவராகவும் பிராந்திய வைத்திய சுகாதார அதிகாரியாகவும் இருந்து இறுதிவரை தன் பணியை செய்த மருத்துவக் கலாநிதி ஒருவரை சந்தித்து பலமுறை வேண்டுகிறாள். மீண்டும் மீண்டும் சந்தித்து நச்சரித்தாள்.

"டொக்டர் என்னை கப்பல்ல அனுப்புங்கோ பிளீஸ் என்னால இங்க இருக்க முடியவில்லை. நான் செத்திடுவன் டொக்டர்... என் பிள்ளையையும் என்னையும் மட்டுமாவது அனுப்புங்கோ..." என தன்நிலையைக் கூறி பலமுறை வேண்டுகிறாள்.

ஆனால் அன்றைய காலத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருந்த பயங்கர காயங்களுடன் அதி தீவிர சிகிச்சைகளுக்காக உடனடியாக அனுப்ப வேண்டிய காயப்பட்ட மக்களின் தொகையும் தன்மையும் அந்த மருத்துவ அதிகாரியால் இவளுக்கான அனுமதியை கொடுக்க இடமளிக்க வில்லை.

"இல்லையம்மா நீங்க இப்பத்தான் ஆறு மாதம் எங்கள இப்ப நிறை மாத கர்ப்பிணிகளைத் தான் கப்பல்ல அனுப்ப சொல்லி ICRC சொல்லுதம்மா அதோட இங்க ஆயிரக் கணக்காக சனம் காயத்தோட இருக்கு இதுக்க உங்களை அனுப்புறது கஸ்டம் அம்மா. நீங்கள் இன்னும் இரண்டு மாதம் கழித்து வாங்கோ நாங்கள் அனுப்புகிறோம்...."

இதே பதிலை பலமுறை அவளுக்கு சொல்லி திருப்பி அனுப்புகிறார் அந்த பிராந்திய மருத்துவ அதிகாரி. ஏனெனில் அப்போதய நிலையில் சிங்கள அரசு அனுப்பும் கப்பலில் வெறும் 400 பேரளவில் தான் திருகோணமலைக்கு அனுப்பக் கூடியதாக இருக்கும். அதுவும் தினமும் வரவேண்டிய கப்பல் இரண்டு நாளுக்கொரு முறை வந்தது.

கப்பல் வந்தாலும் மக்களை அதில் அனுப்ப சிங்களப் படைகள் தடையாக இருந்தன. கப்பல் வரும் போது கப்பல் தரித்து நின்ற இடத்தை நோக்கி சிங்களத்தின் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன.

தமிழீழ மருத்துவர்களும் அரச மருத்துவர்களும் இணைந்து பல ஆயிரம் மக்களின் உயிர்களைக் காத்திருந்தாலும் மருத்துவ வளங்கள் அற்று இருந்த நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக கப்பலில் திருகோணமலைக்கு அனுப்பப்பட வேண்டிய நிலையிலேயே பல ஆயிரம் மக்கள் இருந்தார்கள். இந்த நிலையில் சுபாசினியை கப்பலில் அனுப்புவதில் சிரமம் வந்ததால் அனுமதி மறுக்கப்பட்டது.

அவளின் குடும்பம் இருந்த மாத்தளன் பகுதியில் தினமும் சாவின் விழிம்பில் இருந்தாள். அன்றும் பயங்கர செல்லடி வரைஞர் மடத்தை வளைத்து பொக்கனைப் பக்கமாக இராணுவம் எம் நிலத்தை அபகரித்திருந்தது. அதனால் தலை நிமிர்த்த முடியாத எறிகணை வீச்சு நடந்து கொண்டிருந்தது. அவள் பதுங்குகுழிக்குள் குடும்பத்தோடு அமர்ந்திருந்தாள். நீண்ட நேரமாக அதற்குள் இருந்ததால் பல சிரமங்களை அவள் சுமந்தாள்.

பசி வயிற்றைக் குமட்டியது. சிறுநீர் கழிக்க வேண்டி இருந்தது. அவளால் சிறுநீரை அடக்க முடியவில்லை. ஒரு கர்ப்பிணிப் பெண்ணால் சிறுநீரை அடக்குவது என்பது கடினமானது. அதனால் அவள் வரப்போகும் ஆபத்தை பொருட்படுத்தாது வெளியில் செல்ல முனைகிறாள். துணைவன் மறிக்க மறிக்க பதுங்குகுழியை விட்டு வெளியேறுகிறாள்.

கூடச் செல்ல முனைந்த கணவனிடம் "மகளை கவனமாக பாருங்கோ உடனே வாறன்" என்று சொல்லிப் போகிறாள் அதனால் அவள் வெளியேறியதைப் பார்த்த அவளின் தாய் அவளுடன் கூட செல்கிறாள். தாயும் தமக்கையும் தனியே போவதைப் பார்த்த கடைசித் தம்பியும் அவர்களுடன் கூட செல்கிறான்.

> அவள் இறுதி நேர சண்டைகளின் போது தனது திடத்தை இழந்திருந்தாள். தான் சாவடைந்து விடுவேன் என்ற பயம் அவளை ஆட்கொண்டிருந்தது. போராளியாக இருந்ததால் தாக்குதல்களுக்கு எவ்வாறு பாதுகாப்புத் தேட வேண்டும் என்று தெரிந்திருந்தாலும் அவளால் ஆறுமாத கருவைச் சுமக்கும் வயிற்றோடு பாதுகாப்பைத் தேடுவது சிக்கலாக இருந்தது.

அப்போது அடிக்கப்பட்ட ஆட்லறி எறிகணை அவர்களருகில் வீழ்ந்து வெடிக்கிறது. சுபாசினி படுகாயமடைகிறாள். தாய்க்கு ஒரு கை எலும்பின் ஒரு பகுதி காணாமல் போகிறது. சிறு தசைத் துண்டிலும் தோலிலும் அவரின் கை தொங்கிய படி கிடக்கிறது. அதுவும் அந்த தோல் இரண்டு மூன்று முறை முறுகி கிடந்தது. தம்பி தலையில் படுகாயமடைந்து அவனும் கீழே விழுகிறான்.

இது நடந்த அந்த நொடியில் தொடர்ந்து எறிகணைகள் அருகில் வெடிக்கின்றன. விழ்ந்தவர்களை யாரும் தூக்க முடியவில்லை. தூக்க முடியாத் அளவுக்குப் பலமான தாக்குதல் நடக்கிறது.

வெளியில் சென்றவர்கள் இத்தாக்குதலுக்கு கூட திரும்பி வராதது கண்டு சுபாவினுடைய கணவன் தனது உயிரையும் பொருட்படுத்தாது வெளியில் வந்து பார்க்கிறார். அங்கே இரத்தச் சகதியில் மூவரும் கிடந்தனர். உடனடியாக அவர்களை தூக்குகிறார். அதற்குள் மற்ற உறவுகளும் வர அந்த இடத்தில் இருந்து வெளியேற வேண்டிய நிலை. அதனால் அவர்கள் கடற்கரையால் வெளியேறிச் செல்கின்றனர்.

ஏனெனில் பொக்கணைப் பக்கத்தில் இருந்து ஊடறுத்த இராணுவம் கடற்கரையைத் தவிர்ந்த பிரதேசத்தைக் கைப்பற்றி இருந்தது. அதனால் கடற்கரை வழியாக வலைஞர்மடத்துக்கு வருகிறார்கள்.

அங்கே இருந்த மருத்துவமனையில் அவர்களை மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு சுபாசினி இறந்து விட்டதை உறுதிப் படுத்துகிறார்கள். ஏனைய இருவரையும் சத்திரசிகிச்சைக்காக உள்ளே எடுக்கிறார்கள். ஆனாலும் அவர்களால் இருவரையும் தொடர்ந்து பராமரிக்க முடியவில்லை இருவருக்கும் உடனடியாக இரத்தம் ஏற்ற வேண்டி இருந்தது. இரத்தத்தை யாரிடமும் எடுக்கக் கூடிய நிலை இல்லை.

அவ்வாறு இரத்தம் கொடுப்பதற்கு யாராவது தயாராக இருந்தாலும் எடுப்பதற்கு குருதிப்பை இல்லை (Blood bag) அதனால் அவசர நோயாளர்களுடன் திருகோணமலைக்கு ICRC கப்பலினூடாக அனுப்புகிறார்கள்.

அதே நேரம் கப்பலுக்கு ஏறுவதற்காக படகில் சுபாசினியின் தாயும் தம்பியும் தங்கையும் செல்கிறார்கள். தன் மகளை இழந்து விட்ட சோகம் ஒருபுறம் காயத்தின் வலி மறுபுறம் என தாய் ஏறுகிறார். அப்போது தண்ணீர் தருமாறு வேண்டி அழுகிறார். நான் தண்ணீர் எடுக்கச் செல்கிறேன்.

கவிமகன்

ஆனாலும் அதற்குள் படகு கப்பலை நோக்கிச் செல்லத் தொடங்குகிறது. தண்ணீருக்காக ஏங்கிக் கொண்டிருந்த சுபாசினியின் தாய் இறுதி வரை தண்ணீர் அருந்தாமலே படகிற்குள் உயிர்விட்ட செய்தி எனக்கு பின்னால் தான் தெரிந்தது. அதுவும் படகிற்குள் இருந்து வெளியில் கையை நீட்டி கடல் தண்ணீரைக் கையில் அள்ளி தாய்க்குப் பருக்க முயன்ற மகளின் கண்முன்னே தாய் தண்ணீர் பருகாமல் உயிர் விட்டிருந்தார்.

அதே நேரம் குடும்பத்தில் இருவரை இழந்து இருந்த சுபாசினியின் கணவனும் மகளும் அவளின் உடலைக் கூட அடக்கம் செய்யாது சோர்ந்து போய் கிடந்தனர். மருத்துவமனையின் ஓரத்தில் தம்மை மறந்து தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது திடீர் என்று தூக்கத்தில் இருந்து எழுந்த மகிளினி பசியில் அழுது துடித்துக் கொண்டிருந்தாள்.

மகிழினியைத் தூக்கிப் பசியாற்ற யாரும் இல்லை. அவளுக்கு ஒரு கப் டீ கொடுக்க யாரும் இல்லை அங்கே இருந்தவர்கள் அனைவரும் காயங்களின் வலியால் சோர்ந்து போய்க் கிடந்தனர். அப்போது அங்கே காயமடைந்து சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் அவர்கள் மகிளினியைத் தூக்கிக் கொள்கிறார்.

அவருக்கு ஒற்றைக்கை மட்டுமே இயங்கு நிலையில் இருந்தது. மற்றக்கை காயத்தால் பாதிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அதைப் பொருட்படுத்தாது மகிளினியை ஆற்றுகைப்படுத்துகிறார்.

அன்பாக அவளை ஆதரித்து அருகில் யாரிடமோ சுடுநீர் வாங்கி ஒற்றைக் கையால் தேநீர் தயாரித்து அவளின் பசி போக்குகிறார். உண்மையில் அந்தக் காட்சி வார்த்தைகளில் வர்ணிக்க முடியாதவை.

ஒரு தடவை அந்த தேநீரை சுவைத்த மகிளினி முகத்தில் பிரகாசம். தாயை இழந்து பேத்தியாரை இழந்து உதவியென இருந்த தந்தை கூட நடைப்பிணமாக இருந்த போது அவளுக்கு ஒரு துணை கிடைத்ததை அவள் மகிழ்வாக ஏற்றுக் கொண்ட தருணத்தில் இன்று முக்கிய உறுப்பினர் பாலகுமாரன் அவர்களையும் எங்கே எனத் தெரியாத நிலையை சிங்கள தேசம் எமக்கு உருவாக்கி விட்டதன் கொடுமை நெஞ்சைப் பற்றிக் கொள்கிறது.


INJURED IN AN ACCIDENT?
WRONGFULLY DISMISSED?
SUING OR BEING SUED?
NO WIN - NO FEE
FREE CONSULTATION
ONE CALL WILL MAKE A DIFFERENCE
JEREMY DIAMOND
LAWYER
RAPHAEL SELVAKUMAR
PARALEGAL
DARRYL SINGER
LAWYER
நீதிமன்றங்களில் வாதாடும் வல்லமையும் பல வருடங்கள் அனுபவமும் வாய்ந்த சட்ட அறிஞர்கள்
உங்களுக்கான அதிகூடிய இழப்பீடுகளைப் பெற்றுத்தர முழுமூச்சுடன் வாதாடுவார்கள்.
MOTOR VEHICLE ACCIDENT
EMPLOYMENT LAW
HUMAN RIGHTS
SLIP & FALLS CLAIMS
CIVIL LITIGATION
CRIMINAL LAW
REAL ESTATE
SMALL CLAIMS COURT
PROFESSIONAL NEGLIGENCE
LANDLORD & TENANT MATTERS
வாகன விபத்து இழப்பீடுகள்
வேலை சம்பந்தப்பட்ட வழக்குகள்
மனித உரிமை மீறல்
ஸ்மோல் கிளெயிம் வழக்குகள்
வீட்டு உரிமையாளர்–வாடகைச் சட்டம்
வழுக்கி விழுதல் / காயமடைதல்
குடியியல் வழக்காடல்
குற்றவியல் சட்டம்
ரியல் எஸ்டேட்
நிபுணத்துவ விதிமுறை உதாசீனம்
Free consults and contingency fee arrangements apply to all personal injury cases only and to select wrongful dismissal cases, but do not apply to other types of commercial and civil litigation.
விபத்தில் காயப்பட்டுள்ளீர்களா அல்லது தவறான முறையில் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளீர்களா?
எந்த ஒப்பந்தங்களிலும் கையெழுத்து இடாது இலவச ஆலோசனை பெற எங்களை உடன் அழையுங்கள்.
உங்களுக்குப் பணம் கிடைக்கும் வரை எங்களுக்குப் பணம் செலுத்த வேண்டியதில்லை.
REASONS TO CHOOSE DIAMOND & DIAMOND
Diamond & Diamond Lawyers are committed to each client and their individualized legal needs
We are committed to providing the highest standards of legal advice along with quality customer service
We are dedicated to cost effective legal solutions
Our legal services are available across Canada
We are a multidisciplinary legal team
We provide quality service in a timely fashion
We work diligently to ensure that we deliver results that are in our clients' best interests
We speak multiple languages
DIAMOND & DIAMOND™ LLP
LAWYERS
THE PEOPLES LAW FIRM
HOSPITALS OR HOME VISITS
வீடு அல்லது மருத்துவமனைக்கு வருகை தருதல்
Call today! 1-800-567-HURT™

நான்காம் ஆண்டு நினைவு நாள்



அன்னை மடியில்
22-01-1938

ஆண்டவன் அரவணைப்பில்
04-06-2015

அமரர் திரு. குருநாதி பூரணச்சந்திரன்

(முன்னாள் மருந்தாளர்)

யாழ் உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் திரு. குருநாதி பூரணச்சந்திரன் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு நாள்...

ஆண்டுகள் நான்கு கடந்தால் என்ன
காற்றில் கரைந்து போகுமா ஐயா
உங்கள் பாசமுள்ள அரவணைப்பு.
சுவாசத்தில் கலந்திட்ட உங்கள் நினைவுகளை
எண்ணி கடந்து விட்டோம் ஆண்டுகள் பல.
வானத்தில் மிதக்கின்ற மேகமாய்
எப்பொழுதும் மனதுக்குள் நீங்காமல்
நிலைத்து நிற்கும் உங்கள் நினைவுகள்.

கடந்தது ஐயா காலங்கள் - வழியின்றி
இன்னும் கடக்கின்றோம் - நாட்களை
எமைக்காண என்றோ ஒருநாள் - வருவீர்கள்
என்ற ஆவலுடன்
காலம் எத்தனை கடந்தாலும்
காத்திருக்கும்
உங்கள் பாசமுள்ள
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தொடர்புகளுக்கு

குரு (மகன்): 416-705-0634

ரங்கன் (மகன்): 647-718-8227


SP IMPORTERS
GROCERY/VEGITABLE/ FRESH MEAT&FISH/ VIDEO/ FURNITURE/ POOJA EMPORIUM
2863 LAWRENCE AVENUE EAST @ BRIMLEY
T.P 416-261-3881
இவ்வார மலிவு விற்பனையில்....
This week Sale
4.99eh Reg 6.99 பஸ்மதி அரிசி
5.99eh Reg 6.99 சப்பாத்தி ஆட்டா
6.99eh Reg7.99
6.99eh Reg 8.99
10.99eh Reg 13.99 ஆட்டா மா
6.99eh Reg 7.99
3.99eh Reg 6.99 மைசூர் பருப்பு
1.00eh Reg 1.49 லெமன்பவ் பிஸ்கட்
5.99eh Reg 6.99 பொன்னி அரிசி
8.99eh Reg 11.99 பஸ்மதி அரிசி
6.99eh Reg 7.99 சம்பா அரிசி
6.99eh Reg 8.99 சூரியகாந்தி எண்ணெய்
3.99eh Reg 4.99eh Ginger Garlic Paste
1.00eh Reg 1.29 Soya
2/5.00 COCONUT MILK Reg 2.99eh
5.49eh Reg 6.99 நன்னாரி சிரப்
5.99 Reg 6.99eh பஸ்மதி அரிசி
3.99eh Reg 4.99 தேயிலை 144
6.99eh Reg 8.99 மிளகாய்த்தூள்
1.79eh Reg 2.49 நூடில்ஸ்
2/3.00 Reg 1.99 பலாப்பழ ரின்
2.99+Tx Reg 3.99tx Hair dye
3/3.00 Reg 1.49 புளி
1.99eh Reg2.49 சீனி
3.99eh Reg4.99 தேங்காய்ப்பால்பவுடர்
7.99eh Reg 10.99eh Brown Sugar
0.89eh Reg1.29 கடலை ரின்
1.99eh Reg 2.49 Yogurt
6.99eh Reg 8.49 with 40.00purchse Red Rice Flour
0.89eh ஜோய் அப்பளம்
1.49Lb Reg 1.99lb பச்சை குடைமிளகாய்
1.49Lb Reg 1.79lb இஞ்சி
0.89Lb Reg 1.29lb தக்காளிப்பழம்
3/2.00 .99eh கியுக்கம்பர்
0.99Lb Reg 1.29lb உருளைக்கிழங்கு
2/4.99 2.99eh மாதுளம்பழம்
.99Lb Reg 1.49lb அப்பிள்
0.79Lb Reg 1.29lb தோடம்பழம்
0.69Lb Reg .79lb பீற்றூட்
1.29lb Reg 2.29lb Sweet Banana
0.89Lb Reg 1.29 உள்ளி
1.99Lb Reg 3.49lb இராசவள்ளிக்கிழங்கு
SP Garden Center
மரக்கறி கன்றுகள்,இதமான அழகான பூமரங்கள் மற்றும் பயன்தரு மரங்கள் என்பவற்றை பெற்றுக் கொள்ளலாம்.
Open 8.30AM- 9.30PM

MORTGAGE SOLUTIONS

SAVE UPTO 75% REFINANCE

MONTHLY SAVING

$ 2,409

		Before	After
Mortgage Payment	$320,000 @ 2.90%	$1,498.02	-
Auto Loan	$21,000 @ 7.50%	$764.25	$0.00
Line of Credit - 1	$16,000 @ 6.50%	$566.67	$0.00
Line of Credit -2	$12,500 @ 7.00%	$447.92	$0.00
Credit Card -1	$ 8,800 @12.00%	$352.00	$0.00
Credt Card - 2	$ 5,200 @ 19.00%	$238.34	$0.00
Store Card	$ 3,000 @ 24.00%	$150.00	$0.00
New Mortgage	$386,500 @ 2.9%		$1,605.00
Total Debt		$ 386,500.00	$ 386,500.00
Total Payment		$4,014.20	$1,524.55



KIRUBA THANABALASINGHAM
Mortgage Agent Lic# M12002440
atkiruba@gmail.com
www.kiruba.ca
Kapital Care Mortgage Inc. Lic#12623

Prime + 1% Lower Rate

$50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.894.9122

$ 375 Mo.

MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5


MORTGAGES, REFINANCING & LOANS
HOME OWNERS GET APPROVED
வாடிக்கையாளர்கள் அடமான நிதியுதவி பெற, அல்லது தங்கள் நிதித்தேவைகளை பூர்த்திசெய்ய வங்கிகளில் போராடி வருகின்றார்கள். அவர்களுக்கு உதவிசெய்வதே எங்கள் முதன்மையான நோக்கம்.
IN NEED OF EXTRA CASH...?
WE CAN HELP YOU TO FIND THE SOLUTION
Get APPROVED on equity, not credit
1st & 2nd mortgages - Residential/ Commercial
Refinance - Residential/ Commercial Mortgages
Debt Consolidation,
Heloc
Special Offer
UNSECURED BUSINESS LOAN UP TO 100K
UNSECURED PERSONAL LINE OF CREDIT/LOANS
CREDIT NOT REQUIRED
Short term Loan (Secured) Up to $100,000
Bad credit
Bankruptcy,
Consumer proposal
NO PROBLEM
Private Mortgages up to 90% ltv.
We will get you the best rate (we work for YOU not the BANK)
NATWEST
CAPITAL
TIMES CHANGE. VALUES DON'T
Powered by CENTUM
*Some conditions may apply
BERNADINE PONNIAH
CEO / MORTGAGE PLANNER
Tel: 416-550-1364


Rafih
AUTO GROUP
MIDTOWN Honda
3400 Dufferin Street Toronto, ON M6A 2V1
Across from Yorkdale Mall
புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
Over 100 USED Vehicles
HONDA, TOYOTA,
LEXUS, ACURA,
BMW, AUDI
BRAND NEW & USED VEHICLES
LEASE TO OWN
$74.36
weekly - Incl. Tax & Int.
2019 Civic
2019
$0 down @ 0.99%
FOR TONY SIVA'S CLIENTS!!!
FREE! FREE!!
DASH CAM
with every purchase of New or Used Vehicle
NO CREDIT BAD CREDIT
NO PROBLEM!
Anthony Siva
Sales & Leasing Executive
647-637-0763
tonymidtown@hotmail.com
Visit my website
www.midtownhonda.com
Tony Siva
Sales & Leasing Executive
647.269.0749

முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 19-09-1947

ஆண்டவன் அடியில்: 05-06-2018

திதி: 25-05-2019

அமரர். திரு. அம்பிகைபாகர் வேதவனம்

(ஓய்வு பெற்ற மாலுமி - வல்வெட்டித்துறை)

அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும்
வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வமே ஐயா!!!
நீங்கள் இமைப்பொழுதில் எங்களைவிட்டுச்
செல்வீர்களென்று கணப்பொழுதும் நாம் எண்ணவில்லை.
எங்கள் கலங்கரை விளக்கே ஐயா!!!
நீங்கள் இல்லாத உலகம் என்றும் இருள் மயமானது.
உங்களின் மலர்ந்த முகமும், புன்சிரிப்பும்
எங்கே காண்போம் ஐயா!!!
ஒவ்வொரு நொ யிலும் நீங்கள் விட்டுச் சென்ற
நினைவுகளை நினைத்து எங்கள் இதயம் து க்கின்றது.
ஓராண்டு கடந்து சென்றாலும்
உங்களின் பிரிவைத் தாங்க மு யவில்லை ஐயா!!!
எப்பொழுதும் எங்கள் அருகில் இருப்பதாக
நினைத்து வாழ்ந்து கொண் ருக்கின்றோம் ஐயா!!!
எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!

அமரர் திரு. அம்பிகைபாகர் வேதவனம் அவர்களின் ஓராண்டு நிகழ்வு எதிர்வரும் 25.05.2019, சனிக்கிழமை நண்பகல் 12:00 மணிக்கு **17912 Rae River Pierrfinds, H93 - 231** எனும் முகவரியில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தனர்

தொடர்புகளுக்கு:

வே. ரஞ்சினிதேவி (மனைவி): 438-833-2941

ந. பிறேம்ராஜ் (மைத்துனர்): 514-298-3358, கி. சுபா (மகள்): 438-978-2290

விளையாட்டரங்கு

இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் ஒரு நாள் இடைநிறுத்தம்!



பாகிஸ்தானுக்கு எதிரான நான்காவது ஒரு நாள் போட்டியிலிருந்து இங்கிலாந்து அணித்தலைவர் இயான் மோர்கனை இடைநீக்கம் செய்யப்படுவதாக ஐசிசி அறிவித்துள்ளது. மே14ம் திகதி பிரிஸ்டல் மைதானத்தில் இங்கிலாந்து-பாகிஸ்தான் மோதிய 3வது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிப்பெற்று. மழை காரணமாக முதல் போட்டி கைவிடப்பட்ட நிலையில் ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 2-0 என இங்கிலாந்து முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில், 3வது ஒரு நாள் போட்டியில் மெதுவாக பந்து வீசிய குற்றத்திற்காக இங்கிலாந்து அணித்தலைவர் மோர்கன், 4வது ஒரு நாள் போட்டியிலிருந்து இடைநீக்கம் செய்யப்படுவதாகவும், அவரது போட்டி சம்பளத்திலிருந்து 40 சதவீதம் அபராதம் விதிக்கப்படுவதாக ஐசிசி அறிவித்துள்ளது. மேலும், இங்கிலாந்து அணி வீரர்களின் போட்டி சம்பளத்திலிருந்து 20 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக ஐசிசி அறிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான 3வது ஒரு நாள் போட்டியில் 50 ஓவர் வீச இங்கிலாந்து அணி நான்கு மணி நேரம் எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது. கடந்த பிப்ரவரி மாதம் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியின் போதும் மோர்கன் இதே குற்றத்தில் சிக்கினார் என்பது நினைவுக்கூரத்தக்கது.

தவறான நடத்தை - நெய்மாருக்கு 3 போட்டிகளில் விளையாடத் தடை



பாரிஸ் ஜெயின்ட் ஜெர்மைன் கிளப் அணியில் விளையாடி வரும் பிரேசில் நட்சத்திர வீரரான நெய்மருக்கு மூன்று போட்டிகளில் விளையாட தடைவிதிக்கப்பட்டுள்ளது. பிரஞ்சு கோப்பை இறுதிப்போட்டியில் பெனால்டி சூட்அவுட் முறையில் பாரிஸ் ஜெயின்ட் ஜெர்மைன் அணி, ரென்னெஸ் அணியிடம் தோல்வியடைந்தது. காயம் காரணமாக அப்போட்டியில் விளையாடாத நெய்மர், மைதானத்தில் ரசிகர்களுடன் போட்டியை பார்த்தார். இந்நிலையில், போட்டி முடிந்து மைதானத்தை விட்டு வெளியேறும் போது ரசிகர் ஒருவரின் முகத்தில் நெய்மர் குத்திய வீடியோ இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. நெய்மரின் தவறான நடத்தை காரணமாகப் பிரஞ்சு கால்பந்து கூட்டமைப்பு மூன்று போட்டிகள் விளையாட தடை விதித்துள்ளது.

நட்சத்திர வீரர் டைகர் வூட் ஒலிம்பிக்கில் விளையாட விருப்பம்.



உலகின் நட்சத்திர கொல்ப் வீரர்களான டைகர் வுட்ஸ் மற்றும் ரோரி மெக்ல்ரோய் ஆகியோர் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

எதிர்வரும் 2020ம் ஆண்டு ஜப்பானின் டோக்கியோ நகரில் ஒலிம்பிக் போட்டித் தொடர் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டித் தொடரில் பங்கேற்பதற்கான முனைப்புக்களில் டைகர் வுட்ஸ் மற்றும் ரோரி மெக்ல்ரோய் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்காவின் சார்பில் வுட்ஸும், நெதர்லாந்து அல்லது பிரித்தானியா சார்பில் ரோரி மெக்ல்ரோயும் பங்கேற்க விருப்பம் வெளியிட்டுள்ளனர்.


உலகக் கோப்பையைப் பாகிஸ்தான் வெல்லும் - கங்குலி அதிர்ச்சி ஆருடம்



இந்த முறை உலகக்கோப்பையை பாகிஸ்தான் வெல்லும் என்று முன்னாள் இந்திய அணித்தலைவர் கங்குலி கூறியிருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இங்கிலாந்தில் இம்மாதம் 30ஆம் திகதி உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் தொடங்க உள்ளது. இந்தத் தொடருக்கு இன்னும் 15 நாட்களே உள்ள நிலையில், முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பலரும் எந்த அணி கோப்பையை கைப்பற்றும் என்பது குறி த்து தங்களது கணிப்பைத் தெரிவித்து வருகின்றனர். இந்திய கிரிக் கெட் அணியின் முன்னாள் கேப்டன் சவுரவ் கங்குலியும் தனது கணிப்பை தெரிவித்துள்ளார். ஆனால், அவரது கணிப்பு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

இதுதொடர்பாக கங்குலி கூறுகையில், "பலம் வாய்ந்த அணிகளில் ஒன்றாக பாகிஸ்தான் உலகக்கோப்பை தொடரில் நிச்சயம் சிறப்பாக விளையாடும். அதற்கு காரணமும் இருக்கிறது. 2009ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற டி20 உலகக்கோப்பையில் பாகிஸ்தான் சாம்பியன். 2017ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற சாம்பியன்ஸ் கோப்பை போட்டியிலும், இறுதிப்போட்டியில் இந்தியாவை வீழ்த்தி கோப்பையை வென்றிரு க்கிறது. அது தவிர இப்போது நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான தொடரிலும் பாகிஸ்தான் சிறப்பாக ஆடி வருகிறது. எனவே பாகிஸ்தான், இங்கிலாந்தில் சிறப்பாக விளையாடும். உலகக்கோப்பை தொடரில் இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஆகிய அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும். இந்திய அணி சிறப்பாக விளையாடி வருகிறது. கோஹ்லியின் பெங்களூரு அணி ஐ.பி.எல்-யில் தோற்றாலும், அது இந்தியாவை பாதிக்காது" என தெரிவித்துள்ளார்.

குத்துச்சண்டை வீரர் குப்ராட் புல்வே கலிபோர்னியா போட்டிகளில் விளையாடத் தடை




பல்கேரியாவின் நட்சத்திர குத்துச்சண்டை வீரர் குப்ராட் புல்வே (Kubrat Pulev) விற்கு கலிபோர்னியாவில் போட்டிகளில் பங்கேற்ப தற்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது. தொலைக்காட்சி பெண் தொகுப்பாளர் ஒருவரைப் பலவந்தமாக கட்டியணைத்து முத்தம் கொடுத்தார் என புல்வே மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. போட்டியின் நிறைவில் போட்டி குறித்த நேர்கா ணலின் போது இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. எதிர்வரும் ஜூலை மாதம் வரையில் புல்வேறு கலிபோர்னியாவில் போட்டிக ளில் பங்கேற்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் 2500 டொலர்கள் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் புதிய பயிற்சியாளர் சமிந்த வாஸ்

இலங்கையின் வளர்ந்து வரும் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். மேட்ச் பிக்சிங்கில் ஈடுப்பட்டதாக ஐசிசி-யின் குற்றச்சாட்டின் விளைவாக இலங்கை வளர்ந்து வரும் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதிவியிலிருந்து மே 11ம் திகதி அவஷ்கா குணவர்த்தன நீக்கப்பட்டார்.

இந்நிலையில், மே 14ம் திகதி நடந்த இலங்கை கிரிக்கெட் ஆணையத்தின் நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது. இதில், வளர்ந்து வரும் கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸை நியமித்துள்து. அடுத்த மாதம் தென் ஆபிரிக்காவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

சிறுநீரில் இரத்தமா? இவையும் காரணமாகலாம்.



நமக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டால் உடனே சிறுநீர் பரிசோதனையினை மேற்கொள்ளுமாறு மருத்துவர்கள் வலியுறுத்துவர். அதற்குக் காரணம் நம் உடலில் ஏதாவது தொற்று போன்ற பாதிப்பு இருந்தால் அதைச் சிறுநீர் அறிகுறியாகக் காட்டும். சிறுநீர் நிறம் மாறி சிவப்பாகவோ அல்லது இரத்தம் கலந்து வந்தாலோ நம் உடலில் வேறு ஏதோ பாதிப்பு இருப்பதன் அறிகுறியாகும்.

ஹிமடூரியா

உடலில் ஏதாவது ஒரு பாகத்தில் இரத்தபோக்கு இருந்தால் இந்த பிரச்சனையானது ஏற்படும். இதனால் சிறுநீரில் இரத்தம் வெளியேறும். இதனை அலட்சியப்படுத்தக்கூடாது.

புகைப்பிடித்தல்

புகைப்பிடித்தல் உடலுக்கு தீங்கு விளைவிக்கும். தொடர்ந்து அளவுக்கு அதிகமாக புகைப்பிடிப் பவர்களுக்கு சிறுநீரக புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். இதன் அறிகுறியாக இரத்தக் கட்டிகளாக சிறுநீரில் வெளிப்படும்.

சிறுநீரக கற்கள்

சரியாக நீர் அருந்தாமல், சிறுநீர் கழிக்காமல் இருந்தால் சிறுநீரக கட்டிகள் ஏற்படும். இதனால் இரத்தமாக வெளிப்படும். சிறுநீரக கட்டி பிரச்சனை இருப்பவர்கள் காபி, டீ போன்றவற்றை அருந்து வதை நிறுத்த வேண்டும் இல்லையெனில் பாதிப்பு இன்னும் தீவிரமாகும்.

சிறுநீரக நோய்கள்

சிறுநீரக குழாயில் ஏற்படும் கோளாறுகள், ப்ரோஸ்டேட் வீக்கம், ப்ரோஸ்டேட் புற்றுநோய், சிறுநீரக செயலிழப்பு, அதிகப்படியான மாத்திரைகள், பயாப்ஸி போன்றவற்றினாலும் சிறுநீரில் இரத்தம் வெளிப்படும்.


இரத்தநோய்கள்

இரத்தம் சம்பந்தப்பட்ட சில நோய்களான சிக்கில் செல் அனீமியா, இரத்தத்தட்டு நோய்கள் ஆகியவற்றாலும் சிறுநீரில் இரத்தம் கலந்து வெளியேறலாம்.

பரிசோதனை அவசியம்.

சிறுநீரில் இரத்தம் வருவதுடன் எரிச்சல், அடிவயிறு வலி, காய்ச்சல், வாந்தி, மயக்கம் போன்றவை இருந்தால் உடனே பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

அம்பரலங்காயில் உள்ள மருத்துவச் சிறப்புகள்



ஆயுர்வேத சிகிச்சை முறையில் அம்பரலங்காய் பயன்படுத்தப்படுகிறது. இதில் இதன் அறிவியல் பெயர் ஸ்பான்டியஸ் டல்சிஸ் ஆகும்.

இதில் பல்வேறு மருத்துகுணங்கள் நிறைந்து காணப்படுகின்றது. இம்மரத்தின் இலைகளும் பட்டையும் பல்வேறு விதங்களில் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக வயிற்றழைச்சல், தொண்டை வலி, இருமல், கண்ணில் ஏற்படும் நோய் தொற்று, காய்ச்சல் உள்ளிட்ட பல்வேறு உடல் உபாதைகளுக்கான சிகிச்சைக்கு அம்பரலங்காய் பயன்படுகிறது.

இதில் உள்ள மருத்துவகுணங்கள் பற்றி நாம் இங்கு பார்ப்போம்.

அம்பரலங்காயில் வைட்டமின் ஏ அதிக அளவு உள்ளது. இது கண் பார்வை திறனை மேம்படுத்துகிறது. இம்மரத்தின் இலைகளை பயன்படுத்தி தயாரிக்கப்படும் சாறு கண்களில் ஏற்படும் ஒவ்வாமைக்கு சிகிச்சை அளிக்கப் பயன்படுகிறது.

அம்பரலங்காயில் வைட்டமின் சி அதிக அளவு இருப்பதால், உடலில் காணப்படும் கொலஸ்ட்ராலை வளர்சிதை மாற்றத்திற்குள்ளாக்கி பித்தநீர் அமிலங்களாக மாற்றுவதில் உதவி புரிகிறது.

செரிமானத்தை தூண்டக்கூடிய நார்ச்சத்து இப்பழத்தில் காணப்படுவதால் மலச்சிக்கல் தவிர்க்கப்படுகிறது. அஜீரணம் மற்றும் செரிமான கோளாறுகளை அம்பரலங்காய் குணப்படுத்துகிறது.

இதன் பழம் நீர்ச்சத்து கொண்டதாக இருப்பதால் உடலில் ஏற்படும் நீர்ச்சத்து குறைவை சரிசெய்கிறது.

அம்பரலம் பழத்தில் கார்போஹைறட்ரேட், கொழுப்பு, கலோரி ஆகியவை குறைவாக உள்ளன. ஆனால், நார்ச்சத்து அதிகம் உள்ளது. ஆகவே, இப்பழம் தேவைக்கு அதிகமான உடல் எடையை குறைப்பதற்கு உதவுகிறது.

நச்சுப்பொருள்கள், மாசு ஆகியவற்றின் பாதிப்பிலிருந்தும் உடல் செல்களை காப்பதால், சரும பாதிப்புகள் நேர்வதில்லை. இளமையான தோற்றம் நீடிக்கிறது.

உடலின் நோய் எதிர்ப்பு ஆற்றல் செயல்பாட்டை இப்பழத்திலுள்ள வைட்டமின் சி ஊக்குவிக்கிறது. நோய் தடுப்புக்கான உடல் செயல்பாட்டை இது பலப்படுத்துவதால், நோய்கள், இணை காணப்படாத தனி அயனி ஆகியவற்றால் பாதிப்பு ஏற்படாமல் காக்கிறது.

இரத்த சிவப்பு அணு உற்பத்திக்குத் தேவையான வைட்டமின் பி1 மூலம் அம்பரலங்காய் உதவுகிறது. உடலில் இரத்த ஓட்டத்தை தூண்டுவதன் மூலம் உயிர்வளியாகிய ஒக்ஸிஜன் உடல் எங்கும் சென்று சேர்வதற்கு இது துணை செய்கிறது.



தூக்கமாத்திரை அருந்துவதால் ஏற்படும் பக்க விளைவுகள்.

இன்றைய காலகட்டத்தில் பலர் பணிச்சுமை, உணவுப்பழக்கம், தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவற்றால் இரவு தூக்கத்தை மிகவும் தாமதமாக மேற்கொள்கின்றனர்.

நாளடைவில் இந்த பழக்கம் அவர்களுக்கு தூக்கமின்மைக்கு ஆளாக்கும். இதனால் பல ஆரோக்கிய கோளாறுகளும் ஏற்படுகின்றன. இதற்காக தூக்க மாத்திரைகளை உட்கொள்ள ஆரம்பிக்கிறார்கள்.

தூக்க மாத்திரைகள் பகல் நேர தூக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. இதனால் மனநிலையில் குழப்பம் ஏற்படும். பணிகளில் கவனம் செலுத்துவது சவாலாகவே இருக்கும்.

தூக்க மாத்திரைகள் தூக்க சுழற்சியை ஒழுங்குபடுத்துவதன் மூலம் இன்சோமேனியாவை குறைக்கிறது. இதனால் தலைவலி மற்றும் முதுகுவலி போன்ற பிரச்சனைகள் ஏற்படும்.

இவை தூங்கும்போது சுவாசப்பாதையில் தடையை ஏற்படுத்தி மூச்சுத்திணறலை ஏற்படுத்த வாய்ப்புகள் உள்ளன. தூக்க மாத்திரைகளை நீண்டகாலத்திற்கு எடுத்துக் கொள்வதன் மூலம் புற்றுநோய் உண் டாகும் அபாயம் ஏற்படும். இதிலுள்ள பல்வேறு வகையான சேர்மங்கள் நுரையீரலில் பாதி ப்பை ஏற்படுத்தும். இதனால் நுரையீரல் புற்றுநோய் உண்டாகலாம்.

ஒரே நேரத்தில் அதிக அளவிலான தூக்க மாத்திரைகளை எடுத்துக்கொள்வது கோமா அல்லது மரணத்தை கூட ஏற்படுத்தும். வயதானவர்களுக்கு இது அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். ஏனெனில், இந்த மருந்து உடலில் கரைய அதிக நேரம் எடுத்துக் கொள்ளும். இதனால் காலையில் எழுவது மிகவும் சிரமமானதாக இருக்கும். இதனால் உடலில் உள்ள ஒக்ஸிஜன் அளவு குறையும். அத்துடன் நிம்மதியற்ற தூக்கமே கிடைக்கும்.

வலி நிவாரணிகளை பயன்படுத்துபவர்கள் தூக்க மாத்திரைகளை உபயோகிக்காமல் இருப்பது நல்லது. ஏனெனில் இரண்டு மருந்துகளும் இணையும்போது உடலில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். தூக்க மாத்திரைகளை சாப்பிடவுடன் வாந்தி, குமட்டல், வேர்வை போன்ற அறிகுறிகள் தெரிந்தால் உடனடியாக அதனை எடுத்துக் கொள்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இரத்தம் உறையாமைக்குரிய சிகிச்சை முறை



எம்மில் பலருக்கு அடிபட்டாலோ அல்லது வேறு ஏதேனும் வகையில் விபத்து ஏற்பட்டாலோ உடலிலிருந்து வெளியாகும் இரத்தமானது, சில நிமிடங்களிலேயே உறைந்துவிடும். இப்படி உறைவது ஒரு வகையில் ஆரோக்கியமானது என வைத்தியர் அனந்த கிரு'ணன் தெரிவித்துள்ளார்.

சிலருக்கு ரத்தம் உறையாமல் தொடர்ந்து உடலிலிருந்து வெளியேறிக் கொண்டே இருக்கும். இவர்கள் இரத்தம் உறையாமை என்ற பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளலாம். தற்போது இதற்கும் நவீன முறையிலான சிகிச்சை கண்டறியப்பட்டிருக்கிறது. உலக அளவில் 5000 ஆண்களுக்கு ஒரு ஆண் இத்தகைய இரத்தம் உறையாமை பிரச்சினைக்கு ஆளாகுவதாக கண்டறியப்பட்டிருக்கிறது. அத்துடன் இத்தகைய பாதிப்பு ஏ, பி, சி என மூன்று வகையினதாகவும் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

கடுமையான தலைவலி, தொடர்ச்சியாக வாந்தி, கழுத்து வலி,பார்வைத் திறனில் மாறுபாடு குறிப்பாக ஒரு பொருள் இரண்டிரண்டாக தெரிவது அல்லது மங்கலாகத் தெரிவது, நீண்ட தூக்கம், அடிபட்ட இடங்களிலிருந்து தொடர்ச்சியான இரத்தப்போக்கு ஆகியவற்றை இதன் அறிகுறியாக எடுத்துக் கொள்ளலாம்.

ஹீமோபிலியா எனப்படும் இரத்தம் உறையாமை பிரச்சினையில், ஏ மற்றும் பி என இரண்டு வகை பாதிப்புகளுக்கு, ரிப்ளேஸ்மென்ட் தெரபி எனப்படும் சிகிச்சை மிகுந்த பலனளிக்கிறது. இந்த முறையில் இரத்தத்திலிருந்து, ஹீமோபிலியா போன்ற இரத்தம் உறைய வைக்கக்கூடிய காரணிகளை தனியாக பிரித்து எடுத்து, மீண்டும் நரம்பு வழியாக இரத்தத்தில் செலுத்துவார்கள். இது முழுமையான நிவாரணத்தை தருகிறது.

அதே தருணத்தில் உடலில் காயங்கள் ஏற்படாத அளவுக்கு நாம் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அத்துடன் பற்களில் எந்த வகையான ரத்த கசிவு ஏற்படாமல், பற்களையும் சுத்தமாக பராமரிக்க வேண்டும். வலிநிவாரணிகளை மருத்துவர்களின் ஆலோசனை இல்லாமல் எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்த மூன்றையும் முறையாகப் பின்பற்றினால் ரத்தம் உறையாமை என்ற பாதிப்பிலிருந்து விடுபடலாம்.

கல்லீரல் வீக்கத்துக்கு உரிய சிகிச்சை

இளைய தலைமுறையினர் விருந்து என்று கூறி, வார விடுமுறை நாட்களில் மது அருந்துவதை வழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர். இதனை தினம்தோறும் பழக்கப் படுத்திக் கொள்கிறார்கள். இதனால் அவர்களின் கல்லீரல் பாதிக்கப்படுகிறது. கல்லீரலில் அதிக கொழுப்பு சேர்வதை தான் ஃபேட்டி லிவர் என்று கூறுகிறோம். இவை வருவதற்கு மிக முக்கிய காரணம் மது பழக்கம். உடல் கொழுப்பை கல்லீரலால் முறையாக வளர்சிதை மாற்றத்துக்கு உட்படுத்த முடியாத நிலை ஏற்படும் போது தான் கல்லீரலில் உள்ள செல்களில் கொழுப்பு படிந்து இந்த நோய் உருவாகிறது. மது அருந்தினால் இவர்களின் கல்லீரலில் வளர்சிதை மாற்றத்திற்கு ஒத்துழைப்பு கொடுக்காமல், செல்களில் கொழுப்பு படிவதை அனுமதிக்கிறது. அடுத்து நீரிழிவு நோய் இருந்தாலும், கல்லீரல் வீக்கம் ஏற்படும். சிலருக்கு மட்டும் இது பாரம்பரியத்தின் காரணமாக வரக்கூடும். இத்தகைய பாதிப்பு உள்ளவர்களுக்கு தொடக்க நிலையில் எந்த வித தொல்லைகளும் ஏற்படுவதில்லை. அதற்கான அறிகுறியும் தோன்றுவதில்லை. இதனால் பலர் அலட்சியமாக இருந்து விடுவார்கள். இதன் காரணமாகவே கல்லீரலில் உள்ள செல்கள் சிதைந்து, சுருங்கி லிவர் சிரோசிஸ் என்ற நோய் ஏற்படுவதற்கான ஏற்படக்கூடும்.



மேகமூட்டத்தில் இருந்து மின்சாரம்

மேகமூட்டத்தைப் பயன்படுத்தி விஞ்ஞானிகள் மின்சார த்தை உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளனர்.

சூரியனிலிருந்து வரும் ஒளியினை சூரியப்படல்களைக் கொண்டு மின்சக்தியாக மாற்றுவதைப் போன்று மேகங்கள் குளிர்ச்சியடைவதை அடிப்படையாகக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆய்வுக்கட்டுரையானது Applied Physics Letters சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, வெப்ப நிலை மாற்றம் அண்டவெளியில் காணப்படுதலானது மின்சார உற்பத்திக்கு மிகப் பெரிய மூலம் என அமெரிக்காவிலுள்ள ஸ்டன்ட் போர்ட் பல்கலைக் கழக பேராசிரியரான Shanhui Fan தெரிவித்துள்ளார்.



இனி தொலைபேசிகளில் WhatsApp வசதி கிடையாது!

ஃபேஸ்புக் நிறுவனம் விண்டோஸ் தொலைபேசிகளில் தனது WhatsApp சேவையை இந்த ஆண்டு இறுதியில் நிறுத்துவதாக தெரிவித்துள்ளது.

பிளாக்பெரி இயங்குதளத்தில் WhatsApp செயலிக்கான வசதி 2017 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது. முன்னதாக Android 2.3.3 மற்றும் விண்டோஸ் 7 இயங்குதளங்களில் WhatsApp சேவை 2016 ஆம் ஆண்டே நிறுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக விண்டோஸ் தொலைபோசி தளங்களில் WhatsApp சேவை இந்த ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்கு பின் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் WhatsApp செயலியை விண்டோஸ் தொலைபேசி 10 தளங்களில் பயன்படுத்த முடியாது. மேலும் இந்த செயலிக்கான ருனயவந வழங்கப்படாது. முன்னதாக 2017ஆம் ஆண்டு விண்டோஸ் தொலைபேசி 8.0 தளத்தில் WhatsApp வசதி நிறுத்தப்பட்டது. தற்சமயம் WhatsApp சேவை நிறுத்தப்படும் தளங்களின் பட்டியலை அந்நிறுவனம் தனது வலைதளத்தில் மாற்றியிருக்கின்றது.

விண்டோஸ் தளத்தில் WhatsApp சேவை நிறுத்தப்பட இருக்கும் நிலையில், அந்நிறுவனம் சர்வதேச விண்டோஸ் தளத்துக்கான (Universal Windows Platform) புதிய செயலியை உருவாக்கி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

WhatsApp மூலம் ஹக்கர்கள் ஊடுருவி, தகவல்களைத் திருட முயற்சி

ஸ்மார்ட் மொபைல்களில் நாம் அதிகமாகப் பயன்படுத்தும் WhatsApp செயலியினை ஹக்கர்கள் ஊடுருவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

இன்றைய உலகில், உலகம் முழுவதும் தகவல் தொடர்புக்காக பலரும் பயன்படுத்தும் இந்த App ஊடாக உள்நுழையும் ஹக்கர்கள் பயனர்களுக்குத் தெரியாமலே அவர்களின் தகவல்கள் அனைத்தையும் திருடுவதுடன் அந்த மொபைல்போனை ரிமோட் மூலம் கண்காணிக்கவும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும் முடியும் என்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே தெரியாத இலக்கங்களில் இருந்து WhatsApp குறுந்தகவல் வருகின்றபோது அதனைத் திறக்கவேண்டாம் என பயனர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஹக்கர்களின் தாக்குதலானது இந்தமாதத் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கும் பைனான்சியல் ரைம்ஸ் இந்தத் தாக்குதலானது இஸ்ரேலிய நிறுவனம் ஒன்றினால் வடிவமைக்கப்பட்டது என்றும் கூறியுள்ளது.



நொடிக்கு 7ஜிபி வேகம் 5ஜி தொழில்நுட்பம் உங்களுக்கு தேவையா?

ஒவ்வொரு ஆண்டும் புதிய சிறப்பம்சங்களுடன் வெளியிடப்படும் திறன் பேசிகளுக்காக காத்திருப்பவர்களில் நீங்களும் ஒருவராக இருக்கலாம் ஆனால், திறன்பேசி பயன்பாட்டாளர்கள் மட்டுமின்றி அதன் தயாரிப்பாளர்கள், தொலைத்தொடர்பு நிறுவனங்கள், அரசாங்கங்கள் என ஒட்டுமொத்த உலகமே தற்போது ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது 5ஜி தொழில்நுட்பம். ஐந்தாம் தலைமுறைக்கான அலைபேசியை அடிப்படையாக கொண்ட இணையதள தொழில்நுட்பமே 5ஜி எனப்ப டும். இது முந்தைய 4ஜி என்னும் நான்காம் தலைமுறைக்கான தொழில்நுட்பத்தை விட பன்மடங்கு வேக மாக பதிவிறக்க மற்றும் பதிவேற்ற வேகத்தை கொண்டிருக்கும் என்று கருதப்படுகிறது.

5ஜி தொழில்நுட்பத்தில் இணையதள வேகம் எவ்வளவு இருக்கும் என்று தெரிந்துகொள்வதற்கு முன்னர், இந்தியாவில் சராசரி 4ஜி வேகம் குறித்து தெரிந்துகொள்வோம்.

உலகம் முழுவதும் 4ஜி தொழில்நுட்பத்திற்கென குறிப்பிட்ட அலைவரிசையும், தரமும், சராசரி வேகமும் நிர்ணயிக்கப் பட்டிருந்தாலும், ஒவ்வொரு நாடுகளுக்கிடையேயும் இணையதள வேகத்தில் பெரும் வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. அந்த வகையில் பார்க்கும்போது, உலகிலேயே அதிகபட்சமாக சிங்கப்பூரில் 4ஜி எல்டி, பயன்பாட்டாளர்களுக்கு சராசரியாக 44 எம்பிபிஎஸ் வேகம் கிடைப்பதாகவும், இந்தியாவை பொறுத்தவரை சராசரியாக 9.31 எம்பிபிஎஸ் வேகம் இருப்பதாகவும் ஓபன்சிக்னல் என்னும் சர்வதேச கம்பியில்லா இணைய வேக ஆராய்ச்சி நிறுவனம் கூறுகிறது.

இன்று புழக்கத்தில் இருக்கும் 3ஜி அல்லது 4ஜி ஆகிய தொடர்பாடல் முறைமைகள் பயன்படுத்தும் அதிர்வெண்கள் 3 கிகாவுக்கும் குறைவானவை. 5ஜியிலோ 30 கிகா வாக்கில் ரேடியோ அதிர்வெண்களைப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளனர். ஆற்றின் வெள்ளம் 5ஜி என்றால் முந்தையவை கால்வாய் நீர். அதிகமாக வெள்ளம் ஓடும் ஆறுபோல நாம் பார்க்கலாம். அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட நாடுகளில் இந்தாண்டு இறுதிக்குள் 5ஜி தொழில்நுட்பம் முறையாக அறிமுகம் செய்யப்படுமென்று எதிர்ப்பார்க்கப்படும் நிலையில், இந்தியாவை பொறுத்தவரை 2022ஆம் ஆண்டு வரை காத்திருக்க வேண்டுமென்று 5ஜி தொழில்நுட்ப ஆராஹய்ச்சியில் ஈடுபட்டுள்ள முன்னணி நிறுவனமான எரிக்சன் கூறுகிறது.

செர்னோபிள் அணு உலை விபத்து: கதிர்வீச்சால் உருவான சிவப்புக் காட்டில் ட்ரோன்கள் ஆய்வு

1986-ம் ஆண்டு ஏப்ரல் 26. அப்போதைய சோவியத் ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த உக்ரைன் பிரதேசத்தில், செர்னோபிள் என்ற இடத்தில் அமைந்திருந்த அணு உலை வெடித்துச் சிதறி உலகை அதிரச் செய்தது. ஓர் அணு உலை இப்படி வெடித்துச் சிதறும் என்று உலகம் அதுவரை நம்பவில்லை. இந்த விபத்தால் வெகுதூரத்துக்குப் பரவிய கதிரியக்க ஆபத்து வெகு காலத்துக்கும் நீடித்து நிற்கிறது. இன்னும் நீண்ட காலத்துக்கும் அதன் தாக்கம் இருக்கும். இது உலகின் மிகப்பெரும் அணு உலை விபத்துகளில் ஒன்றாக இன்றும் கருதப்படுகிறது.

சம்பவ நாளில், செர்னோபிள் அணு உலை வளாகத்தின் 4-ம் எண் உலை வெடித்தவுடன், கதிர்வீச்சையும், அனலையும் உடனடியாக எதிர்கொண்டது அங்கிருந்து வெறும் 500 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள காடு. வெப்பத்தால் கருகி மடிந்த மரங்கள், மிக அதிக அளவிலான கதிர்வீச்சினை உள்வாங்கி பழுப்பு நிறத்துக்கு மாறின. இதன் மூலம் இந்தக் காடு 'சிவப்புக் காடு' என்று பெயர் பெற்றது.

இந்த சிவப்புக் காட்டினை பிரிட்டன் விஞ்ஞானிகள் ஆளில்லா விமானத் தொகுப்பைக் கொண்டு தற்போது ஆராய்ந்துள்ளனர். உலகின் கதிரியக்க மாசு மிகுந்த இடங்களில் ஒன்று என்று கருதப்படும் இந்த இடத்தை பிரிட்டன் விஞ்ஞானிகள் அனுப்பிய ரோபோட்டிக் ஆளில்லா விமானத்தில் இருந்த சென்சார்கள் ஆராய்ந்து தகவல்களை சேகரித்தன. கதிரியக்க மாசுபாடு மிகுந்த இடங்கள் எவை என்பது குறித்த மேம்பட்ட தகவல்களை இந்த ஆராய்ச்சி உக்ரைன் அதிகாரிகளுக்கு வழங்கும்.

முள்ளிவாய்க்காலுடன்...

35 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஒவ்வொரு குடும்ப அங்கத்தவரும் சார்பு நிலை கொண்டு வாழ்ந்தார்கள். சமூக கட்டமைப்பில் ஒற்றுமையும் பணத்தின் ஆதிக்கத்தின் அளவும் மிகவும் குறைவாக காணப்பட்டது. பணத்திற்கும் ஆடம்பரத்திற்கும் முக்கியத்துவம் அளிப்பதற்கு பதிலாக உறவுகளுக்கும் சொந்தங்களுக்கும் குடும்ப அமைப்பின் உயரிய கோட்பாடுகளுக்கும் முக்கியம் அளிக்கப்பட்டது.

ஆனால் 2009 ஆம் ஆண்டின் பின்னர் உருவாகிய சமுதாயம் மிகவும் மோசமான தவறான வழிகாட்டிகளால் உருவாக்கப்பட்டு உள்ளது.

உதாரணமாக கல்வி துறையில் ஆளுமை படைக்கவேண்டிய பெண்களில் பலரும் காதல் என்ற போலி வலைக்குள் சிக்கி வாழ்கின்றனர். பாடசாலை காலத்தில் ''காதல்'' என்பது சாதாரணமாக ஏற்படும் ஒரு உணர்வு என்பதை தெளிவுபடுத்த முடியாத நிலையில் இன்றைய பாடசாலை ஆசிரிய சமூகமும் படித்தவர்களும் காணப்படுகின்றார்கள்.

இவ்வாறு அறிவுரீதியாக சிந்திக்க தெரியாமல் காணப்படுவதற்கு என்ன காரணம் என்பதை நாம் ஆழமாக அலசி ஆராய்ந்திட வேண்டும். இன்று பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் அல்லது எந்த ஒரு துறையிலும் இருக்கும் நபர்களை நாம் உற்று நோக்குவோமாக இருந்தால் அவர்களின் சிறுபிராயத்தில் ஏற்பட்ட வடுக்களும், தவறுகளும் ஆரோக்கியமான ஒரு சூழலை அல்லது சமுதாயத்தை உருவாக்க முடியாமல் இருப்பதற்கு காரணம் என்று கூறிட முடியும்.

"போர்" என்பது சாதாரண ஒரு மனிதனிடம் மட்டும் தாக்கம் செலுத்துவதில்லை.. குறித்த அந்த இனத்தையே தாக்கி அழித்திடும் வல்லமை கொண்டதாக இருக்கும்.

அது அந்த இனத்தின் மீது அந்த இன விருத்தியின் மீது அந்த வம்சத்தின் மீதே பாரிய தாக்கம் செலுத்தும் சக்தியாக இருக்கின்றது. இன்றைக்கு எந்த துறையில் பணிபுரியும் நபர்களாக இருந்தாலும் அவர்களின் இளமை காலத்தில் போரின் இறுக்கமான சூழலை சந்தித்து இருந்ததால் அவர்களின் அடிமனதில் சூது, வஞ்சம், ஒழுக்கப் பிறழ்வு, ஏமாற்றம் செய்தல், தவறான செயற்பாட்டில் ஈடுபடுவதில் அக்கறை போன்ற இயல்புகள் சாதாரணமாக அவர்களின் மனதில் புரையோடி இருக்கும் இயல்பாக இருக்கின்றது. அதனாலேயே தான் இன்று ஈழத்தில் உள்ள சகல துறைகளிலும் உள்ள பெண்களின் மீதான வன்முறைகள் பரவலாக காணப்படுகின்றது.

இன்று ஈழத்தில் காணப்படும் ஒழுக்க மீறல்கள், மது, போதை, சினிமா மீதான மோகம், வாள்வெட்டு கலாச்சாரம், அந்நிய ஆடம்பர மோகம், என்பவை தொழிநுட்ப தாக்கத்தால் சமூக வலைதள ஆதிக்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று மேலோட்டமாக கூறி வந்தாலும், போர் சூழலில் வாழ்ந்த இளைய சமுதாயத்தின் ஆணிவேரில் ஏற்பட்ட நச்சு கிருமிகளின் தாக்கத்தால் ஏற்பட்ட விளைவின் பிரதிபலனே இன்றைய ஒவ்வொரு செயற்பாட்டினதும் ஆணிசக்கரம் என்பதை அறிந்திட மறுக்கின்றோம்.

போர் சூழலில் வாழ்ந்த இளைய சமுதாயமே இன்று சமூக சக்திகளாக மாறி இருக்கின்றார்கள். ஏற்கனவே அவர்களின் மனதில் ஆழமாக புரையோடியுள்ள சமூக கேடான சிந்தனைகளின் பிரதிகளாகவே இன்றைய இளைய சமுதாயம் வளர்த்தெடுக்கபடுகின்றது. அதனாலேயே எமது இளைய சமுதாயம் திக்கற்றவர்களாக வாழ்கின்றனர். ஊடக துறை தொடக்கம் சுற்றுலாத்துறை வரை போரின் பிடியில் வாழ்ந்த இளைய சமுதாயத்தின் கைகளிலேயே இருப்பதால் ஈழத்தின் சமுதாய நிலையில் அலங்கோலமான சித்தாந்தமே பரவியுள்ளது.

ஆகவே இவர்களின் பிடியில் இருந்து எம்மின மக்களை பேணி பாதுகாத்திடவேண்டிய பாரிய கடமை படித்த சமூகத்தின் மீதான அக்கறையுள்ள ஒவ்வொருவருக்கும் உண்டு எனலாம்.

ஈழத்தில் வாழும் பெண்களை நாம் அறிவுள்ள பெண்களாக போரின் வடுவில் பாதிக்கப்பட்ட இளைய சமுதாயத்தின் வழிநடத்தலில் இருந்து காக்கும் பாரிய பொறுப்பில் உள்ளவர்களாக இருக்கின்றோம். ஒரு சமுதாயத்தில் பெண்களின் வளர்ச்சியையும், எழுச்சியையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தினாலேயே அந்த சமூகத்தை அழிவில் இருந்து காப்பாற்றிட முடியும். இன்று நாகரீக மோகத்தில், பணத்தின் ஆதிக்கத்தில், சுயநல தன்குடும்ப நலனில் அக்கறை கொண்டுள்ள பெண்களை சமூக சார்பு சிந்தனை பெற்ற பெண்களாக மாற்றி அமைப்பதே எமக்கு முன்னுள்ள பாரிய சவால்களில் ஒன்றாக இருக்கிறது.

அதுமட்டுமன்றி "ஒழுக்கம்" என்ற பதம் உயிரிலும் மேலான சக்தி கொண்டது என்பதையும், "அழகு" என்பது மனத்தின் அழகிலே தாக்கியுள்ளது என்பதையும் புரிய வைக்கவேண்டிய தேவையில் ஊடகங்களும், கல்வியாளர்களும், சமூக சிந்தனையார்களும் வாழ்கின்றார்கள்.

இன்று ஈழத்தில் சிறந்த வழிகாட்டிகள் இன்மையும் சிறந்த முன்னோடிகள் அற்ற நிலையும் ஆளுமையான தலைவர்கள் அற்ற நிலையும் பல சமூக குடும்ப உளவியல் பிரச்சனைகளுக்கு காரணம் எனலாம். குறித்த தவறுகளை நாம் தீர்க்க தவறுமிடத்து எமது இனம் மண்ணோடு மண்ணாக அழிந்து போவதை யாரும் தடுத்திட முடியாது.

இரத்தம் இன்றி, யுத்தம் இன்றி, கத்தி இன்றி ஒரு இனம் அடியோடு அழிந்து போகும் இனமாக ஈழத்தமிழினம் மாறிவிடக் கூடாது என்பதே எமது மேலான கவலைகளில் ஒன்றாக இருக்கின்றது

எழுத்தாக்கம்: காவியா

புறங்காட்டா...

09 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஒன்ராறியோ சட்டசபையில் றூஜ்பார்க் தொகுதி உறுப்பினர் விஜே தணிகாசலம் முன்மொழிந்த தமிழினப் படுகொலை அறிவூட்டல் வாரம் என்னும் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு இம்மாதம் 16ஆம் திகதி எதிர்ப்பேதுமின்றி சகல கட்சிகளினதும் ஆதரவோடு நிறைவேறியுள்ளமை ஒரு வரலாற்று நிகழ்வு. மூன்றாம் வாசிப்பில் இது நிறைவேறுமாயின் சட்டமாகும். இதற்கான பல பின்னணிச் செயற்பாடுகளை இங்குள்ள தமிழ்ச் சமூகம் ஒன்றிணைந்து செயற்படுத்த வேண்டும்.

என்ன காரணமோ தெரியாது கனடிய மத்திய அரசு இதுவரை இதுபற்றி எந்த முடிவுக்கும் வருவதாகத் தெரியவில்லை. கனடியத் தமிழர் சமூகம் ஒட்டாவா நாடாளுமன்ற வளாகத்தில் இந்த மாதம் முள்ளிவாய்க்கால் நினைவையொட்டிய இரண்டு நிகழ்வுகளை நடத்தியது.


ஆனால், இனஅழிப்பு என்ற வார்த்தைப் பிரயோகத்தை இவர்கள் தவிர்த்து விட்டதாக சமூகச் செயற்பாட்டாளர்கள் கவலை தெரிவித்தனர். ஒரு நிகழ்வில் தமிழ் மக்களுக்கு நிகழ்த்தப்பட்ட அட்டூழியம் என்று குறிப்பிடப்பட்டதை சிலர் சுட்டியுள்ளனர்.

இனப்படுகொலையையும் இனசங்காரத்தையும் இனம் மீதான அட்டூழியம் என்று குறிப்பிடுவது பெரும் தவறு. இதனை சம்பந்தப்பட்டவர்கள் நினைவில்கொள்ள வேண்டும்.

புறமுதுகுகாட்டி ஓடாது, சங்க காலம் போன்று போர்முனையில் நேருக்கு நேர் நின்று போராடி உயிர் கொடுத்த போராளிகளையும், அப்பாவிப் பொதுமக்களையும் கொன்று குவித்தவர்கள் படுகோழைகள். இவர்களை இயக்கிய சிங்கள அரசும் அவ்வாறானதே.

யுத்தம் மௌனிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் தமிழரின் குருசேத்திரம்.புறமுதுகு காட்டாப் போர்முனையின் நடுகல்லாக விளங்குகிறது முள்ளிவாய்க்கால்.

இந்தியன் 2 வெளிவருமா? முயற்சிகளைக் கைவிடாத ஷங்கர்



தமிழ் சினிமாவின் கிளாஸிக்காக கொண்டாடப்படும் இந்தியன் படத்தின் இரண்டாம் பாகம் கைவிடப்பட்டது என செய்திகள் வெளி யாகி வரும் நிலையில், இயக்குநர் ஷங்கர் இந்தியன் 2 படத்தை முன்னெடுக்க புதிய முயற் சிகளை மேற்கொண்டு வருகிறார்.


லைக்கா நிறுவனத்தின் தயாரிப்பில் கமல்ஹாசன், காஜல் அகர்வால் நடிக்க பிரம்மாண்டமாக உருவாகயிருந்தது 'ங்கரின் இந்தியன் பார்ட் 2. இதன் முதல்கட்டப் படப்பிடிப்பு சிறிது நாட்களே நடைபெற்ற நிலையில் நடிகரும் மக்கள் நீதிமன்ற கட்சித் தலைவருமான கமல்ஹாசன், மக்க ளவை மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் கவனம் செலுத்த தொடங்கினார். அதனால் அவரது கால்ஷீட் கிடைக்காமல் இந்த படத்தின் படப்பிடிப்பு தள்ளி வைக்கப்பட்டது.

அதே சமயம் அதிக பட்ஜெட் மற்றும் கமல்ஹாசனின் கால்ஷீட் போன்ற காரணங்களால் லைக்கா நிறுவனம் தயாரிப்பிலிருந்து பின்வாங்கி விட்டதாகச் செய்திகள் வெளியாகின. ஷங்கர் அடுத்த படம் இயக்கவுள்ளார், இந்தியன் 2 கைவிடப்பட்டது என வதந்திகள் பரவத் தொடங்கின.

இந்நிலையில், இந்தியன் 2 படத்தின் முழு திரைக்கதை மற்றும் தகவல்கள் அடங்கிய ஒரு புத்தகத்தை ஷங்கர் தயாரித்துள்ளார். இந்த புத்தகத்தில் படத்தின் காட்சி அமைப்புகள், தேவைப் படும் பட்ஜெட் என அனைத்து தகவல்களும் காட்சி ரீதியான விளக்கத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக ஹாலிவுட்டில் மட்டுமே பின்பற்றப்படும் இந்த நடைமுறையை, 'ங்கர் இந்தியன் 2வின் பட்ஜெட் மற்றும் உழைப்பை கருதி முன் தயாரிப்புகளுடன் திட்டமிட்டுள்ளார். மெகா பட்ஜெட் என்பதால் இந்த புத்தகத்தை ரிலையன்ஸ், சன் பிக்சர்ஸ் ஆகிய இரண்டு நிறுவனங்களிடமும் 'ங்கர் கொடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும் அவர் அத்தயாரிப்பு நிறுவனங்களின் பதிலுக் காகக் காத்திருப்பதாகவும் திரை வட்டாரங்கள் கூறுகின்றன.

விஜய்யின் 'தளபதி 63' திரைப்படத்தின் தலைப்பு அறிவிப்பு



அட்லி இயக்கத்தில் நடிகர் விஜய் நடிப்பில் உருவாகி வரும் திரைப்படத்திற்கு தற்காலிகமாக 'தளபதி 63' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வரும் நிலையில், படத்தின் தலைப்பு மற்றும் ஃபெர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியீடும் அறிவிக்கப்பட்டுள்ளது.


படத்துக்கான பெயரை படக்குழுவினர் தேர்வு செய்து விட்டதாகவும் விஜய்யின் பிறந்தநாளை முன்னிட்டு ஜூன் 21ஆம் திகதி படத்தின் தலைப்பு, first look poster என்பன வெளியாகவுள்ளது.

'தளபதி 63' படத்திற்கு 'வெறி', 'வெறித்தனம்', 'மைக்கேல்', 'கப்டன் மைக்கேல்' உள்ளிட்ட பெயர்களில் ஒன்றை தலைப்பாக அறிவிப்பார்கள் என்று சமூக வலைதளங்களில் தெரிவிக்கப்ப ட்டுள்ளது. விளையாட்டை மையப்படுத்தி உருவாகும் இந்த படத்தில் விஜய் மைக்கேல் என்ற கதாபாத்திரத்தில் கால்பந்தாட்ட பயிற்சியாளராக நடிக்கின்றார். விஜய்க்கு ஜோடியாக நயன்தாரா முக்கிய கதாபாத்தில் நடிக்கின்றார்.

இவர்களுடன் கதிர், ஜாக்கி ஷெராப், இந்துஜா, ரெபா மானிகா, வர்'ா பொல்லாமா, விவேக், யோகிபாபு, டேனியல் பாலாஜி, ஆனந்தராஜ், தேவதர்ஹினி, ஞானசம்பந்தம் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர்.

ஏ. ஜி .எஸ். என்டர்டெயின்மெண்ட் தயாரிக்கும் இந்த படத்திற்கு ஏ. ஆர். ரஹ்மான் இசையமைக்கின்றார். இத்திரைப்படம் தீபாவளிக்கு வெளியாகவுள்ளது.

'லாபம்' திரைப்பட முதற்கட்ட படப்பிடிப்பு நிறைவு



நடிகர் விஜய் சேதுபதி – சுருதி ஹாசன் நடிப்பில் உருவாகிவரும் 'லாபம்' திரைப்படத் தின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.


முதற்கட்ட படப்பிடிப்பு முடிந்துவிட்டதாக படக்குழு அறிவித்துள்ளதுடன் அடுத்த கட்டப் படப்பிடிப்பு விரைவில் ஆரம்பமாகவுள்ளது என தெரிவித்துள்ளது.

விஜய் சேதுபதியின் சொந்த தயாரிப்பு நிறுவனமான விஜய் சேதுபதி புரொடக்ஷன்ஸ் மற்றும் இயக்குநர் ஆறுமுக குமாரின் 7சி.எஸ். எண்டர்டெயின்மெண்ட் இணைந்து தயாரிக்கும் புதிய படத்தை எஸ்.பி.ஜனநாதன் இயக்குகிறார்.

'லாபம்' என்று தலைப்பு வைக்கப்பட் டுள்ள இத்திரைப்படத்தில் ஜெகபதிபாபு, கலையரசன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.

டி. இமான் இசையமைத்துள்ள இத்திரைப்படம் அதிரடியான ஆக்ஷன் காட்சிகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

தென்னிந்திய நடிகர் சங்கத் தேர்தலை நடத்த தீர்மானம்



தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தேர்தலை நடத்த அச்சங்கத்தின் செயற்குழு ஒப்புதல் அளித்து ள்ளது.

அந்தவகையில், இந்த தேர்தலை நடத்த ஓய்வு பெற்ற நீதிபதி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அதேநேரம் சங்கத்தின் அவசர செயற்குழு சென்னையில் நேற்று நடைபெற்றது. நாசர் தலை மையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வி'ால், கார்த்தி, கருணாஸ், பொன்வண்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது சங்கத்துக்கு தேர்தலை நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. பெரும்பான் மையான உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்ததால், தேர்தலை நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது. மேலும், இதற்கும் செயற்குழு ஏகமனதாக ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றியது.

முள்ளிவாய்க்காலின்...

05 ஆம் பக்கத் தொடர்ச்சி

இது ஐன்ஸ்டீனுக்குக் கிடைத்த ஒரு பெரு வெற்றியாகும்.

இவ்வாறு அறிஞர்களும் விஞ்ஞாகளும் தமது தேசத்துக்கான பணியை திடசித்தத்துடன் ஆற்றியதன் விளைவாக யூத அரசை உலக அரங்கில் ஸ்தாபிக்கவும், நிலைநிறுத்தவும் முடிந்தது.

இவ்வாறு உலக நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கு விடுதலைக்காகப் போராடும் இனம் சலிக்காது, அலுக்காது இடையறாது செயற்பட்டு வெற்றியீட்ட வேண்டும். ஈழத் தமிழர்கள் தரப்பில் இத்தகைய சிந்தனை முதன்மைபெற வேண்டியதும், செயற்பாட்டிற்கு உரியதாக வேண்டியதும் அவசியமானது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை முடிவடைந்து 10 ஆண்டுகள் ஆகும் இவ்வேளையில் இதனை முன்னெடுப்பதில் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்த் தலைவர்கள் என்போர் எத்தகைய பங்கையும், பாத்திரத்தையும் வகித்ததாக இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்த் தலைவர்களாக கடந்த 10 ஆண்டுகளாய் தலைமை தாங்கி வருகின்றனர்.

அவர்கள் மேற்படி முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை ஒரு முதலீடாகப் பயன்படுத்தி விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்குப் பதிலாக "இன நல்லிணக்கம்", "நல்லாட்சி" என்பதன் பேரில் இனப்படுகொலை புரிந்த சிங்கள அரசுடன் கூட்டுச் சேர்ந்து சிங்கள அரசிற்கு சாதகமாகச் சர்வதேச ஆதரவைத் தேடிக் கொடுத்துள்ளனர்.

இப்பின்னணியில் சர்வதேச அரசுகள் தமிழ் மக்களுக்கான நீதியை வழங்க தயாரில்லையென்றும், அவை தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள அரசுடன் இணைந்து செயற்படுகின்றன என்றும் குறைகூறும் ஒரு போக்கு காணப்படுகிறதே தவிர அதற்கு மாறாக இனப்படுகொலையை சர்வதேச அரங்கில் முன்னெடுத்து தமிழ் மக்களுக்கான விடுதலையை முன்னெடுக்கும் தலைமை தமிழ் மக்களிடம் இல்லை என்பதையும் அத்தகைய செயற்பாட்டை சர்வதேச அரங்கில் தமிழ்த் தரப்பு கொண்டிருக்கவில்லை என்பதையும் விடுதலை விரும்பிகள் பெரிதும் கருத்தில் எடுக்க வேண்டியது அவசியம்.

இனப்படுகொலைக்கு நீதி கேட்கும் கொள்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இல்லை.

தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு விட்டதாக அறிவித்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது சிங்கள அரசுடன் சேர்ந்து நல்லிணக்கம் காணவேண்டும் என்ற கொள்கையைத்தான் முன்வைத்திருக்கின்றது.

இத்தகைய நல்லிணக்கக் கொள்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்திருக்கும் நிலையில் சர்வதேச சமூகம் தமிழ் மக்களுக்கான விடுதலையை நோக்கி அடியெடுத்து வைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

அவ்வாறு இனப்படுகொலைக்கு எதிரான நீதியை முன்வைத்து, அதற்குத் தீர்வாக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பொதுவாக்கெடுப்பு என்ற கொள்கைகளை முன்நிறுத்தி ஜனநாயக ரீதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது களத்தில் நின்று போராட வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக நிகழ்ந்த மக்கள் மட்டத்திலான சிறு சிறு போராட்டங்கள் எதுவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்னெடுக்கப்பட்டவைகள் அல்ல. மாறாக காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடல் போன்ற கோரிக்கைகளுடன் மேற்படி சம்பவங்களால் நேரடியாக பாதிக்கப்பட்ட குறித்த மக்கள் தன்னியல்பாக முன்னெடுக்கும் போராட்டங்கள் மட்டுமே நிகழ்ந்துள்ளன.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போராட்டங்களை முன்னெடுக்கவில்லை என்பது மட்டுமின்றி அதற்கு மாறாக சிங்கள ஆட்சியாளர்களுக்கு முண்டுகொடுக்கும் பணிகளையே செய்து வருகிறது.

இந்நிலையில் சர்வதேச சமூகத்தை போராட்டத்தின் மூலம் நெருக்கடிக்கு உள்ளாக்கி தமிழ் மக்களுக்கான உரிமையை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு தமிழ்த் தரப்பின் மத்தியிலேயே உண்டு.


ஆனால் அதைத் தமிழ்த் தரப்பிற்கு தலைமை தாங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறவே செய்யத் தவறியுள்ளது என்ற யதார்த்த உண்மையில் இருந்து தமிழ் மக்கள் கடந்த 10 ஆண்டுகளாய் வெறுங்கையோடு நிற்கும் பரிதாபத்தை புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் போராட மாட்டார்கள் என்ற முடிவு தெளிவான நிலையில் மாற்றுத் தலைமையை உருவாக்க முற்பட்ட தலைவர்கள் ஒரு பலம் பொருந்திய மாற்றுத் தலைமையை உருவாக்குவதற்குப் பதிலாக தங்களுக்குள் தாங்களே மோதுண்டு கிடப்பதன் மூலம் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலமுள்ள சக்தியாக களத்தில் காட்சியளிக்கச் செய்கிறார்கள். இது ஒரு பாரதூரமான வரலாற்றுத் தவறாகும்.

முள்ளிவாய்க்கால் பத்தாவது ஆண்டு நினைவேந்தல் நாளில் கருத்தில் கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் முள்ளிவாய்க்காலின் பின்னான துயரகரமான பத்தாண்டு தோல்வியின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முற்றாக நிராகரித்து ஒரு பலம் பொருந்திய மாற்றுத் தலைமையை உருவாக்க உறுதிபூண வேண்டும்.

அவ்வாறு ஒரு பலம்பொருந்திய தலைமை களத்தில் இல்லாமல் எந்தவொரு சர்வதேச அரசையும், சர்வதேச சக்தியையும் கையாள முடியாது.

அவ்வாறு சர்வதேச சக்திகளைச் சாதகமாகக் கையாளாமல், அவற்றின் அனுசரணை இல்லாமல் விடுதலை என்பது ஒருபோதும் சாத்தியப்படாது என்பதை மேற்கண்ட இன விடுதலைகளின் வரலாறு நிரூபித்து நிற்கின்றது.



நாணயம்

சிறுகதை

காலை நேர நெரிசலில் குமார் பஸ்ஸில் ஏறினான்.

தினமும் பைக்கில் அலுவலகம் சென்று வருபவன், அன்று வண்டியை சர்வீஸுக்கு விட்டதால் வேறு வழி இல்லாமல் பேருந்து பயணம்.

அன்று நல்ல முகூர்த்த நாள் வேறு. பேருந்தில் உட்காரக் கூட இடம் இல்லாமல் நின்று கொண்டே வந்தான்.

'டிக்கெட், டிக்கெட்' என்றபடி நடத்துநர் வந்தார். குமார் பத்து ரூபாய் தாளை கொடுத்து "முனிசிபல் ஆபீஸ் ஸ்டாப் கொடுங்க" என்றான்

நடத்துநர் டிக்கெட்டையும், மீதி சில்லறையும் கொடுத்தவாறு கூட்டத்தில் முன்னே நகர்ந்து விட்டார். குமார் சில்லறையை எண்ணி பார்த்த போது, ஒரு பத்து ரூபாய் தாளும், இரண்டு ரூபாய் நாணயமும் இருந்தது.

நடத்துநர் பத்து ரூபாய் தாளை, இருபது ரூபாயாக எண்ணி, எட்டு ரூபாய் சீட்டுக்கு மீதம் பன்னிரண்டு ரூபாய் கொடுத்திருப்பார் என்று நினைத்தவன், நடத்துநரிடம் பாக்கியை கொடுத்து விடலாமா என்று எண்ணினான்.

ஆனால் மறுகணமே, இன்று பஸ்ஸில் வந்ததும் லாபம்தான் என்று சில்லறையை பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

அன்று மாலை வீடு திரும்பிய வனை வாசலில் மலர்ச்சியுடன் வரவேற்றனர் மனைவி சுமதியும், ஏழு வயது மகள் தாரிகாவும்.

"என்னங்க உங்க மகள் பண்ண நல்ல காரியத்தை கேளுங்க" என்ற சுமதியிடம், தாரிகா "இரும்மா, நான் சொல்றேன்" என்று ஆரம்பித்தாள்.

"இன்னக்கு, எங்களுக்கு கிளாஸ்ல கணக்கு பரீட்சை பேப்பர் கொடுத்தாங்கப்பா. என் பேர்ல எனக்கு எழுபது மார்க்தான் வந்துச்சு.

ஆனா மிஸ் பார்க்காமல் எண்பது மதிப்பெண் போட்டிருந்தாங்கப்பா. மிஸ்கிட்ட சொல்லி மாத்திட்டேன். அவங்க என்னை குட் கேர்ள்னு சொன்னாங்க" என்றாள்.

"மார்க் கூட வந்தா என்னம்மா? அதை எதுக்கு கேட்ட?" என்றான் குமார்.


"நம்ம பொருள் நமக்கு கெடச்சா போதும். குறுக்கு வழியில வாங்குறது நிலைக்காதுன்னு நீங்க முன்னாடி எனக்கு சொல்லி இருக்கீங்கப்பா" என்றாள் தாரிகா.

இதைக் கேட்டதும் சவுக்கடி பட்டது போல உணர்ந்தான் குமார்.

– எம். விக்னேஷ்

குறுக்கெழுத்துப் போட்டி

இல. - 538



'கனடா உலகத்தமிழர்' அபிமானிகளே,
இங்கே தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துப் போட்டிக்கான, சரியான விடைகளை எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னதாகக் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும்.
அனுப்பவேண்டிய முகவரி:

705 Progress Avenue, Unit 106, Scarborough, Ontario. M1H 2X1

தொலைநகல் இலக்கம்: **416 438 6999**

இடமிருந்து வலம்

01. பார்வதி மைந்தன்
05. பாரமாகு, மிகுதியாகு, மேற்கொள், பளுவைத் தாங்கு
06. மிகுந்திரு, மேலெழும்பு, திரவத்தில் மூழ்காதிரு (தி.உ)
07. மருத்துவ நூல்
09. காவல் செய், பாதுகாப்பு, சோலை, சரஸ்வதி
10. "வெள்ளம் ------ நோக்கிப் பாயும்" (இறுதி எழுத்தில் தவறுடன் கு.உ)
11. மகளிர் காதணி, மேகம் கவிதல், வளர்ச்சி குறைதல், குரல் அடைத்தல்
13. சொறி, அரிப்பு, உணர்ச்சி
15. பூமி
16. திருடிச்செல், மறைதல் செய், கேடுறு (தி.உ)
17. "குடி இருக்க நான் வருவதென்றால் ......என்ன தரவேண்டும்?" (தி.உ)
19. குளிர், பனிக்காற்று, (ஐப்பசி, கார்த்திகை) மாதகாலம் (தி:உ)
21. அழகு, நீர், மேகம் (தி.உ)

மேலிருந்து கீழ்

01. இராமாயணத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரம்
02. சரசுவதிதேவி
03. மேகம், நறுமணப்பொடி, பல்பொருள் கலவை
04. ஒளி, மின்னல் (த.கீ)
08. "..... அமைத்து வைத்த மேடை இணைக்கும் கல்யாண மாலை" (இறுதி எழுத்து குற்றை இழந்து கு.உ)
09. "....... வந்தால் சொல்லியனுப்பு, உயிரோடிருந்தால் வருகிறேன்"
12. மணிமுடி, அலங்காரச்சிகரம், மாதர்காதணி, மத்தள விளிம்பு
14. பாரம், பருமை, இறுமாப்பு (கு.உ)
15. பூமி
17. "கடவுளை நம்பினோர் .... விடப்படார்"
18. ஆசை (த.கீ)
20. பூமி, கூவுதல்

குறுக்கெழுத்துப் போட்டி - 537இற்கான விடைகள்

இடமிருந்து வலம்	மேலிருந்து கீழ்
01. அகத்தியம்	01. அதியமான்
06. தினசரி	02. கனம்
07. மதியம்	03. சமத்துவம்
08. மா	04. திருதியை
09. து(யை)வையல்	05. வல்லியம்
11. வரன்	10. காரியவாதி
13. வரி	12. அரவம்
14. அம்போதி	15. போகம்
16. வதி	16. அதி
17. கவான்	18. மன்
19. அம்	
20. காமம்	

தயாரித்தவர்:
மார்க்கம் சந்திரன் -
416-844-7453

குறுக்கெழுத்துப் போட்டி - 537இற்கு சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

திருமதி வசந்தராதேவி செல்வராசா, திரு. தயாளன் முத்துலிங்கம், திருமதி. நகுலா விவேகானந்தன், திருமதி சிவராணி ஜெயலிங்கம், திரு. க. கனகரத்தினம், திரு. ஆ. கந்தையா, திரு அனலைமணி, திருமதி. நாகேஸ்வரி கைலாசபிள்ளை, திரு. காரை. சு. குலசிங்கம்.


1571 Sandhurst Circle (McCowan& Finch)
woodside cinemas
MAY 16 முதல்
YORK CINEMAS
115 York Boulevard, Richmond Hill, ON L4B 3B4
studio green
K E ஞானவேல் ராஜா
Mr. Local
சிவகார்த்திகேயன்
Mr.லோக்கல்
ராஜேஷ். M
SIVAKARTHIKEYAN . NAYANTHARA
YOGI BABU . RAADHIKA SARATHKUMAR
NARAYAN LUCKY . SATHISH . RJ BALAJI
THAMBI RAMAIYA . ROBO SHANKAR...
Info. 416 266 3456 / Direct: 416 299 1045 | www.yorkcinemas.ca/www.newwoodsidecinema.ca | Info.: 289 809 3456 / Direct: 905 707


1571 Sandhurst Circle (McCowan& Finch)
woodside cinemas
2nd Successful Week
YORK CINEMAS
115 York Boulevard, Richmond Hill, ON L4B 3B4
LIGHT HOUSE
Movie Makers
Cast:
VISHAL
RAASHI KHANNA
R. PARTHIBAN
K. S. RAVIKUMAR
DEVADARSHINI
VAMSI KRISHNA
POOJA DEVARIYA
SONIA AGARWAL
SANA KHAN
ARJAI
and others...
AYOGYA
அயோக்யா
கதை திரைக்கதை இயக்கம் : வெங்கட் மோகன் . இசை : சாம் C.S.
Info. 416 266 3456 / Direct: 416 299 1045 | www.yorkcinemas.ca/www.newwoodsidecinema.ca | Info.: 289 809 3456 / Direct: 905 707

மோட்கேஜ்



புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

MORTGAGE

T.NESAN
416-908-5656

Residential / Commercial / Industrial / Investment Properties

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment, Pre-approval
- Home Equity Loan

1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
698,000	659.62	1319.25	1429.19	2858.37

1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
698,000	765.04	1530.08	1657.59	3315.17

1st Private Mortgage ('C' lender) Private lender

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
698,000	1059.81	2119.62	2296.26	4592.52

2nd Mortgage ('B', 'D' lender) Private, Under write Banks

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
98,000	179.15	358.29	388.15	776.30

3rd Mortgage ('E' lender) Private lender

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
49,000	113.72	227.43	246.39	492.77

Secure Line of Credit & Loan

Mortgage Amount	Secure Line of Credit	Home Equity Loan
225,000	1005.95 / per month	1276.51 / per month

WE DEAL WITH ALL BANKS

TD Canada Trust · Scotiabank · Street Capital Bank of Canada · radius financial · First National Financial LP · Equitable Bank · Home Trust · B2B Bank · RMG mortgages · MCAP

SUBRA MORTGAGE FINANCIAL

mortgage@nesan.ca
www. nesan.ca

Mortgage Alliance
Brokerage # 10530
* Independently Owned and Operated

1585 Markham Rd, Unit # 407, Toronto, ON. M1B 2W1

Office: 1-844-878-2721 | Fax: 647-351-3099













See Page - 17

Albert Campbell Square
(Scarborough town Centre)

அல்பேர்ட் காம்பல் சதுக்கதில்

தமிழின அழிப்பு நினைவு நாள்

மே 18, சனிக்கிழமை மாலை 5:00 மணி

தமிழின அழிப்பின் 10ஆம் ஆண்டு நினைவு நாள்

We, Canadian Tamils request the Government of Canada and the International Community:

To 1. recognize that war crimes committed against the Tamil people in Sri Lanka constitute of genocide;

To 2. recognize that May 18th every year, as 'Tamil Genocide Remembrance day';

To 3. take effective and prompt action to officially investigate genocidal crimes through appropriate International Judicial Mechanisms and hold the perpetrators accountable;

To 4. recognize the Tamil Nation and protect the survivors in order to prevent the continuity of the structural genocide in Sri Lanka.

கனடியத் தமிழர்களாகிய நாங்கள் கனடிய அரசாங்கத்தையும் சர்வதேச சமூகத்தையும் வேண்டுவது:

1. தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற போர்குற்றங்கள், இனஅழிப்பு என்பவற்றை அங்கீகரிக்குமாறும்,
2. மே 18ஐ 'தமிழ் இனஅழிப்பு நாள்' எனப் பிரகடனப்படுத்துமாறும்,
3. இலங்கையில் இடம்பெற்ற தமிழின அழிப்பின் சூத்திரதாரிகளை, ஆக்கபூர்வமானதும் முறையானதுமான அனைத்துலக விசாரணைப் பொறிமுறையூடாக பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்குமாறும்,
4. தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதை அங்கீகரிப்பதுடன், தொடர்ச்சியாக இடம்பெறும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பிலிருந்து தமிழ் மக்களை காப்பாற்றுமாறும் வேண்டிக்கொள்கின்றோம்.

MAY 18

TAMIL GENOCIDE
Remembrance Day

முள்ளிவாய்க்கால் உறவுகளுக்கு நினைவுத் தீபம் ஏந்துவோம்

கனடியத் தமிழர் சமூகம்
கனடியத் தமிழ் மாணவர் சமூகம்

www.tamilsgenocideday.com

தொலைபேசி
416 830 7703